Office of the Registrar of
Books & Newspapers,
21 JAN 1954
CEYLON.

வாரப் பதிப்பு விலை சதம் 10

சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO- 12

புத்தகம் 7 விஜய வரு தை மீ 4உ [17-1-54] ஞாயிற்றுக்கிழமை ஜமாதுல் அவ்வல் பிறை 11 இதழ் 33

BEREC
TRADE MARK

ப்ளாஷ் லேட் பெரெக் பட்டரிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டவை.

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

சங்கிலியன் நாடகம் இராணி பார்ப்பதற்கு தகுதியற்றதா?

தமிழ்மன்னர் சிறப்பைக்காட்டினால் தமிழ் அரசு கோரிக்கை பலக்குமாம்!

இலங்கைக் கலைச்சங்கத்தின் விபரீத முடிவு: தமிழ் மக்கள் கிளர்ச்சி செய்து மாற்றம் தேடவேண்டும்

(நமது நிருபர்)

இலங்கை அரசாங்கத்தின் தமிழ் நாடகக் குழு சமீபத்தில் செய்திருக்கும் ஒரு முடிவினால் தமிழ் மக்கள் பெரும் கவலையும் ஏமாற்றமும் அடைந்திருப்பதாகத் தெரிகிறது.

எலிஸபெத் மகாராணி இலங்கைக்கு விஜயம் செய்யும்போது அவர் முன்னிலையில் ஒரு தமிழ் நாடகமும் நடித்துக் காண்பிப்பதென ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கு பொருத்தமான நாடகமாக இலங்கைப் பின்னணியில், இலங்கைத் தமிழ் மக்களின் பண்டைப் பெருமையையும், வீரத்தையும், சுதந்திர தாகத்தையும் சித்தரிப்பதான வீர சங்கிலியனின் கதை முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆனல் பின்பு இந்த அருமையான நாடகம் கைவிடப்பட்டு "காலவரிஷி" என்றெரு நாடகம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த மாதிரியான மாற்றத்திற்கு அரசாங்கத்தின் மறைமுகமான தலையீடே காரணம் என்று நம்பப்படுகிறது.

இலங்கை தமிழ் சங்கத்தின் தமிழ் நாடகக் குழுவிற்கு பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி கே. கணபதிப்பிள்ளை தலைவராகவும், இலங்கை வானெலியின் தமிழ் நாடகப் பகுதி அதிகாரி திரு. எஸ். சண்முகநாதன் காரியதரிசியாகவும் கடமையாற்றுகின்றனர். இக் குழு முதலில் கூடி கலாநிதி கணபதிப் பிள்ளை எழுதிய சங்கிலியன் என்ற நாடகத்தையே அரங்கேற்றுவதாக முடிவு செய்தது. இந்நாடகம் கொழும்பிலும், கண்டியிலும் பல்கலைக் கழக மாணவர்களால் நடிக்கப்பட்டதென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்,

ஆனல் பின்பொருமுறை கூடியபோது சங்கிலியன் என்ற நாடகத்தைக் கைவிடுவதென்றும் அதற்குப் பதிலாக இந்தியாவின் வடநாட்டைப் பின்னணியாகக் கொண்ட ஒரு புராணக் கதையை நடிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கதையின் பெயர் "காலவரிஷி" என்பது. இது ராவ்பகதூர் சம்பந்த முதலியாரால்எழுதப்பட்டதாகும்.

சங்கிலியன் கைவிடப்பட்டதற்கு அரசாங்கத்தின் மறைமுகமான தலையீடே காரணம் என்ற வதந்தி பலமாக அடிபடுகிறது: தமிழர் பண்பாட்டையும், தமிழரின் தனியரசையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதனல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளர்ச்சிக்கு பக்கபலமாக அது அமைந்து விடும் என்றும் வெள்ளைக்காரர் தமிழ் மன்னனல் அடித்துத் துரத்தப்படுவதை மகாராணி கண்டு மனச் சங்கடப் படுவார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டதாம். ஆனல் இந்த விவரம் எதுவும் வெளிப்படையாகப் பேசப்படவில்லை. ஒரு தமிழ் மந்திரியின் மூலம் தமிழ் நாடகக் குழுவில் சம்பந்தப்பட்ட ஒரு சிலரை கைக்குள் வைத்துக் கொண்டு சங்கிலியனுக்கு எதிராக சதி செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது.

சங்கிலியன் தகுதியற்றதெனக் கண்டால் தமிழ் நாட்டைப் பின்னணியாகக் கொண்ட வேறெரு நாடகத்தை தெரிந்திருக்கலாகாதா என்று பலர் கேட்கின்றனர். எல்லாளனின் ஆட்சியைக் காட்டியிருக்கலாம். குமணனைச் சித்திரித்திருக்கலாம், சங்க நூற் காட்சிகளை அமைத்திருக்கலாம் திரு சி ஆ பெ. விசுவநாதத்தின் "தமிழர் பண்பு" என்ற பிரபல நாடகத்தை அரங்கேற்றியிருக்கலாம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

கலாநிதி கணபதிப் பிள்ளை போன்ற ஒருவர் சங்கிலியனைக் கைவிட்டு 'காலவரிஷி' யை ஏற்றுக்கொண்டது பெரிதும் ஏமாற்ற மளிப்பதாகும் என்றும், தமிழன் பெருமை ஒடுக்கப் படுவதைக் கண்டபோதே அவர் தமிழ் நாடகக் குழுவின் தலைவர் பதவியை ராஜினமாச் செய்திருக்க வேண்டும் என்றும் வேறு சிலர் ஆத்திரப்படுகின்றனர்.

திரு சண்முகநாதன் ஒரு பிரபல நடிகர் என்பது யாவரும் அறிந்ததே. அவர் 'காலவரிஷி' யெனும் நாடகத்தில் தம்மால் நடிக்க முடியாதென்று சொல்லி வெளியேறி விட்டதாகத் தெரிகிறது. இது பாராட்டத்தக்க நடவடிக்கையாகும் என்று அபிப்பிராயம் தெரிவித்தவர்கள் கூறினர்.

இலங்கை கலைச் சங்கத்தின் இந்த விபரீத முடிவு சம்பந்தமாக நமக்கு பல கடிதங்கள் வந்துள்ளன. அவற்றில் ஒன்றைக் கீழே தருகிறோம்:

கடிதம்

"எமது இலங்கைக் கலைச் சங்கத்தின் தமிழ்நாடகக் குழு மகாராணி எலிசபெத்தின் விஜயத்தையொட்டி சங்கிலியரசன் கதையை நடிக்கப் போவதாக சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளிவந்தது. இப்போது அதனைக் கைவிட்டு "காலவரிஷி" என்னும் நாடகத்தை நடிக்க அக்குழு தீர்மானித்திருப்பதாகவும் அந்நாடகத்தில் வரும் பிரதான பாசுங்களை அக்குழுவில் உள்ள ஒரு சிலரே தமக்கிடையே பகிர்ந்து கொண்டுவிட்டதாகவும் அறிகிறேன்.

இலங்கைக் கலைச் சங்கமும் அதன் ஒரு பிரிவாகிய தமிழ் நாடகக் குழுவும் இலங்கைப் பொதுஜனங்களின் பணத்தைக்கொண்டு இயங்குவன; எனவே அவற்றின் கருமங்களை மிகவும் நுணுக்கமாகக் கவனித்து, வேண்டிய வேண்டிய காலங்களில் அவற்றைக் கட்டுப்படுத்துவது தமிழ்ப் பொதுசனங்களின் கடமையாகும். இக்கடமையை நம்மவர் கண் விழிப்புடன் இருந்து செய்து வரத் தவறியதன் காரணத்தினுலேயே ஒருசிலர்—கலைக்கும் கத்தரிக்காய்க்கும் வித்தியாசம் காணமுடியாத கலைவாணர்கள்—அக்குழுவுக்குள் நுழைந்து ஈழத் தமிழ இனத்தின் கலைக்கும் பண்பாட்டுக்கும் பங்கம் தர முனைந்திருக்கிறார்கள்;

தமிழ் நாடகக் குழு இப்போது தெரிந்திருக்கும் "காலவரிஷி" நாடகம் எந்தவிதத்தில், பொதுவாகத் தமிழனதும் சிறப்பாக ஈழத் தமிழனதும் பண்பாட்டை எடுத்துக் காட்ட வல்லது என்று இக்

(9-ம் பக்கம் பார்க்க)

குறைந்த செலவில் கூடிய உற்பத்திக்கு
உங்கள் தோட்டங்களை இயந்திர மயமாக்க

பெர்குஸன்

ட்ராக்டர்கள் இயந்திர உபகரணங்கள்

ட்ராக்டர்கள் இயந்திர உபகரணங்கள்

வாங்குவதற்கு மலிவானது

இலகுவாக உபயோகிக்கக் கூடியது. திறமைவாய்ந்த நிபுணர்களின் உதவி என்றும் உத்தரவாதம் செய்யப் படுகிறது.

இலங்கையில் பெர்குஸன் உற்பத்திகளுக்கு ஏக வினியோகஸ்தர்களான கீழ்க் கண்டவர்களிடம் விபரங்களைக் கேட்டுக் கொள்ளவும்.

பிரவுண் அன் கம்பெனி லிமிட்.,
விவசாயப் பிரிவு.
யூனியன் பிளேஸ், கொழும்பு.

வடமாகாணத்தில் அதிகாரம்பெற்ற வியாபாரி:
ஆர்ன்கோ,
ரெட்ரிகோ ரோடு—பரந்தன்.

கீழ்மாகாணத்தில் அதிகாரம்பெற்ற வியாபாரி,
எ. பி. ஸி. ஏ. எஸ்.
யூனியன் லிமிட்டெட்,
மட்டக்களப்பு.

அரசினர் பாடநூல் பிரசுர சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட
தமிழ் மொழி விளக்கம்
(Language & Composition)
எட்டாம் வகுப்புத் தகுதித் தேர்வு, G. C. E., H. S. C. தேர்வுகள் ஆசிரியர் கலாசாலைப் பிரவேசத் தேர்வு, மற்றும் அரசினர் தேர்வுகளுக்குரிய தமிழ்ப் பாஷை முழுப் பாட திட்டத்தையும் தழுவி, ஏற்ற அபிப்பிராயங்களுடன் ஆக்கப்பட்ட
புதிய தமிழ் மொழிப் பயிற்சி
ஆக்கியோன்
க. கயிலாயநாதன் B. A.
(உதவிஅதிபர் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி சித்தன்கேணி)
பேராசிரியர் மு. வரதராசன் M. A., M. O. L., Ph. D. அவர்களதும் யாழ்ப்பாணம்சைவாசிரியர்கலாசாலையின் இளைப்பாறிய அதிபரும்அரசினர்மொழிக்குழு(தமிழ்)மேற்பார்வையாளருமான
சி. கணபதிநாதன் B. A. அவர்களதும்
மதிப்புரைகள் அடங்கியது.
விலை ரூபா 3-50. தபால் செலவு 35 சதம் வேறு.
ஆக்கியோனிடம் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில ஆக்கிரமிப்பை அங்குலமங்குலமாக எதிர்த்த வீர கட்டபொம்மன்

காடும் மேடும் நாடும் கடந்து வீரப்பொங்கெரி மூட்டிய முதல் சுதந்திரவீரன்

சற்றில் இனத்துரோகிகளால் கூடி நின்று காட்டிக்கொடுக்கப்பட்டான்

மலர்முகத்தோடு தூக்குமேடையேறிய கட்டப்பொம்மன் போராட்டம் புகட்டும் பாடம்

கெயில் லவ்லேஸ் ஒன்பது வயதுச் சிறுமி இங்கிலாந்தைச் சேர்ந்த விம்பல்டனில் பள்ளி போபவள். கண் தெரியாத குருடு. சமீபத்தில் நடந்த மூன்றாவது ஆண்டு வாசக போட்டியில் வாசிப்பதில் முதலாவதாக தேறினாள்.

பிரான்சிய மக்கள் தம் மன்னனின் கொடுங்கோலாட்சிக் கெதிராகப் புரட்சிசெய்து வெற்றி கண்டனர். தமக்கென ஒரு குடியரசை நிறுவி, எதிர்த்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் போர் புரிந்து வெற்றி முழக்கம் செய்தனர். அமெரிக்க மக்கள் சுதந்திரப் போர் தொடுத்து வெற்றி மூரசு கொட்டினர். அந்தக் காலத்தில் தமிழகத்திலே பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டியக் கட்டப் பொம்மன் தாய்த் திருநாட்டின் சுதந்திரம் காக்கக் கருதி ஆங்கிலேயருடன் போர் செய்துகொண்டிருந்தான்.

ஆங்கிலேய கி. இ. வர்த்தகக் கம்பெனியார் வர்த்தகம் செய்து பொருளீட்டுவதற்காக தென இந்தியாவிற்கு வந்து ஆற்காட்டு நவாப்புக்கு கடனுகப் பொருள் கொடுத்த அவனோடு ஒப்பந்தஞ் செய்து நாட்டிலே வரிவசூலிக்கும் உரிமையைப் பெற்றனர்.

தம் பலத்தைக் கொண்டு சிற்றரசர்களைப் பயமுறுத்தியும் வற்புறுத்தியும் வரி வசூல் செய்தனர். எட்டாயபுரம் எட்டப்பன் முதல் பல பாளையக் காரர்கள் ஆங்கிலேயர்க்கு அடங்கி வரி கொடுத்துவிடுவதாக ஒத்துக் கொண்டனர்.

ஆனல் பாஞ்சாலங்குறிச்சி வீர பாண்டியக் கட்டப் பொம்மன் மாத்திரம் ஆங்கிலேயர்க்கு வரி கொடுக்க இணங்கவில்லை. வெள்ளையர் பயமுறுத்தினர். பயப்படவில்லை மன்னன். தம் முன்னோர்களின் வீரச் செயல்களை எண்ணி பிள்ளை முதலியோர் கோட்டை எண்ணி வீர உணர்ச்சிகொண்டையை விட்டு வெளியேறிவிட்டனர்.

இவர்கள் தப்பிவிட்டதை மறுநாள் அறிந்த பானர்மென், கட்டப் பொம்மனையும், அவர் ஆட்களையும் பிடித்துக் கொடுப்பவர்க்கு நல்ல வெகுமதிகள் கொடுக்கப் படுமென ஏனைய பாளையக்காரர்களுக்கு அறிவித்தான்.

கட்டப் பொம்மன் படைப் பலத்தோடும், சீரும் சிறப்போடும் வாழ்ந்து வந்ததைக் கண்டு பொருமை கொண்டிருந்த எட்டாயபுர மன்னன் எட்டப்பன், ஆங்கிலேயரின் அவ்வறிவித்தலைக் கேட்டு சந்தோஷங் கொண்டான். தன் இனத்தவனை கட்டப்பொம்மனைக் காட்டிக்கொடுத்து ஆங்கிலேயரிடம்பரிசுகளையும், பாராட்டுதலையும் பெற விரும்பினன் அக்குலத் துரோகி. தன் ஆட்களிற் சிலரை கட்டப்பொம்மன் இருக்குமிடமறிந்து வருமாறு மாறுவேடத்தில் அனுப்பினன்.

கட்டப்பொம்மனும் அவர் ஆட்களும் ஒரு பாளையக்காரரின் மாளிகையில் தங்கியிருப்பதாக அறிந்து கொண்டான் எட்டப்பன். தான் கண்டுபிடித்து விட்டதாக ஆங்கிலேயர்க்கு அறிவித்தான். உடன் டல்லஸ் என்னும் ஆங்கிலேயன் தலைமையில் படைகள் எட்டப்பனூர்க்கு வந்தன. எட்டப்பனும் தனது போர் வீரர்களுடன் டல்லஸைக் கூட்டிக்கொண்டு கட்டப் பொம்மன் இருக்குமிடம் நோக்கிச் சென்றான். அங்கு இருபக்கத்தார்க்கும் போர் நடந்தது. கட்டப்பொம்மன் ஊமத்துரையுடனும் இன்னும் சிலருடனும் தப்பித்துவிட்டான் ஆனல் தானுபதிப்பிள்ளையும் இன்னும் சிலரும் பிடிபட்டனர். ஆங்கிலேயர் தானுபதிப்பிள்ளையைச் சிரச்சேதம் செய்தனர்.

ஒரே இனத்திலே பிறந்து, அவ்வினமக்களுடன் வாழ்ந்துவந்த எட்டயபுர மன்னன் எட்டப்பன் கேவலம்! கடல் கடந்து வந்த அந்நியரின் பரிசுகளையும் பாராட்டுதலையும் பெறுதற்காக தம் இனத்தான் ஒருவனையும் அவன் ஆட்களையும் காட்டிக்கொடுத்துப் பரிசுகளும் பாராட்டுதலும் பெற்றான்.

தப்பியோடிய வீரபாண்டியக் கட்டப்பொம்மனும், ஊமத்துரையும் அவர் ஆட்களும் புதுக்கோட்டைக்கடுத்த காட்டில் இருப்பதாக பானர்மென் அறிந்தான். உடன் பானர்மென் புதுக்கோட்டை மன்னன் தொண்டைமானுக்குக் கட்டப்பொம்மனைத் தேடிப் பிடித்துத் தரும்படி கடிதம் எழுதினன். எட்டப்பனைப் போன்ற இவன் மற்றொரு இனத் துரோகி. எட்டப்பனைப் போன்று தானும் காட்டிக்கொடுத்து ஆங்கிலேயரிடம் வெகுமதிகளும் பாராட்டுதலும் பெற எண்ணினன்.

"புதுக்கோட்டை மன்னன் நற்குணமுள்ளவன். அவனிடம் போய் அவன் உதவியையும் பெற்று மீண்டும் ஆங்கிலேயர்க்கெதிராகப் போர் செய்வோம்" என எண்ணிய கட்டப்பொம்மன் தன் ஆட்களுடன் புதுக்கோட்டை நோக்கிச் சென்றார். வழியில் தொண்டைமானல் கட்டப்பொம்மனைப் பிடிக்க அனுப்பப்பட்ட ஆட்கள் வீரபாண்டியனைச் சந்தித்தனர். வீரபாண்டியனிடமும் அவர் ஆட்களிடமும் அவர்கள் நயமாகப் பேசி தம் மன்னனிடம் அழைத்துச் சென்றனர். அவர்களை மிக மரியாதையுடன் வரவேற்ற வஞ்சகக்கார புதுக்கோட்டைத் தொண்டமான்.

உடன் அம்மன்னன், கட்டப் பொம்மனையும் அவர் ஆட்களையும் சிறைப்படுத்தி வைத்திருப்பதாகவும், படையுடன் வந்து பிடித்துக் கொண்டு போகும்படியும் பானர் [illegible]

தியை அறிவித்தபின், தொண்டமான், கட்டப் பொம்மனுக்கும் அவர் ஆட்களுக்கும் நல்லுபசாரங்கள் செய்தும், ஆங்கிலேயரை ஒழித்துக்கட்ட வேண்டிய வழி வகைகளைப்பற்றிப் பேசியும் காலங்கடத்தினன். கட்டப்பொம்மன் அங்கிருந்து போகவேண்டுமென்று கேட்டதற்கும் "போகாதீர்கள் இந்த இடத்தைவிட்டு இனி எங்கு சென்றாலும் எதிரிகள் உங்களைப் பிடித்துவிடுவார்கள். இங்கேயே இருந்து நாம் இருவரும் வேண்டிய காரியங்களைக் கவனிப்போம்" எனக் கூறிப் போக விடாமல் தடுத்து வைத்திருந்தான் அச்சூழ்ச்சிக்காரன்.

குறித்த நாளிலே ஆங்கிலேயப் படைகள் புதுக்கோட்டைநோக்கி வந்தன. நிராயுதபாணிகளாய் நின்ற கட்டப் பொம்மனையும் அவர் ஆட்களையும் ஆங்கிலேயர் கைதுசெய்தனர். அப்போதுதான் வீரபாண்டியன் தன இனத்தானே தன்னிடம் இனிமையாகப் பேசிக் காட்டிக் கொடுத்து விட்டதை அறிந்தார். "நம் இனத்தான் நமக்குத் துரோகம் செய்துவிட்டான்" எனக் கூறி நெஞ்சம் வெதும்பினர்.

கட்டப்பொம்மனைப் பிடித்துக் கொடுத்ததால் தொண்டமானும் பரிசுகள் பல பெற்றான். ஆங்கிலேயர் அவனை வாயாரப் புகழ்ந்தார்கள்.

கட்டப்பொம்மன் விசாரணை செய்யப்பட்டுக் குற்றஞ்சாட்டப் பட்டான். அதற்காக அம்மான வீரனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அஞ்சாமல் அதை வரவேற்று அசதண்டனைக்குள்ளானான் சுதந்திரத்துக்காகப் போர் செய்த செம்மல்.

கண்ணுக்கெட்டா தூரத்திலிருந்து கடல்கடந்துவந்த நாடோடி வெள்ளைக் கும்பலுடன போரிடவும் முடியாமல் கோழைகளாய் அவர்கள் அதிகாரத்துக்கு அடங்கி, தாள்பணித்து கப்பங்கட்டி வாழ்ந்ததுமல்லாமல், அந்நியருக்கு அடிமைப்பட மனமில்லாமல் மானத்துடன் வாழ, சுதந்திரமாய் மாழ ஆங்கிலேயருடன் போர் செய்த தன் இனத்தான் கட்டப்பொம்மனுக்கு உதவியளிக்காது அவனோடு நயமாகப் பேசி, அவ்வீரனைக் காட்டியல்லவா கொடுத்துவிட்டார்கள் இனத் துரோகிகளான, எட்டப்பனும், தொண்டைமானும்; நயவஞ்சகர்கள்! சூழ்ச்சிக்காரர்கள்!

மரத்திலே தூக்கப்பட்ட மாவீரன் கட்டப்பொம்மனின் உயிரற்ற உடலைக் கண்டு உள்ளம் உவகை கொண்டிருப்பர் அவ்வினத் துரோகிகள். கட்டப்பொம்மனைக்காட்டிக்கொடுத்த பெருமை தமக்கே உரியதென வீராப்புக் கொண்டிருப்பர்.

இவ்வித இன உணர்ச்சியற்ற இனத் துரோகக் கூட்டம் ஓர் இனம் அழிய, அவ்வினத்தின் மொழியழிய, புகழ் மங்க எதுவாயிருக்கிறது

The Doctor,
St. Mary Medical Hall,
COLOMBO.

T. U. R. Naido,
Wana Raja Group,
DICKOYA.
18th October 1953.

கனம் டாக்டர் அவர்களுக்கு,

ஐயா! கடந்த சுமார் ஒரு வருட காலமாக நான் அநேக மருந்துகள் சாப்பிட்டும் பயனில்லாமல் எனக்கு நடக்கவும், உட்கார்ந்து எழுந்திருக்கவும் சரியாக முடியாமல் கஷ்டப்பட்ட இடுப்பு வலி முதலிய வாய்வுகளின் உபத்திரவங்கள் தாங்கள் அனுப்பிய பேதிமாத்திரையும் 24 நாளுக்கு சாப்பிடும்படியான வலியாங்காடி லேகியமும் சாப்பிட்டு 5 நாட்களில் பூரண குணமடைந்தேன். ஆதலால் தங்களின் மேலான மருந்துக்காக எனது மனமுவந்த நன்றியை என்றும் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

வணக்கம்.

சென்ற் மேரி வலியாங்காடி லேகியம்

வாதம் 80க்கும், அதனால் உண்டாகும் நோய்கள், பலவித குணங்களில் காணும் வாதம், முடக்குவாதம், நடுக்கு வாதம், விஷ வாதம், இளம்பிள்ளை வாதம், ஸ்தம்பனவாதம், சந்தவாதம், அண்டவாய்வு, ஆந்தர வாய்வு, வெதர்விக்கம், கை, கால், சந்து உழைச்சல், கை, கால், தோள், மொழிகள், உழைச்சல், மலசலம் சரியாய் போகாமல், நெஞ்செரிவு, அஜீரணம், சொறி, சிரங்கு, அரிப்புள்ள கிரந்திகள், ஊரல், தடிப்பு, கால் எரிச்சல், கை, கால், முழிகள் விக்கம், கெட்ட நீர்கள், தேகத்தில் உண்டாகும் கறுப்புகள், அரிப்புள்ள தேமல், கை, கால், விரல்கள் சொத்தை மேற்குறிப்பிட்ட வியாதிகளால் கஷ்டப்படுவோர்கள் அற்புதமான சுகத்தைக் கொடுக்கும் சென்ற் மேரி வலியாங்காடி லேகியம் சாப்பிட சுகமாகும்.

எங்கள் மருந்துகளை விரும்பும் அன்புடையோர்கள் தங்கள் நோய்களை குறிப்பிடவும். தக்க மருந்துகள் அனுப்பப்படும். விலாசம் சரியாக எழுதவும்.

பெரிய புட்டி ஒன்று விலை ரூ. 8-5
சிறிய புட்டி ஒன்று விலை ரூ. 4-50

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி வைத்தியசாலை,

201, செட்டியார் தெரு, கொழும்பு-11.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நிரேகம் கார்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் நீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" மதயதது வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00. வி.பி.பி. செலவு வேறு

புரோப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அருளொழுகும் கண்ணைப் பார்! அழகு மேனியைப் பார்! ஒளி தவழும் முகத்தைப் பார்! எங்கள் உத்தமரைப் பார்!'
என்று காங்கிரஸ்காரர்கள் என்னை அழைக்க வேண்டாமா?

மாற்றார்மதிக்கும்தொண்டினால்தான் மகாத்மா உலகத்தின் ஒளியானார்

அயலான்வீட்டு நுமல்லிகையென்றால் அதற்கு மணமில்லையென்று கூறுபவனல்ல நான்

வேலூர் காந்தி சிலையைத் திறந்துவைத்து அண்ணாத்துரை ஆற்றிய சொற்பொழிவு

உத்தமர் காந்தியார் வெறி கொண்ட ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனும் செய்தியை வானொலிமூலம் கேட்டேன். பதறினேன். அப்போது என்னை வானொலி நிலையத்தார் ஆழைத்தார்கள். என் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு என் கருத்தை எடுத்துச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். காந்தியடிகளைக் கொன்றவன் மராத்தியப் பார்ப்பனனென்ற கோட்சே என்பவன். அதனால் இந்தும் பார்ப்பனரல்லாத மக்களின ஆத்திர வெறி பார்ப்பன குலத்தார்மீது பாய்ந்துவிடுமோ என்று ஆசியாளர் அஞ்சினர். அதனாலேயே என்னை அழைத்து எம் கட்சி அனுதாபிகளைச் சாந்தப்படுத்தும்படி கேட்டுக்கொண்டனர்.

நான் ஒரு கயவனாயிருந்தால், மக்கள் நலத்தையும் தேச நன்மையையும் கருதாத வீணனாயிருந்தால், கட்சி வெறிகொண்ட மூர்க்கனாயிருந்தால் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டில் விபரீதங்கள் பலவற்றை விளைவித்திருக்க முடியும். ஆனால் அப்படிப்பட்ட விபரீதங்களை விளைவித்து கைகொட்டிக் களிக்கும் கேவலமான சுருத்துடையவனல்ல நான்.

'உத்தமரை, ஒருவனின் வெறி கொன்றுவிட்டது; அதற்குப் பார்ப்பன மக்கள்மீது பழிசுமத்தக் கூடாது' என்று எடுத்துரைத்தேன். உத்தமரின் உன்னத சேவைகளை உருக்கமாக எடுத்துரைத்தேன்.

அந்த நிகழ்ச்சி முடிந்த சின்னட்களுக்கெல்லாம் காங்கிரஸ் தேசியக் கவியான நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை என்னை ஓர் இடத்தில் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் என்னைப் பாராட்டினார்.

'காந்தியடிகளின் அருமை பெருமைகளைப் பலர் உரைக்கக் கேட்டிருக்கிறேன். ஆனால் வானொலியில் தாங்கள் எடுத்துரைத்ததைக் கேட்டபொழுது நான் மனம் குளிர்ந்தேன். தங்களைப்போல் உருக்கமாகவும் உணர்ச்சியாகவும் வேறு யாரும் அப்படிப் பேசியதில்லை" என்று நாமக்கல் கவிஞர் தம்பாரட்டுதலை எனனிடம் தெரிவித்தார்.

என்னுடைய சொந்த விஷயங்களை, எடுத்துக் கூறுவது, எனது வழக்கமல்ல; ஆனாலும் இதனை இங்குள்ள தேசிய நாண்பர்களுக்காகக் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, என்னைப் போன்றவன்—காந்தியாரின் அடிப்படை ஆசைகளையும், அவைகளைச் சாதிக்க அவர் ஆற்றிய அரும் பணியினையும் கண்டு அகமகிழ்ந்தவன்—இந்தச் சிலையைத் திறந்து வைப்பதில் பொருத்த முடையதாகாது, என்று யார் கூற முடியும்!

நான், என்ன, நாள் முழுதும் காங்கிரசைத் தூற்றிக்கொண்டிருந்துவிட்டு தேர்தல் காலத்தில், காங்கிரசிலே நுழைந்து கொண்டு, வேட்டையாடியவனா! காங்கிரஸ் போர்வையைப் போர்த்துக் கொண்டு, அதிகார வேட்டையாடியவனா! இந்தக் கரம்!. வெள்ளையனைநோக்கி குலுக்கிய கரமா! வகுப்பு வாதத்தை வளர்த்து வெறிச் செயல் ஏற்பட பாடுபட்ட கரமா! பள்ளி வாழ்வுமுடிந்ததும், உத்தியோகத்துக்குச் செல்லாது ஊருக்காக உழைக்கும் கரம்! பொது வாழ்வுக்காகப் பாடுபடும் கரம்! இந்தக் கரம் தவிர வேறு எந்தக் கரம்! சிலையைத் திறப்பது பொருத்தமாகும்.

"வேலூர் மாநகர் ஆட்சி மன்றத்தார், மணிமண்டபத்தில் விளங்கும் உத்தமரின் சிலையைத் திறக்கும் பணியினை எனக்களித்தார்கள். இதுபற்றிக் குறிப்பிட்ட மன்றத் தலைவர், 'வேலூர் வரலாற்றிலேயே, இன்று ஓர் பொன்னாள், எனக் குறிப்பிட்டார். என்னைப் பொறுத்தவரையிலேயே என்னுடைய வாழ்க்கையில்—என்—தமிழ் நாட்டின் அரசியலில் ஒரு முக்கியமான கட்டம் என்று கூறுவேன். காந்தியாரின் உருவச் சிலையை நான் திறக்கிறேன்—இந்தச் செயலால், அரசியல் வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியை, நாடு அறியும்.

எனக்கு கிடைத்துள்ள இந்த வாய்ப்பு—என்னைப் பொறுத்த வரையில்—முதல் முறையல்ல இரண்டாவது தடவை, இதற்கு முன்னரே சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இடைப் பாடியிலே ராஜாஜி பூங்காவிலேயுள்ள காந்தியாரின் சிலையை, நான் திறந்து வைக்கும் வாய்ப்பையைப் பெற்றிருக்கிறேன்; ஆனால் அங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள், இங்கு போல் இவ்வேசம் அடையவில்லை; பீதியடையவில்லை; 'இவனுவது, திறப்பதாவது!" என்று கூறவில்லை.

காந்தியாரின் உருவச் சிலையை நான் திறக்கிறேன்—நான் திறக்க வேண்டும் என்று நகராட்சி மன்ற நண்பர்கள், பெரிதும் விரும்பியிருக்கிறார்கள்.

எனக்குப் பதில். இந்நாட்டு முதலமைச்சர், காந்தியாரின் சிலையைத் திறந்திருக்கலாம்; ஆனால் அது, அவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்காது. அவர் அடிக்கடி திறந்து வைக்கும் டலசின்னங்களிலே, இதுவும் ஒன்றாகப் போயிருக்கும்; அதனாலேயே, என்னை—காந்தியாரின் முகாமிலே இல்லாதவனும்—அவரது திட்டங்களில் சிலவற்றை ஏற்றுக்கொண்டித்தவனும்—ஆகிய என்னை, இந்தப் பணியை நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கண்டு, எனது மைக் காங்கிரஸ் நண்பர்கள், கலக்கமா அடைவது?

திரு. சி. என். அண்ணாத்துரை

அண்ணல் காந்திஜியின் உருவச் சிலையை திறந்து வைத்தார் அறிஞர் அண்ணாத்துரை

சிலையைத் திறக்க அண்ணாவை அழைப்பதென்று வேலூர் நகர சபை தீர்மானித்தது. இல்லை ராஜாஜியே திறந்து வைக்க வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் எதிர் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அவர்கள் தீர்மானம் தோற்றது. அண்ணா அழைக்கப்பட்டார்.

வேலூரில் காந்திஜி சிலையை திறந்து வைத்து அறிஞர் அண்ணா பேசியதை தருகிறோம்.

மாற்றான் தோட்டத்து மல்லிகையென்பதால் அதன் மணத்தை ரசிக்கிறானல்லது ரசிக்க மறுக்கிறானா,எனப் பார்த்திருக்கலாம்!என்னைப் பொறுத்த வரையில், மல்லிகை மாற்றாரிடமிருப்பதால், அதற்கு மணமிருக்காது என்று உரைப்பவனல்ல. அதனால்தான், நண்பர்கள் வந்து என்னை அழைத்தபோதும், ஒப்புக்கொண்டேன்.

அவர்கள் அழைத்த நேரத்தில் நகராட்சி மன்றத்தினர் மெஜாரிடி முடிவோடு என்னை அழைக்கத் தீர்மானித்திருப்பதாகவும்—ஒரு முறைக்கு, இரண்டு முறை!—தீர்மானம் நிறைவேற்றிருப்பதாகவும் குறிப்பிட்டனர். ஆகவே, நான் வர இசைந்தேன்.

இந்தச் சிலை திறப்பு விழாவுக்கு உள்ளூர் காங்கிரஸ் கமிட்டியினரும் கடைசி நேரத்தில், கூடி, இந்த விழாவில் ஒத்துழைக்க வேண்டுமெனத் தீர்மானம் செய்தார்களாம். இந்தப் பெருந்தன்மைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக் கொள்ளுகிறேன்.

என், இவர்களுக்கெல்லாம் நன்றி கூறுகிறேன் என்றால்—இது போன்ற பெருந்தன்மை, அரசியல் வாழ்வில் நிலவ வேண்டும் என்ற ஆசை கொண்டவன், நான். அதற்கு உதாரணம்போல், நாம் எல்லாம் நடந்து காட்ட வேண்டும்.

"உத்தமர் காந்தியாரிடத்தில் எனக்கு மதிப்பு உண்டா?" இவ்விதம், சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்குச் சொல்வேன்—மதிப்பு காட்டுவது என்பது இரு வகைப்படும்: எதிரில் வாயாரப் புகழ்ந்துவிட்டு, தலை மறைந்ததும் மாறுகப் பேசுவது ஒருவகை! பழசாவிட்டாலும், கூடாரத்திலில்லாவிட்டாலும், பிறரின் பணியினை தனித்திருக்கிற நேரத்தில் எண்ணி, மதிப்பது இண்டாவது வகை

நான் இரண்டாவது வகையைச் சேர்ந்தவன். நம்முடைய உலக உத்தமர்! உயிரோடிருந்த நாட்களில்—பிடிக்காதவைகளைக் கண்டித்த போதும்—எனக் கேற்ற எண்ணங்களைப் பரப்பிய போதும், அவருக்குள்ள மதிப்பு நான் எண்ணுமளவுக்கு, அவருடைய தொண்டு இருந்ததால்தான், அவர் உலகத்தின் ஒளியானார்! காந்தியாரின் புகழை, காங்கிரஸ்காரர் கள் மட்டுமல்ல — எல்லோரும் புகழ்கிறார்கள்; உலக மக்களெல்லாம் போற்றுகிறார்கள் அவ்விதம், பிறர் போற்றுவதுதான் ஒரு தலைவருக்கு கிடைக்கும், தனி மரியாதையாகும்.

இதனை, காங்கிரஸ் நண்பர்கள் எண்ணியிருந்தால்,என்னை உள்ளன் போடு வரவேற்றிருக்க வேண்டும். மாற்றுக் கட்சிக்காரனை நான், திறந்து வைப்பதைக் குறித்துப் பெருமையடைந்திருக்க வேண்டும்.

"அருளொழுகும் கண்ணைப்பார்! அழகு மேனியைப்பார்! ஒளிதவழும் முகத்தைப் பார்! எங்கள் உத்தமரைப்பார்"—என்று, என்னை அழைத்துச் சொல்லியிருக்க வேண்டும். இவ்விதம் செய்திருந்தால், தங்களுக்கு கீர்த்தி தேடிக் கொண்டவர்களாவார்கள்; உத்தமருக்கும் கீர்த்தி தேடிக் கொடுத்தவர்களாவார்கள். அதைவிட்டு விட்டு, நம்முடைய காந்தியாரைத் தீண்டவே கூடாது!—என்று சொல்வது, பொருத்தமில்லை—பொருளில்லை—கீர்த்தி இல்லை.

காந்தியார், காங்கிரசைக் கட்டிக் காத்தார்—வளர்த்தார்—நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தார். காங்கிரசில் நாலணா மெம்பராகக் கூட அவர் இருந்ததில்லை, பல காலம்! தான் விரும்பிய விடுதலை கிடைத்துவிட்டதென்றதும், "காங்கிரஸ் தேவையில்லை—கலைக்கலாம்," என்றும் சொன்னார். "காங்கிரஸ் லாப வேட்டைக்காரர்களின் கூடாகிவிட்டது." என்று கூறி மனமும் நொந்தார்.

நான், காந்தியார் பெயரைச் சொல்லி, லாபம் பெறுபவன்! அவர்களால் அழுத்தி வைக்கப்பட்டிருப்பவன். அவர் வளர்த்த காங்கிரஸின் நிலை என்ன, இப்போது! பழைய கோட்டையில் வெளவாலும், புற்றுக்குள் பாம்பும். இருப்பதுபோல், காங்கிரசுக்குள் சுயநலவாதிகளும் இருப்பதாக அவர் கூறினார். அவர், எங்கே! இன்று இருப்போர் எங்கே! அந்த ஒளி எங்கே! இந்த நிலை!! [illegible] என்னைக் கொண்டு செய்ய வேண்டுமென்பதில், இங்கிருக்கும் கம்யூனிஸ்டுத் தோழர்களும், விரும்பி ஒத்துழைத்ததாகவும் அறிந்தேன், அந்த நண்பர்களுக்கும், என்னுடைய நன்றி.

இவ்வண்ணம், மாற்றுக் கட்சியினருடன் மனமொத்துப் போவதுதான், அரசியல் நாகரீகம். எனது தலைவர் பெரியாரும், முதலமைச்சர் ஆசாரியாரும் நமக்குள் நாயகத்தின் நாளில், ஒரே இடத்தில் சந்தித்தார்கள். அது, அரசியல் நாகரீகம்.

இன்று நான் காந்தியாரின் சிலையைத் திறக்கிறேன்! இது ஓர் புனிதமான நாள் எனக்கூறுவேன். இந்தச் சிலையைத் திறக்கும் விஷயத்தில், கட்சிப் பாகுபாடு கட்சி வெறி இல்லாது, எல்லா, அரசியல் கட்சிகளும் ஒத்துழைத்திருக்க வேண்டும்—இதுதான், அரசியல் நாகரீகம்.

அப்படியின்றி, அரசியல்அமளியிலீடுபட்டால், இந்த உபகண்டத்தின் பிதாவுக்கு கீர்த்தி தேடியர்களாக மாட்டோம்.

எனக்கும், காங்கிரசுக்கும், பலமான கருத்து வேற்றுமைகள் உண்டு; அதேபோல, கருத்து ஒற்றுமைகளும் உண்டு. காங்கிரசுக்கு மட்டுமல்ல—மற்றக் கட்சிகளுக்கும் எனக்குமிடையே கருத்து வேற்றுமைகளும் உண்டு; ஒற்றுமைகளும் உண்டு.

நன்றாகச் சிந்தித்தால், விளங்கும் வேற்றுமைகள், கொஞ்சம்; ஒற்றுமைகள் அதிகம். இந்த ஒற்றுமைப் பண்பு வளர, ஒவ்வொரு கட்சிகளும். அரசியல் அமளியிலீடுபடாமல், ஒத்துழைக்கும் மனோபாவம் ஏற்பட்டு, அரசியல் நாகரீகம் வளர வேண்டும்.

காந்தியார் இறந்த பிறகு கட்டப்பட்டுள்ள சமாதியிருக்கும் ராஜ கட்டத்துக்கு, அமெரிக்க நாட்டுத் தூதுவர் வந்து, மல்லிகைச் சென்டுகளை வைத்து வணக்கம் செலுத்துவதையும், பாகிஸ்தான் நாட்டுப் பிரதமர் வந்து மரியாதை செய்வதையும், வேறு பல வெளிநாட்டுக்காரர்கள் வந்து தமது அன்பு வணக்கங்களைச் செலுத்திப் போவதையும், படங்களில் காண்கிறோம். இதன் பொருள் என்ன? வெளிநாட்டுக்காரர்கள் வந்து வணங்குவதன் சூட்சுமம் என்ன? அவர்களை யெல்லாம் படம் எடுத்துப் பிரமாதமாக எழுதி, "பார்! பார்!! அவர்கள் செய்யும் அஞ்சலியை" என்று பெருமையோடு வெளியிடுகிறோமே அவர்களெல்லாம் யார்? காங்கிரஸ்காரர்களா? காங்கிரசிலே இருந்தறியாதவர்கள்! அதுமட்டுமல்ல, காங்கிரசையே எதிர்த்தவர்கள்! இந்த நாட்டுக்குச் சொந்தமில்லாதவர்கள்—வெளி நாட்டினர்!

அவர்களெல்லாம் காந்தியாரின் நினைவுச் சின்னத்தைக் கண்டு, பூரிப்புக் கொள்வதைவிட—மரியாதை செய்வதைவிட நான் செலுத்தும் அன்பு, எந்தளவுக்குக் குறைந்தது' என்று கூறமுடியும்? அவர்களை விட நான் செலுத்தும் மரியாதை மட்டமாகவா இருக்கும்!

அவர்கள் மரியாதை செலுத்தும்போது அமைகிறும் உங்களுக்கு அரசியல் ஆவேசமும். ஆத்திரமும் ஏற்படலாமா! மலர் தூவுகிறான் வெளிநாட்டான். அதைவிட நான் தூவும் மலர் எவ்விதத்தில் கெட்டதாகும்! இந்தப் பொது அறிவு—அரசியல் விளக்கம்—நம்மவர்களுக்கு அவசியம் இருக்க வேண்டும்.

ஆனால் நாம் நினைப்பதுபோல அவ்வளவு சுலபத்தில் இங்கே வந்துவிடாது. ஏனெனில் வருடத்துக்கு ஒரு தடவை நமக்குள், இன்னும் மன்மதன் எரிந்தானு? எரியவில்லையா? — என்கிற பிரச்னையே தீரவில்லையே! மன்மதனை கண்டவர்கள் யாரும் கிடையாது—சண்டையோ, ஓயாமல் நடக்கிறது!! இதைப்போல எத்தனை நாளைக்கு இருக்க முடியும்?

சுதந்திரம் கிடைத்த பின், உத்தமர் காந்தியடிகளே சொன்னார்: "சுதந்திரத்தில் ஒரு கட்டத்தைத் தான் தாண்டியிருக்கிறோம்; இந்தச் சுதந்திரம் ஏழை மக்களின் வாழ்க்கையை மாற்றக்கூடியதாக அமையவேண்டும்" என்று.

அவர் வெளியிட்ட அதே கருத்தைத்தான் நானும் கூறுகிறேன்; "களிப்படைய வில்லை. கவலை கொள்ளுகிறேன்!" என்றார். அதுதானே நிலையும்!

சுதந்திரம் காகிதப் பூவாக இல்லாமல் மணமுள்ள பூவாக இருக்க வேண்டுமானால் மாற்றுக் கட்சிகள் யாவும் வந்த சுதந்திரத்தை அனுபவிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

யாரைப் பார்த்தாலும், எதைக் கேட்டாலும் "சுதந்திரக் குழந்தை! சுதந்திரக் குழந்தை!" என்கிறார்கள். அந்தக் குழந்தைக்குப் பாலூட்டிவிட்டால் மட்டும் போதாது—தாலாட்ட வேண்டும்—சொக்காய் போட வேண்டும்—விளையாட்டு காட்டவேண்டும்—இது அத்தனையையும் தாயே செய்துவிட முடியாது. மாமன்மார் விளையாட்டுப் பொம்மைகள் வாங்கிவர, தங்கை தாலாட்டுப் பாட, உற்றார் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொஞ்ச—இவ்விதம் வளர வேண்டும் அக்குழந்தை!

அப்படியில்லாமல் "குழந்தையை நான்தானே பெற்றேன்" என்று சொல்லி மற்றவர் எவரும் அருகில் வரக் கூடாது என்று பெற்றெடுத்த தாய் சொன்னால் குழந்தையை எவரும் சிந்தார்! குழந்தையின் அருமை பெருமையையும் அறியார்! அதுபோலவே பிறந்த சுதந்திரக் குழந்தையைச் சீராட்டி வளர்க்க எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சந்தர்ப்பம் வேண்டும். குழந்தைக்கு அடிக்கடி உணவு தந்து—அதிகமாகவும் தந்து—யாரிடமும் அண்டவிடாமல், சில பணக்காரக் குடும்பத்திலே வளர்க்கப்படும் குழந்தை கடைசியில் நோஞ்சானாகிவிடும்! டாக்டரிடத்தில் செல்ல நேரிடும்!!

இதையே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுதந்திரக் குழந்தையைத் தூக்கி மகிழ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சந்தர்ப்பம் தாருங்கள். எங்களிடம விட்டுப் பாருங்கள் நிச்சயம் கெடுதல் வராது.

அப்படியே கெடுதல் வருவதாகக் கருதுவீர்களேயானால்—உங்களுக்குப் பிடித்தமான கிருஷ்ணன் கதையையே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிருஷ்ணனுக்குப் பாலூட்டச் சென்ற பூதகிபோல நாங்கள் என்றால், கிருஷ்ணன் கவனித்துக் கொள்வான்—அந்த நம்பிக்கையாவது இருக்கக் கூடாதா உங்களுக்கு!! அதை விட்டுவிட்டு எங்களைக் கண்டால் என் பயப்படவேண்டும்!

காந்தியாரின் சிலையை நான் திறந்துவைப்பதைக் காணும் நீங்கள் முகத்தையா தொங்கப்போட்டுக்கொள்வது? — "பார்! எதிர்க்கட்சிக்காரனாகிய அவனே எங்கள் காந்தியின் சிலையைத் திறக்கிறான். எங்கள் காந்தியின் பெருமையல்லவா இது!" என்று நீங்கள் மார்பல்லவோ தட்டவேண்டும்!

காந்தியாரின் புகழுக்குக் காரணம், குடும்பத்திலே பிறந்தவர்களால் மட்டும் உண்டானதல்ல. வெளியேயிருந்தவர்கள் அவரைக் கண்டு அவருக்கு அஞ்சலி செய்ததால்தான் உலக ஒளியானார் அவர்.

நான் யார்? நீங்கள் யார்? நமக்கு இடையிலிருக்கும் உறவுமுறை—முறிகின்ற முறை—இருக்கலாகாது. இதனை எனதருமை காங்கிரஸ் நண்பர்களுக்கு வலியுறுத்திச் சொல்லுவேன். சில பல கருத்து மாறுபாடுகளிருக்கலாம் எனக்கும்—உங்களுக்கும். காந்தியாரின் சில

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செங் கரும்பு

[சுதந்திரன் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கதை]

ஏ. எஸ். வடிவேலு

வரண்ட காலம். தேயிலைக் கொழுந்துகள் சுருண்டு கிடந்தன. சூரியன் வானத்தின் உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தான். களைப்புற்ற மான்களின் சாயலை ஒத்த பணி செய்யும் பெண்கள் கரும்புக் காட்டுக்கு காவலாளர்போல அந்தப் பெண்களுடன் கலந்து கொழுந்து கிள்ளும் ஐந்தாறு காளைகள். "அரும்பெடுக்காதே!" "மொட்டைப் பிடுங்காதே?" இப்படி ஓரிரு கங்காணிகளின் எதேச்சாதிகாரத் தொனி. அந்த சூழலில்.....

நாகப்பன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே "கரும்பு.....கரும்பு" என்று மெல்லிய தொனியில் அழைத்தான். அவனுக்கு தன் முதுகைக் காட்டிக்கொண்டு எதிரே நின்ற கரும்பு சட்டெனத் திரும்பிப் பார்க்கவில்லை. திரும்பாமலே "ஊம்" என்று பதில் கொடுத்தாள். எதையோ நினைத்து, மறுகணம், தனக்குள் களுக்கெனச் சிரிப்பைக் கொட்டினாள். தன் விழிவண்டுகளை சுற்றிலும் ஏவிவிட்டாள். அப்போது எதிரே ஒருத்தி கள்ளமாகத் திரும்பிப் பார்ப்பதைக் கண்டாள். கண்டவள் மறுபடியும் தலைகுனிந்து வேக வேகமாகக் கொழுந்து பறித்தாள். நாகப்பன் மீண்டும் ஆவலோடு அழைத்தான்.

"கரும்பு.....கரும்பு?"

"ஊம்.....என்ன?"

"திரும்பிப் பாரே" சற்று உரத்த குரலில்.

"மெல்லப் பேசுங்க"

"ஏன் கரும்பு?"

"ஏனு எதிரே எங்க அத்தை நிக்கிறாளே, தெரியல"

"ஏன் பயமாக்கும்?"

பயமில்லையா?"

"ஏன், நீ கணக்கப்பிள்ளையின் செல்வகுமாரி என்பதற்காகவா?"—கேலி அவன் குரலில் குழைந்தது.

"என்னமோ உனக்குக் கேலி; எனக்கென்னமோ பயமாகத்தான் தோன்றுகிறது" குரலில் அச்சம் தொனித்தது. நாகப்பன் திகைத்தான். தன் இதய வீணையின் நரம்புகளிலே ஏதோ ஓர் எழுகுப் பொருள் உருளுவது போலிருந்தது அவனுக்கு. "எனக்கென்னமோ பயம்"—இதை அவளிடமிருந்து அவன் எதிர்பார்த்ததேயில்லை. "ஏன் கரும்பு, என்ன சங்கதி? நம்பமேலே யாராவது, சந்தேகமான முறையிலே ஏதாவது?" கரும்பின் மனம் குமுறியது, "இல்லை நாகப்பா—அப்படியொன்னுமில்லை....." அவள் வாயடைத்தது. அவன் துடித்தான்.

உதடுகள் தடதடவென அடித்துக்கொண்டன. நெஞ்சகம் விம்மி வெடித்தது. நீண்ட பெருமூச்சுவிட்ட கரும்பு காதலின் கனிவோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"சொல்லு கரும்பு என்ன யோசிக்கிற"

"ஒன்னுமில்லை நாகப்பா—துக்கம் தொண்டையைப் பிடிக்கிறது—எங்க அத்தை மகனைத் தெரியுமா உனக்கு?"

"யாரு ரெங்கநாதன் தானே?..... ஆமாம்?"

"அந்த ரெங்கநாதருக்குத் தான்நான்ரெண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட ஏற்பாடு—என்ன செய்வேன்?—கிழடு கட்டைகள் எல்லாமா கூடி பேசி முடிச்சிட்டாங்க. இனி நம்ப ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் மறந்திடவேண்டியதுதான் நாகப்பா" அவள் மலர் விழிகள் இரத்தக்கண்ணீர் சிந்தின.

அவன் திறந்த வாய் அசையவில்லை. இருதயம் நின்றது. திக்பிரமை பிடித்தான். கற்சிலையான அவன் அந்தக் கரும்புச் சிலையை, கடித்துச் சுவைத்திடும் பாக்கியம் இழந்தோமே என்று தவித்தான். கவலையோடு கண்கள் கலங்கின. காதல் நெருப்பிலே அவிந்த கரும்பின் கனல் பார்வை அவன் ஆவியை வேக வைத்தது. இந்த நெக்குருகும் காட்சியை யாராவது பார்த்திருந்தால்.....?

தூரத்திலிருந்து அவள் அத்தை, "கரும்பு கரும்பு" என்று கடுமையான தொனியில் கூவினாள். திடுக்கிட்ட கரும்பு கருடப் பார்வை பார்த்தாள். தன் செங்கரும்பு உதட்டைக் கவ்விக் கடித்தாள். மறுகணம் "இன்னொருதடவை கண்டு பேசிக்கொள்ளலாம் கண்ணாளா" என்று கடைக்கண்ணால் கூறிவிட்டு விரைந்தாள்.

நாலடி வைத்தவள் தன் கூடை அரைவாசிகூட நிறையாதிருப்பதை உணர்ந்து திரும்பினாள்.

தாழ்ந்த குரலில் "நாகப்பா எனக்கு கொஞ்சம் கொழுந்து போடுறியா? என் கூடையைப் பாரு—பாதிகூட நெறையல இதுதான் சமயம்னு எங்க அத்தை என்னை ஒரே பிடியா பிடிச்சிக்கிறுவா....." அவள் உதடுகள் கூடிப் பிரியுமுன் நாகப்பன் தன் கூடையிலிருந்து ஐந்தாறு பிடி கொழுந்துகளை அள்ளிப் போட்டான். சங்குநாதம் செய்தது. பணியாளர் கிளம்பினர் கூட்டங் கூட்டமாக. எல்லோருக்கும் பின்னால் ஆமை அடி வைத்தான் அந்த வெறுங் கூடைக்காரன்.

***

நாலைந்து நாட்கள் உருண்டோடின காதலர் மீண்டும் கூடினர். எதிர்கால இன்ப நினைவிலே சங்கமமாயினர். கங்கையும்—காவேரியும் கலந்தால்? சோர்ந்து போயிருந்த கரும்பு மலர்ந்தாள் ஆசைக் காதலனைக்கண்டு. வாய்த்த சந்தர்ப்பத்தை நழுவவிட விருப்பமில்லை அவர்களுக்கு.

"கரும்பு, உன் அத்தை இன்றைக்கு வேலைக்கு?"

"இல்லை; தலைவலியாம்" வீட்டிலே இருந்திட்டாங்க.

"நல்லதாய்ப் போச்சு. இல்லேன்னு என்னைக்கு உன்னைத் தனியாகக் கண்டு பேசுவேனுதுடிச்சேன்-முடியுமா? கரும்பு, எப்போதும் உன் நினைவேதான் எனக்கு. ராத்திரியெல்லாம் எனக்கு நித்திரையே வரலை கரும்பு."

"ஒரு சங்கதி நாகப்பா."

"என்ன கரும்பு?"

"தை மாசம் கலியாணமாம் எனக்கு."

"எனக்கு அப்போ விருந்து கிடைக்குமா கரும்பு?" குமுறிய உள்ளத்தை சமாளித்துக் கொண்டே அவன் உதடுகள் அசைந்தன. வெற்றிலையை கொடுத்த அவன் "கரும்பு நீ என்னை மறந்துவிடுவாயா" என்றான் தளதளத்தவாறே.

"மறப்பேனு நாகப்பா உன்னை. இந்த நாலுநாளா படுத்தா தூக்கமே பிடிக்கிறதில்ல எனக்கு. உன் நினைவுதான்." அவள் தன் மடியிலிருந்து ஒரு பாக்கை எடுத்துக் கடித்துப் பாதியை அவனிடம் நீட்டினாள்.

இருவர் உதடுகளும் வெற்றிலைச் சாற்றிலே சிவந்தன. ரத்தச் சிவப்பேறிய கரும்பு சோபையாகக் காட்சிகொடுத்தாள். அவன் அதிலே சொக்கி நின்றான்.

"ரெம்ப ஆழகாயிருக்கிறாய் கரும்பு" அவன் ரசிப்பைக் கேட்டு கரும்பு பெருமையடைந்தாள்.

"எனக்கு எங்கேயாவது விழுந்து செத்துப் போவோமா அல்லது தூக்குப் போட்டுக்கிடலாமான்னுதோனுதுநாகப்பா. ஒரே வெறுப்பா இருக்கு. கலியாணமே எனக்கு வேண்டாம்னு சொல்லப் போறேன். இல்லேன்னு என் பிணத்தைத் தான் பார்ப்பாங்க—இது நிச்சயம்"

"பயப்படாதே கரும்பு நான் இருக்கிறேன் காப்பாத்த" அவன் தினையெடுத்த புஜம் பொருமியது.

"குரங்கு கையிலே பூமாலை யாகப்போறேன் நான். அதுக்குள் என் கழுத்தையே அறுத்து நான் உன்னை பிரிய முடியாது துப் போட்டுக்கிறது தேவலை போலே இருக்கு" என்றாள். அந்த ஆவேசத் தீயில் நெய் வார்த்தான் நாகப்பன்;

"கரும்புக் காட்டிலே மதயானையை விட்டதுபோலன்னு எங்கயோ படிச்சது ஞாபகம் வருது" என்றான் அவன்.

கரும்பு கிளர்ச்சியடைந்தாள். மின்னி மின்னி மறையும் பழைய இன்ப நினைவுகள், புதிதாக முளைத்த சில கனவுகள் அவள் மனத் திரையில் வட்டமிட்டன. அந்த நாகப்பனையே தன் நாயகனாக வரித்து மகிழும் அவள் நெஞ்சரங்கத்தில், தான் உயர் குலம்!—கணக்கப்பிள்ளையின் மகள்! என்ற திரைகள் விழுந்து விழுந்து மறைத்தன. ஆனால் அந்தத் திரைகளுக்கூடே:

"சாதி,உயர்வுதாழ்வு இவை ஒழிய வேண்டும். திருமணம் முதல் திருவிழா வரை எதிலுமே இந்த பீடை தலை காட்டக் கூடாது— நாம் அனைவரும் ஒரே இனம்; ஒரே பரம்பரை; ஒரே குடும்பம் என்பதை மறவாதீர்கள். ஒரு சாதியார் இன்னொரு சாதியாரின் இல்லத்திலே தயங்காது நுழைந்து பெண் பேசி உறவு பூண ஆரம்பித்து விட்டால் சாதிப் பேய் பரலோகம் போய்விடும்; சாதிகள் மறைந்துவிடும். பின்னர், நாம்—நமது இனம்—தமிழ் நாடு அறிவு, பண்பு, கலாச்சாரத்தில் முதன்மை பெறும்...." ஒரு வாரத்துக்கு முன்னர் தோட்டத்தில் நடந்த தொழிலாளர் கூட்டத்திலே ஒரு அறிஞர் இவ்விதம் செப்பினர். இந்த நினைவு வந்ததும், கரும்பு, பழந்தமிழ் நாட்டுப் பாவை போல புத்துணர்ச்சி எய்தி புதுப்பிறவி எடுத்தாள். அவள் இதயம் உப்பரிகை கொட்டியது.

"சுடுகாட்டுக்கு போனாலும் என்னால் உன்னை மறக்க முடியாது கரும்பு. எனக்கு வேலையும் ஓடல. பயித்தியம் பிடிக்குது. இதுக்குப் பரிகாரம் ஒன்னுமே இல்லையா" —உண்மைக் காதலால் அவன் உள்ளம் உருகி வந்த காட்சி இது.

"பயித்தியம் பிடிக்கிறதா? இதோ, இந்தக் கரும்பு இருக்கிறவரை வைத்தியம் பண்ண"

"வைத்தியமா? — எப்படி முடியும் கரும்பு?"

"நீ என் கைப்பிடித்த கணவனாக மாற வேண்டியது. —நான் சாதியை மறந்திட வேண்டியது".

"அப்போது நீ என் மகாராணி; நான்....."

"என் மகாராஜா"

"அது எப்படி நடக்கும் கரும்பு?"

"எப்படி நடக்குமா? எப்படியும் நடந்துதான் ஆகணும்" —அவள் குரலில் வீராவேசம் தகதகத்தது.

"கரும்பு....."

"நாகப்பா, நீதான் என்னை நீ என்னை பிரியக் கூடாது, சரியா?"

அவனுக்குக் கள்ளின் போதையை தந்தன அவள் சொற்கள். "உண்மையாகவா கரும்பு?"

"நம்ப மாட்டியா நாகப்பா? —காப்பாத்த வேண்டியது உன் பொறுப்புத்தான்"

"கைவிடமாட்டேன் கரும்பு —வானந்தான் இடிந்து சரியட்டுமே!—உனக்காக எதுவும் செய்யத் தயார்".

அவன் குரலில் வஜ்ர உறுதி கிணுகிணுத்தது.

"சரி அது எப்படி நடக்கும்?"

"நடக்கிறத்துக்கு ஒரே ஒரு வழிதான் தோனுது எனக்கு".

"எப்படி"

"சொல்லட்டா?"

"சொல்லு நாகப்பா"

"நீ பயந்திடுவியே"

"பயந்திடுவேனு? பாருங்கல்லுதான் உருண்டு வரட்டுமே?....."

"பயப்புடாட்டால் சொல்றேன் கேளு: ஊரை விட்டு..."

"ஊரை விட்டு.....?"

"ஓடிப் போவது"

"ஓடிப்போவதா?"

"ஆமாம். வேறே ஏதாவது வழியிருக்கா?"

"இல்லை. ஓடித்தான் போக வேண்டும்: ஆனால் பெத்தவங்களையெல்லாம் மறந்திட்டு எப்படி ஓடுறதுன்னுதான் ஒரு யோசனை"

"நீ குளங் குட்டையிலே விழுந்து செத்தால்?....."

"இருந்தாலும் பெத்து வளத்தாங்களே—மனங் கேக்கிறதா?

"கரும்பு"

"இல்லை—கரும்பில்லை—வேம்புன்னு அழையுங்க, இனியிலிருந்து நான் என் அப்பா அம்மா, அத்தை, அவ மகன் எல்லோருக்கும் வேம்பு—பச்சை வேம்பு!" அவள் வெற்றி முரசு அவனைத் தட்டி எழுப்பியது; அவன் மார்தட்டினான்.

"நீ வேம்பு—அவர்களுக்கு, ஆனால் எனக்கு நீ செங் கரும்புதானே!" என்றவன் அவள் கரத்தைப் பிடித்து கட்டி அணைத்தான்

அவ்விருவரின் உரையாடலையும் நல்லம்மா என்ற ஓர் நங்கை இருண்ட தேயிலைத் தூரிலே இருந்து கேட்டுக் கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியவே இல்லை.

***

ஒரு கிழமை உருண்டபின் ஒரு தினம்..... இரவு மணி ஒன்பது இருக்கும். முந்தானை மறைவிலே இடுக்கிய ஒரு துணி முடிச்சோடு வெளியே வந்த கரும்பு நிலவிலே யாரும் உலவுகிறார்களோ எனக் கவனித்தாள். சுற்றுமுடல் 'சுர்' என்று தனிமை வெறியில் லயித்துக் கிடந்தது. அந்த மூட்டையை தொங்கும் தன் கூடையில் சடுக்கென ஒழித்துக்கொண்டாள். அவள் இதயம் கொல்லன் பட்டடையில் உருகியது. சிந்தனைகள் தெறித்தன.

"நாளைக்கு இந்த நிலாவை நானும் நாகப்பனும் எங்கேயிருந்து பார்க்கப் போகிறோமோ. காலையிலே எல்லோருக்கு முன்னே வேலைக்குப் புறப்படுவது. அங்கே நாலாம் நம்பரில் நாகப்பன் காத்திருப்பார். அப்புறம் இந்த கேடுகெட்டவர்களையெல்லாம் தலைமுழுக வேண்டியதுதான்.....

"இந்த முடிச்சிலே மூன்று சேலைகள் உள்ளன: சட்டைகள், தாவணி, சீப்புகண்ணுடி, பொற்காப்புகள், தங்கச் சங்கிலிகள் ஆகியவை உண்டு. மேலும் நாற்பது ரூபாய் பணமும் உள்ளது—நாகப்பனும் ஐநூறு ரூபாய் வைத்திருப்பதாகச் சொன்னார். எப்படியாவது பிழைத்துக் கொள்ளுவோம்! உலகை வெல்லுவோம்!!

மறுபடியும் அந்தப் பால் நிலவைப் பார்த்து மகிழ்ந்தவள் உள்ளே சென்றாள். படுக்கையில் சாய்ந்து இமைகளை சாய்த்தாள். இன்பக் கனவில் திளைத்தாள். இதய வீணையை மீட்டிச் சுருதிபிடித்தாள். பின் தூங்க முயன்றாள். தூக்கம் தூரத்தில் நின்று கொண்டு கேலி செய்தது. உலகம் உருண்டு விடிவு கண்டபோதுதானானும் அயர்ந்து தூங்கிவிட்டதை உணர்ந்தாள்.

கிழக்கு அவளைக் கிள்ளிக் கிளப்பியது. பம்பரமானாள் கரும்பு. அவள் தலை கிறுகிறுத்தது.

தன் பொன்மேனிக்குத் தக்கவோர் நீலப்புடவை அணிந்தாள். கண்ணாடியில் சென்று அழகு பார்த்தாள். பின் பல கணி ஓரத்திற்கு வந்தாள். அவள் மார்பகம் விம்மி பொருமியது. பெண் புருக்கூட்டமை மலைநோக்கி விரைந்துகொண்டிருந்தது.

வெண்ணுரையூடே வெள்ளி மீன் நீச்சலடிப்பதுபோல இன்ப சாகரத்திலே சிந்தனை அலை முட்டிமோதி தவழ்ந்தது. தன் கூடையைக் கையிலெடுத்தாள். அவ்வளவுதான் அவள் கண்கள் நீலம் பூத்தன. அவள் கூடையிருந்த இடத்திலே அவள் அத்தையின் கூடை! முட்டை? அதிலே இல்லை. அவள் மூர்ச்சை நின்றது. திணறினாள். ஆவேசம் ஆர்ப்பரிக்க அந்தக் கூடையை எடுத்துக்கொண்டு காற்றுகப் பறந்தாள். எப்படியும் முடிச்சையைக் கைப்பற்றிவிடலாம் என்ற நம்பிக்கையோடு. என்றுமே தன்னை அழைத்துக் கொண்டே செல்லும் அத்தை மூச்சுக் காட்டாது போய்விட்டது அபாயத்தின் அறிவிப்புத்தானே!

கரும்பு வழிநெடுக தேடினாள். பேயாக அலைந்தாள். தேடிப் பிடித்து அத்தையறியா வண்ணம் தன் முடிச்சை மீட்சி செய்துவிடலாம் என்ற நப்பாசையோடு குதித்தோடினாள். ஆனால் அத்தை கண்ணில் சிக்கவில்லை.

கரும்பு எல்லோரையும் தாண்டி முன்னால் ஓடினாள். கால் கடுக்க—கருத்து கலங்க, இதயம் கொந்தளிக்க ஓடிக் கொண்டேயிருந்தவள் திடும்மென நின்றாள். எதிரே அவள் கண்ட காட்சி நெஞ்சைப் பிளந்தது. உடனே பின்னேறினாள்.

அவள் தந்தை கணக்கப்பிள்ளையின் எதிரே ஆராயி. அவள் கரங்களில் அழகாக விரித்த துணி முடிச்சு. அதனுள் மிளிரும் அணிகலன்கள், ஆராயின் ஆர்ப்பரிப்பு, அவள் அண்ணன் ஆத்திரத்தில் கொக்கரித்துக் கொண்டிருந்தார்,

பிரம்பை விசிறிக்கொண்டு ஓடிவந்தார் கணக்கப்பிள்ளை; பயந்து பதுங்கியது பெண்புரு: மறுகணம் அதன் சிறகொடிய அடி. உடம்பெல்லாம் தடிப்பு, புண், வேதனை, உள்ளத்தில் விரக்தி, விம்மல், வெடிப்பு, கன்னத்தில் வீக்கம், பற்களில் இரத்தம், புதுச் சேலையெல்லாம் புழுது.

அத்தனைக்கும் காரணம் நல்லம்மாதான் என்பது ஆராயிக்கு மட்டுந்தான் தெரியும். நல்ல நேரத்தில் ஒற்றர் வேலை பார்த்துக் கூறிய நல்லம்மாவை பாராட்டினாள் ஆராயி.

***

அன்றிரவு அந்தக் கரும்புக் கன்னியை அங்கே கண்டிருந்தால் அந்த முழுமதி திகைத்துத்தான் போயிருக்கும். ஆனால் அவள் இருண்ட வீட்டுக்குள்—இல்லை, காட்டுக்குள்—அடைபட்டுக் கிடந்தாள், தன் தோல்வியை அந்தத் தேன்மதி தெரிந்து கொள்ள கூடாது என்று முடிவு செய்தவள்போல. ஆனால் உண்மையில் அவள் காவல் சிறையில் வைக்கப்பட்டிருந்தாள். கலியாணம் முடிந்துவிட்டால் அடங்கிவிடும் காட்டுமான் என்பது அவர்கள் எண்ணம்—கரும்பின் ஆவி நாகப்பனைத்தான் சுற்றிக்கொண்டிருக்கும் என்ற தத்துவம் அறியாதவர்கள். மாமன் மகனுக்கு மணஞ் செய்து வைத்துவிட்டால் மகளின் காதல் கோட்டை மண்மேடாகிவிடும் என்று எண்ணி அதன் சரிவிலே

[12ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைக் குடிக்கும் லொடை லொட்டை பஸ்கள்

பத்தர கல்லியில் நடந்த பரிதாபச் சம்பவம்—பத்துத் தங்கமான உயிர்கள் பதைக்கப் பதைக்க கனல் கக்கும் தீயிலே வெந்து மாண்டன. ரத்தத்திலே ரத்தமாக—பொன் மூமணியாக வளர்ந்து கொண்டிருந்த குஞ்சல உயிருடன், தன் தவப்போறைக் காண வாஞ்சையெடுத்துநின்ற தாய், மழலை மொழியுடனும் குறும்பு நடையுடனும் பள்ளி போகும் பன்னீர்ச் செல்வம், உதிரத்தைச் சிந்தி இந்திர மனைகளும்—இகலோக பொருட்களும் ஆக்கிய தொழிலாளி, கருத்தால் பாடுபட்டு உழைக்கும் புத்திஜீவி இப்படி பத்துப் பேர் 'கோ' என்ற கதறலுடன் அவிந்து செத்தனர்.

பஸ் தீப்பற்றியது அதன் கனலிலே புழுவாகத் துடித்தார்கள். இந்தக் கோரக் காட்சியை பத்தர கல்ல மக்கள் பார்த்து பதைத்தனர். செய்தி கேட்ட மனித வெள்ளம் துடித்தது.

காரணம் என்ன? தற்செயலான விபத்தா? பஸ் போக்குவரத்து நிலை சம்பந்தமாக அறிக்கை செய்வதற்காக ஒரு விசாரணை சபை நியமிக்கப்பட்டுள்ளது. அது இந்த வாரத்திருந்து தனது விசாரணையை ஆரம்பித்துள்ளது. பொது மக்களும், மற்றும் வெகு ஜன ஸ்தாபனங்களும் தமது அபிப்பிராயங்களை சமர்ப்பிக்கிறார்கள். இலங்கையில் ஓடும் பஸ்களில் 85 வீதம் ஆபத்தானவை என்று ஒரே குரலில் புகார் கிளம்பியுள்ளது.

பத்தர கல்லயில் பத்துபிர்கள் பலிபோனதற்கும், நாட்டின் மற்றப் பகுதிகளில் சதா நடக்கும் கோர விபத்துக்களுக்குமான உண்மை சூழ்நிலை இது. ஏனைய நாடுகளில் போக்குவரத்து சாதனங்கள் சம்பந்தமாக கையாளும் கட்டுப்பாட்டை இந்த நாட்டில் அமுல் நடத்திஞல் இன்றுள்ள பஸ்களில் 85 வீதம் வீதிக்கு வர தகுதியற்றவை. பஸ்களின் நிலை படுமோசமானது என்பதும் இதுவே அப்பாவிகளான பிரயாணிகளின் எமகாதகனை உயிர் குடிக்கிற தென்பதும் தெட்டத் தெளிவாகிவிட்டது. பஸ் உள் வசதிகள் ஒரு புறமிருக்க போதிய பிரேக்கோ, தீப்பற்றுவது, கவிழ்வது, இடையே நின்று விடுவது போன்றவற்றை தடுக்கக்கூடிய நிலைகளோ இல்லை. பிரிட்டனிலே கழித்துவிட்ட கழிவுகளை குறைந்த விலையில் இறக்குமதி செய்கிறார்கள். இந்த லொட லொட்டைகளில் மனிதர்கள் பன்றிக் கூட்டம்போல, பயித்தங்காய்க் கட்டுப்போல எற்றப் படுகிறார்கள்.

பஸ்ஸில் பிரயாணம் செய்யும் மக்களின் வசதிகளுக்கும்—பாதுகாப்புக்கும் எந்தவித உத்தரவாதமும் இல்லை. வீதி ஒழுங்குகள், நேர ஒழுங்குகள் எதுவும் பொருட்படுத்தப்படுவதில்லை.

இந்த நிலைக்கான காரணம் என்ன? "உடைமையாளர்கள் பஸ் போக்குவரத்தை பொதுஜன போக்குவரத்து சாதனம் என்றுஉணர்வதில்லை' என்று விசாரணை சபைக்கு சமர்ப்பித்துள்ள முறையீடு ஒன்று கூறுகிறது.

பஸ் கம்பெனிகள் எதற்காக நடத்தப்படுகின்றன? பொது மக்களுக்கு போக்குவரத்து வசதியளிக்கும் பரோபகார சிந்தனையுடனு? மக்கள் நலனை பேணும் 'பாரி' உள்ளத்தோடு முதலாளிகள் கொடைவள்ளல்களாக மாறிவிட்டதாலா? இல்லை. சொந்த நலனுக்காக தமது கொள்ளை லாபத்தை பெருக்க. இந்த முதலீடு, தொழிலுக்கும்—பொது நல

தேசபக்தன் குறிப்பு

னுக்கும் ஒட்டு உறவே கிடையாது. பஸ் கம்பெனிகள் லாபம் தரவில்லையென்றால் இந்த நாட்டில் ஒரு பஸ் ஓடாது—ஒரு பஸ் கம்பெனி இயங்காது.

ஆனல் பொதுமக்கள் நாளாந்த வாழ்வில் பாவிக்கும், பொதுசனமான பஸ் போக்குவரத்து ஒரு சிலரின் பாங்கு வரவை கூட்டும் கொள்ளைக் கருவியாக இருப்பது நியாயமா?

பொது வாழ்விலே பொது சாதனமாக உள்ள இது பொது மக்கள் ஆதிக்கத்தில் பொது மக்கள் நலனைப் பேணும் முறையில் நடத்தப்பட வேண்டும். எனவேதான் பஸ் போக்குவரத்தை தேசீய மயமாக்க வேண்டும் என்ற கிளர்ச்சியை வலுப்படுத்த பொது மக்கள் முன்வரவேண்டும். ஆனல் இந்த ஆட்சி இந்த நியாயமான கோரிக்கையை ஒப்புக் கொள்ளுமா? அதற்கு இந்த அரசாங்கம் யாருடையது என்பதைப் பார்க்க வேண்டும். பஸ் முதலாளிகளின்—தோட்டமுதலாளிகளின் நன் கொடையிலே அவர்களின் கருவியாக இயங்குவதுதான் இந்த ஆட்சி—ஆளும் கட்சியான யூ. என். பி.

பஸ் போக்குவரத்தின் இன்றைய லட்சணத்தை பார்ப்போம்.

நேர அட்டவணை பொருட்படுத்தப் படுவதில்லை. நீண்ட நேரம் க்யூ வரிசையிலே கால் கடுக்க—உடம்பு சோர காத்து நிற்க வேண்டும். மாலை 5 மணிக்கு புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு போபவர் களனியிலுள்ள வீட்டிற்குஇரா 8 மணிக்குப் போக முடிந்தால் அது ஒரு அதிசயம் என்று ஒரு பிரயாணி கூறுகிறார். காலையில் 8 மணிக்கு காரியாலயம் வரவிரும்பும் களனி வாசி அதிகாலை 6மணிக்கு முன்பே புறப்பட்டாக வேண்டும். கொழும்பு பஸ் க்யூகளில் மணித்தியாலக் கணக்கில் காத்துக்கிடக்கும் மக்கள் கூட்டத்தை பார்க்கவே பரிதாபமானது.

பஸ் வந்ததும் 'கிழங்கு' போல அடுக்கப்படுகிறார்கள். இதில் பிரயாணிகள் படும் கஷ்டம் சொல்லந்தரமல்ல. களவாடிகள்—பிக்பாக்கட்டுகள் உபத்திரவம் வேறு.

மழை காலத்திலே காத்துக் கிடந்து பஸ் ஒன்றில் 'தொத்தி' விட்டால் பின் நடப்பதென்ன? 'மழை நேரத்தில் பஸ்ஸில் இருப்பதாக இருந்தால்—வெளியில் நின்றேன் இல்லையோ என்றுதான்எண்ணத்தோன்றும் க்யூவில் நின்று நனைவது மேல்—அங்கு பரிசுத்தமான தண்ணீர் ஆனல் பஸ்ஸிலேயோ ஒழுதும் கூரையிலிருந்து ஊத்தையும்—அழுகும் கலந்து மேலே விழும்' என்று ஒரு பிரயாணி கூறுகிறார்.

பஸ்களில் கண்டக்டர்கள் பிரயாணிகளுடன் நன்முய் பழகுவதில்லை என்று ஒருவர் புகார் கூறுகிறார். இதில் உண்மை இல்லாமல் இல்லை. காலை 4 மணிதொட்டு மாலை 10மணி வரை 18, 20 மணித்தியாலம் சக்குப்போடு போடப்படும் தொழிலாளிகளிடம் அதிருப்தியும்—வெறுப்பும் குவிந்த இதயத்தோடு அல்லல்படும் பாட்டாளிகளிடம் ஒரு வித உதாசீனமும்—அருவருப்பும் இருப்பது இயல்பு. நையப் புடைக்கும் வேலைப் பழு, வாழ்வுக்கே போதாத லாட்டரிச் சம்பளம், பொது உரிமைகளே மறுக்கப்படுவது, மற்றும் இன்னல்கள் தொழிலாளிகளை வாட்டும் போது அங்கு வளமும்—வனப்பும் இருக்க முடியாது. என்றாலும் தம் உரிமைகளுக்காகப் போராடும் தொழிலாளிகள் தமது வெற்றியின் ஊற்றிடம் பொது மக்கள் என்பதை மறந்து விடலாகாது. என்ன கஷ்டம் இருந்தபோதிலும் பிரயாணிகளை தயாள உள்ளத்தோடு அன்பாக நடத்த வேண்டும். இருவர் கஷ்டத்திற்கும் காரணம் பஸ் போக்குவரத்து அமைப்பு—உடமை முறையே என்பதை உணர வேண்டும். பஸ் போக்குவரத்தை மக்கள் நலனுக்காக—போதிய வசதிகளுடன் நடத்தும் நிலைக்கு கொண்டுவர தொழிலாளிகளின் உரிமைகளுக்காகப் போராட, பஸ் போக்குவரத்தை தேசீயமயமாக்கபிரயாணிகள்—தொழிலாளிகள் பரஸ்பர ஒற்றுமை உகுக்க வேண்டும்.

—என். ஜி.

மக்கள் நலனுக்காகவே போக்கு வரத்து வேண்டும்

கலையழகு நிரம்பி கண்களுக்கு கவர்ச்சி தந்து
இதயத்துக்கு இன்பம் தரும்
சிறந்த தத்ரூப

போட்டோ ஆல்பம்

பக்கத்துக்குப் பக்கம் பூரணப் பொலிவுற வாய்ந்த விதவிதமான அழகுத்தோற்றம்கொண்ட 33கட்டழகிகளின் உண்மைப் படங்கள்.

பாரிஸின் போட்டோ மன்னர்களான 'ஆர்ட் - டி - பியூட்' என்னும் கலைஞர்களின் கைத்திறமை கொண்டது

பாரிஸிலிருந்து முதன் முதலாக இப்போதுதான் வந்துள்ளது.

ஆல்பம் ஒன்றின் விலை ரூ. 10-00
தபால் செலவு சதம் 50.

போஸ்டல் ஆர்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்

V. P. P கண்டிப்பாகக் கிடையாது

நவலட்சுமி புத்தகசாலை,
136, செட்டியார் தெரு. கொழும்பு.

"கா! கா! கா!"

சென்னை சட்டசபையில் ஒரு காக்காய் புகுந்துகொண்டு அங்கும், இங்கும் பறந்தவாறே "கா! கா!" என்று கத்தி அட்டகாசம் செய்தது!

சபையில் காக்காய் புகுந்து கத்தி சபை நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் விளைவிக்கிறது என்று ஒரு காங்கிரஸ் மெம்பர் சபாநாயகரிடம்புகார் செய்தார். (சபையில் பலத்த சிரிப்பு) "எங்கே! எங்கே?" என்று சபாநாயகர் அண்ணுந்து பார்த்தார். விரட்ட முடியாத இடத்தில் காக்காய் உட்கார்ந்திருந்ததால் அதை விரட்ட முயலவில்லை.

பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பும் துட்டகமுனு சங்கம்

அமெரிக்க தூதுவர் காரியாலயத்தில் இருந்துதான் இயங்குகிறதாம்!

'பிளிட்ஸ்' பத்திரிகை வெளியிடும் அந்தரங்க விவரங்கள்

(பம்பாயிலிருந்து வெளிவரும் "பிளிட்ஸ்" பத்திரிகையின் ஜனவரி 9-ந் திகதி இதழில் அதன் காரியாலய திருபர் ஏ. ராகவன் இலங்கை சம்பந்தமாக ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறார் பல ரஸமான தகவல்கள் தரப்பட்டிருக்கும் அக்கட்டுரையின் தமிழாக்கமே இது. பிறையடையாளங்களுள் காணப்படுபவை நமது குறிப்புகளாகும். — ஆசிரியர்)

ராச்சி வழிமூலமாக புதுடில்லிக்கு வரவிருக்கும் சேர் ஜோன் கொத்தலாவலையின் விஜயமும், அதே நேரத்தில் ஈராக் நாட்டின் அமெரிக்க கைக் கருவியான பெய்ஸல் மன்னரின் விஜயமும் இந்திய எதிர்ப்பு அணியில் இலங்கையை மாட்டிவிடும் அமெரிக்க சதியின் இன்னுமொரு அறிகுறியே.

ஆசியப் பிரதமர்கள் மகாநாட்டைக் கூட்டுவதற்கு திரு கொத்தலாவலை எடுத்த முயற்சி, தமது பிதுராார்ஜித சொத்துக்களாக இருந்த அடிமை நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் வலுத்துவரும் அமெரிக்க செல்வாக்கை தடுப்பதற்காக முதலில் பிரிட்டனுலேயே தூண்டிவிடப்பட்டது. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவி யளிக்கும் இந்தசூழ்நிலையில், இந்த முயற்சியை டில்லி இரகசியமாக வரவேற்றது.

ஆனல் கிடைக்கும் செய்திகளிலிருந்து இந்த முயற்சியின் அடிப்படை லட்சியத்திற்கு முட்டுக்கட்டைபோட அவியை வாஷிங்டன் பாவிக்கும் என்றே தெரிய வருகிறது. ஆசிய நாடுகளில் அமெரிக்கா கையாளும் ராணுவத் திட்டங்களுக்கு டம்மாரமடிக்கும் மகாநாடாக இதை மாற்ற அமெரிக்கா முயலும். இந்த நோக்கத்திற்காக ஆசியப் பிரதமர்கள் மகாநாட்டில், மத்திய ஆசிய நாடுகளையும் சேர்த்துக்கொள்ளுமாறு அமெரிக்கா கொத்தலாவலையை நிர்ப்பந்திப்பதாகத் தெரிய வருகிறது.

இலங்கையை நிர்ப்பந்திப்பதற்கு, தீராமல் இடக்கும் இலங்கை இந்தியர் பிரச்னையை அமெரிக்கர்கள் ஆயுதமாகப்பாவிக்கிறார்கள். பிரஜா உரிமைப் பிரச்னைமூலம் இலங்கை இந்தியாவுக்கிடையில் பகைமை வளர்த்து சரித்திரம் கண்டறியாத இரு நாடுகளின் நட்புறவையும் முறிக்க முயலுகிறார்கள்.

சென்ற வருடம் ஜூன் மாதம் லண்டனில் இலங்கை இந்தியப் பிரதமர்கள் சந்தித்தபோது 4 லட்சம் இந்தியர்களுக்கு உடனடியாக இலங்கைப் பிரஜா உரிமை கொடுப்பது என்று ஒரு முடிவுக்கு வந்திருந்தார்கள். இந்த திட்டத்தை தொடர்ச்சியாக மந்திரி சபையைச்சேர்ந்த திரு ஜெயவர்த்தனவும், ரத்வத்தையும், பொன்னம்பலமும் எதிர்த்தார்கள். இவர்கள் அமெரிக்காவின் பகிரங்க தாஸர்கள்.

அமெரிக்க முனை

கண்டிப் பிரதிநிதிகள்பற்றி அதிகமாக பத்திரிகைகளில் அடிபடுகிறதே, யூ என். பி. ஆளும் கும்பலிலுள்ள இந்த டாலர் தாஸர்களை மையமாகக்கொண்ட ஒரு அமெரிக்க முன்னணியே இது. இலங்கை இந்தியப் பிரச்னையை தீர்ப்பதில் ஏற்படக்கூடிய எந்த உடன்பாட்டையும் குலைப்பதற்காக சாத்தியமில்லாத கோரிக்கைகளை இவர்கள் மூலம் முன்வைத்திருக்கிறார்கள்.

இந்திய சமூகத்தினரை 'ஆக்கிரமிப்புப்படை' 'இலங்கையிலுள்ள ஐந்தாம்படை' என்றெல்லாம் தமது மகஜரில் இந்த கண்டிப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நாசகாரர் கூட்டத்தை இலங்கையிலுள்ள அதிகப்படியான பத்திரிகைகளையும், சில தொழில்களையும் உடைய ஏரிக்கரை (லேக் ஹவுஸ்) பகிரங்கமாக ஆதரிக்கிறது.

ஏரிக்கரைப் பத்திரிகை காரியாலயமே இலங்கையில் அமெரிக்க சதிநிட்டங்களின் நடுமையம்.

மாஜி ட்ராட்ஸ்கிவாதியான ஏரிக்கரை நிர்வாக அதிபர் எட்மன் விக்கிரமசிங்ஹா, எல்லாம் வல்ல டாலர் நாட்டுக்கு இரண்டுவருடங்களுக்கு முன்னல் பவனியில் அழைத்துச் செல்லப் பட்டார். அன்றுதொட்டு ஏரிக்கரை இந்திய எதிர்ப்பு அபாண்டத்தில் காட்டுத்தனமாக இறங்கியுள்ளது.

இந்தியர்களுக்கு எதிராகநெருப்புக்கக்கும் இன்னுமொரு டாலர் நிதிபெற்ற ஸ்தாபனம் துட்டகமுனு சங்கம் என்பது. இந்த ஸ்தாபனம் கூகுலுக்ஸ்களான் மோடியில் இந்தியர்களுக்கு 'வெளியே றுங்கள் அல்லது சாவை எதிர்பாருங்கள்' என்று அந்தரங்க கடிதங்கள் அனுப்பிவருகிறது.

இந்த சங்கத்தை அமெரிக்க காரியாலயத்தில் சிங்கள மொழி பெயர்ப்பாளராக உள்ள திரு..... (பிளிட்ஸில் பெயர் தரப்பட்டுள்ளது. நாம் குறிப்பிட விரும்பவில்லை —) நடத்துகிறார் என்று தெரியவருகிறது.

யூ என். பி. அரசாங்கத்திலுள்ள அமெரிக்க கும்பலைச்சேர்ந்த வேறொரு பிரபலஸ்தர், பாதுகாப்பு — வெளிவிவகார மந்திரி இலகாவின் நீர்த்தரக் காரியதரிசியான சேர் கந்தையா வைத்தியநாதன். (இப்போது இவர் வீட மைப்பு மந்திரி —) பல நெடுங்காலம் இலங்கையில் வாழ்ந்த இந்திய மீன் பிடியாளர்களை சமீபத்தில் நாடுகடத்துவதற்கு காரணமாக இருந்தவர் இவர். அன்று கொத்தலாவலை தலையிட்டிராவிட்டால் இலங்கை — இந்திய உறவு பெரியளவு பாதகப் பட்டிருக்கலாம்.

பாதுகாப்புப் படையில் அமெரிக்கர்!

ஆகஸ்ட் 12-ந் தேதிய தேசிய போராட்டத்தில் இலங்கை இந்தியர்கள் பங்குபற்றியிருந்தால் அவர்களுக்கு எதிராக அமெரிக்கர்களும் அவர்கள் கையாட்களும் ஒரு திட்டத்தை வகுத்துவைத்திருந்தார்கள் என்று நம்பகமான செய்தி கிடைத்துள்ளது. அன்று 20 பேர் சுடப்பட்டார்கள். 200 பேர்களுக்கு படுகாயம் விளைக்கப் பட்டது.

பிரிட்டிஷ் மகாராணியாருக்கு விசுவாசப் பிரமாணம் எடுப்பதை தவிர்த்தால் தம்மைச் சேர்ந்த 300 அமெரிக்கர்களையும் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையில் சேரவைப்பதாக அந்த நாட்களில் அமெரிக்க காரியாலயம் முன்வந்தது.

ஆகஸ்ட் 12ந் தேதிய போராட்டத்தில் இந்தியர்களுக்கும் சிங்களவர்களுக்கும் எதிரான அவர்கள் சதி தோல்வியடையவே இலங்கை மந்திரி மாகாணத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயம் ஒன்றில் அமெரிக்கர் கும்பல் ஒரு பொய் தஸ்காவேஜை புகுத்தினர்கள். இது கம்யூனிஸ்டுகளின் விடுதலைச் சேனைக்கான நகல் திட்டம் என்று சொல்லப்பட்டது. படைக்கு பணம் திரட்ட தோட்டத் தொழிலாளிகளுக்கு சம்பளம் வழங்க கொண்டுவரும் பணத்தை கொள்ளையடிக்குப்படி தஸ்தாவேஜு கூறுகிறது. மந்திய மாகாணத்தில் சக்தியுள்ள ஸ்தாபனமான இலங்கை இந்திய காங்கிரஸை பயமுறுத்தவே இந்த புரட்டல் சேர்க்கப்பட்டது.

எனவே இந்தியாவுக்கு எதிராக பெலமுள்ள அமெரிக்க தூதர் கூட்டம் இலங்கையில் இயங்கிவருகிறது என்பது வெள்ளிடை மலை. இலங்கை இந்தியர் பிரஜா உரிமை பிரச்னையில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் எதிராக பிரிட்டிஷ் கையாளான பிரதமர் கொத்தலாவலை மீது இந்த கும்பல் பலத்த நிர்ப்பந்தம் கொண்டுவந்துள்ளது. மத்திய கிழக்கு ஆசியாவிலுள்ள அமெரிக்க தாஸர்களான சில நாடுகளை ஆசியப் பிரதமர்கள் மகாநாட்டில் சேர்க்க வேண்டும் என்பதற்கு அவகாசம் தேடுவதற்காக பிரதமர் கொத்தலாவலை மீது நிர்ப்பந்தம் திணிக்கப்படுகிறது.

—பிளிட்ஸ்
ஜனவரி 9-1954

கடைக்காரர் இல்லாத கடை!

ஆட்களே இல்லாத கடை யொன்று காரி என்னும் கிராமத்தில் இருக்கிறது. காரி கிராமம் மத்திய பாரத்தில் உள்ளது.

காரி கிராமத்திலுள்ள ஒரு கடையில் ஆட்கள் கிடையாது. சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சாமான்களின் விலை பட்டியல் ஒன்றும் கடையில் தொங்கவிடப்பட்டிருக்கிறது. தேவையான சாமானை எடுத்துக்கொண்டு அதற்கான விலையை ஒரு பெட்டியில் போட்டுவிட்டு போகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவீனம்:

வாடாமலர்

"சுலோசனை"

28. பாரியின் தோழி

கடற்கரைக்குச் சென்றிருந்த பாரிஜாதத்தின் பார்வை எதிரே வந்துகொண்டிருந்த இரு உருவங்களின்மீது விழுந்தது அல்லவா? ஒரு வினாடி தன் கண்களையே பாரிஜாதம் நம்பாதபடி அவளைப் பிரமிப்பு அடையச் செய்த அவர்கள் யார்?

பாரிஜாதம் எந்த நிலையை எந்த உணர்ச்சியை அடைந்தாளோ, அதே நிலையை அதே உணர்ச்சியை அடைந்தனர் அவர்களும்.

பாரிஜாதம் ஒருவாறு சமாளித்துக்கொண்டு "ஹெலோ, ஹெலோ, மோணி ஹவ்டுயூடு" என்று கூறியபடியே அங்குவந்த வெள்ளைக்காரப் பெண்ணின் கையைப் பிடித்து வெடுவெடென்று குலுக்கினாள். அதே சமயத்தில் அந்த வெள்ளைக்காரப் பெண்ணும் கண்களில் அளவற்ற ஆர்வமும், ஆச்சரியமும் விளங்க "ஹவ்டுயூடு, பாரி" என்று கூவிக் கொண்டாள்.

ஒருகணப்பொழுது மௌனம் நிலவியது. பாரிதான் பேசினாள். வெள்ளைக்காரப் பெண்ணேடு வந்த சுமார் ஐம்பது ஐம்பத்தைந்து வயது மதிப்பிடத்தக்க அந்த வெள்ளைக்காரப் பெரியவரைப் பார்த்த வண்ணம் "அங்கிள், உங்கள் திடீர் தோற்றத்தினால் என்னைத் தூக்கிவாரிப்போட்டு விட்டீர்களே; இங்கு வருவது பற்றி எனக்கு இரண்டுவரி எழுதியிருக்கலாகாதா?" என்றாள் பாரிஜாதம்.

"மன்னிக்கவேண்டும் மிஸ் பாரி. நாங்கள் கொழும்புக்கு வந்ததே அகஸ்மாத்தாய் ஏற்பட்டுவிட்டது" என்றார் அந்தப் பெரியவர்.

உடனே மிஸ் மோணி துருதுருத்துக்கொண்டு பேசலானாள். "பிளீஸ் எக்ஸ்கியூஸ் அஸ் பாரி, நாங்கள் இங்கு வருவதாகவே இருக்கவில்லை. ஹொங்கோங் போகவேண்டிய அவசர காரியம் ஏற்பட்டது. விமானத்தில் வந்தோம். பம்பாயிலிருந்து ஹொங்கோங் செல்லும் விமானப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. விமான சாரதிகள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்களாம். அதன் காரணமாக பம்பாயிலிருந்து சிங்கப்பூருக்கு கப்பலில் பிரயாணம் செய்யவேண்டியதாயிற்று. சிங்கப்பூருக்குப்போகும் வழியில் கப்பல் இன்று கொழும்பில் தாமதிக்க நேர்ந்தது. நாளைதான் திரும்பப் புறப்படுகிறது. கொழும்புக்கு வந்துவிட்ட நாங்கள் கொழும்பைச் சுற்றிப் பார்க்கலாம் என்று புறப்பட்டோம். உங்கள் வீட்டிற்கு நாளைக் காலையில் வரலாம் என எண்ணியிருந்தோம். ஆனால் அதற்கிடையிலேயே, நாளை கும்பிடவிருந்த தெய்வம் இன்றே குறுக்கிட்டுவிட்டது!" என்று சொல்லி கிளுகிளுவென்று நகைத்தாள் மோணி.

பாரிஜாதம் இங்கிலாந்திலிருந்தபோது மிஸ் மோணி அவளுடைய ஒரு நெருங்கிய சினேகிதி என்பதும், மோணியின் தந்தை மிஸ்டர் டேவிட்ஸன் ஒரு கோடீஸ்வரர் என்பதும், அவருக்கு இங்கிலாந்திலும் வெளி நாடுகளிலும் இயந்திர சாதனங்களில் ஈடுபடும் பற்பல வியாபாரஸ்தலங்கள் இருக்கின்றன என்பதும் நமது வாசகர்களுக்கு ஏற்கனவே தெரியும்.

ஹொங்கோங் நகரத்தில் இருக்கும் ஒரு கிளை ஸ்தாபனத்தைப் பரிசீலனை செய்வதற்காக மிஸ்டர் டேவிட்ஸன் அவசரமாக கிளம்பவேண்டியிருந்தது. மகள் மிஸ் மோணியும் தானும் கூடவர விரும்புவதாக அவரிடம் கூறினாள். அவரும் சரியென்றார். இருவரும் புறப்பட்டுவரும் மார்க்கத்தில்தான் அகஸ்மாத்தாக கொழும்புக்கு வந்து சேர்ந்தனர்.

"காலையில் கப்பலிலிருந்து இறங்கியதாகச் சொன்னீர்களே, மத்தியானம் எங்கே தங்கினீர்கள்?" இப்படிக் கேட்டவாறே தன் தோழியின் நீல மணிக் கண்களை உற்று நோக்கினாள் பாரிஜாதம்.

"ஏன், கோல்பேஸ் ஹோட்டலில் தங்கினேம்" என்றாள் மிஸ் மோணி.

"பார்த்தீர்களா, தவறு செய்துவிட்டீர்கள். நான் இருக்கும்போது நீங்கள் ஹோட்டலுக்குப்போகலாமா? உங்களை உபசரிக்கும் கௌரவம் எனக்குக் கிடைக்கக் கூடாதா?" என்று குறைப்பட்டாள் பாரிஜாதம்.

"பரவாயில்லை மிஸ் பாரி, இன்று ஒருநாள்தானே நிற்கிறோம். ஹொங்கோங்கிலிருந்து திரும்புகையில் கொழும்பில் நீண்டகாலம் தங்க திட்டமிட்டிருக்கிறோம். அப்பா இங்கும் ஒரு கிளை ஸ்தாபனம் ஆரம்பிக்கப் போகிறார். அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அவர் செய்யவேண்டியிருக்கிறது. இன்னும் பத்துத் தினங்களில் ஹொங்கோங்கிலிருந்து திரும்பி விடுவோம். அப்போது நேரே உன் வீட்டில்வந்து குதிக்கிறேன் பாரி" என்று கொஞ்சலாகவும் குழைவாகவும் பேசினாள் மிஸ் மோணி.

மூவரும் பரந்த கடற்கரை மணலில் உட்கார்ந்தனர். ஏதேதோவெல்லாம் பற்பல துறைகளில் பேச்சுக்கள் வட்டமிட்டன. பாரியும் மோணியும் தங்கள் பழைய சினேகிதிகளைப் பற்றியும், பள்ளி வாழ்க்கையைப் பற்றியும் பேசி ரஸித்தார்கள். இடையிடையே மிஸ்டர் டேவிட்ஸன்னும் அதில் பங்குகொண்டார். திடீரென்று மோணி, "ஆமா, உன் மாமா மகன் ஒருவர் உன் பெரியப்பா வீட்டிலேயே வளர்ந்து வருவதாக அடிக்கடி என்னிடம் சொல்வாயல்லவா? பெரியப்பாவின் மரணத்துக்குப்பின் அவரைப்பற்றி நீ உன் கடிதங்களில் கூடக் குறிப்பிடவில்லையே. அவர் என்ன ஆனார்?" என்று கேட்டாள்.

பாரிஜாதத்தின் அழகிய முகம் வெளுத்தது. உதடுகள் நடுங்கின.

"இப்போது அவர் இங்கு இல்லை" யென்றாள் மென்று விழுங்கியபடியே.

'இல்லையா, ஏன்?'

"அவர் பட்டணவாசம் பிடிக்காமல் கிராமத்துக்குப் போய்விட்டார்!"

'பட்டணவாசம் பிடிக்காமலா அல்லது உன்னுடைய இங்கிலீஸ் நாகரீகம் பிடிக்காமலா?" என்று பகிடியாகக் கேட்டாள் மோணி.

மோணியின் கிண்டல் பாரிஜாதத்தை என்னவோ செய்தது. பிறகு சகல விவரங்களையும் பாரிஜாதம் மோணியிடம் விரிவாக ஆனால் விரைவாகக் கூறினாள். அன்று மனேகரனிடமிருந்து வந்திருந்த கடிதத்தைப் பற்றியும் அதில் அவன் இப்போது வேலை தேடும் கட்டத்தை அடைந்திருக்கிறான் என்பதையும் பாரி கூறி முடித்தாள்.

மோணி தன் தந்தையை நோக்கினாள். அவருடைய குழி விழுந்த கண்கள் பரந்த சமுத்திரத்தை நோக்கிக் கொண்டிருந்தன. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டவர்போல் தென்பட்டார்.

"டாடி!" என்று அழைத்தாள் மோணி.

மிஸ்டர் டேவிட்ஸன் சட்டென்று திரும்பி என்ன மோணி என்று கேட்டார்.

"பாரியின் அத்தான் அவளைக் கைவிட்டு விட்டாராமே. மாமாவின் உயில் அவரைக் கோபப்படுத்தி விட்டதுபோலும்!" என்றாள்.

மிஸ்டர் டேவிட்ஸன் பதிலே பேசவில்லை.

மோணி உடனே பாரிஜாதத்தின் பக்கமாகத் திரும்பி 'பாரி உன் அத்தானுக்கு நல்ல வேலையாக ஒன்று கிடைத்தால் அவர் மனம் மாறிவிடும் என்று நினைக்கிறேன்' என்றாள்.

"அதற்கு நான் ஒரு வழி செய்யட்டுமா, குழந்தாய்" என்று பாரியைப் பார்த்துக் கேட்டார் டேவிட்ஸன்.

பாரிஜாதம் அவரை ஆச்சரியத்தோடும் ஆவலோடும் நோக்கினாள்.

"நான் இங்கு ஆரம்பிக்க விருக்கும் கிளைக் கம்பனியில், உன் அத்தானுக்குப் பிடித்தால், ஒரு உதவி மனேஜர் வேலைக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளட்டும். மனேஜராக ஒரு இங்கிலீஸ்காரர் வருவார். அவருக்கு சகல விதத்திலும் துணையாக இருப்பதற்கு ஒரு உள்ளூர்க்காரர்தான் தேவை. எனவேதான் இலங்கையரான உங்கள் அத்தானை உதவி மனேஜராகப் போடலாமா என்று யோசிக்கிறேன்" என்றார் மிஸ்டர் டேவிட்ஸன்.

மோணி மகிழ்ச்சியோடு "ஆமாம், ஆமாம் வேலையை ஒப்புக்கொண்டு விட்டால் மனேகரன் கொழும்புக்கே வந்துவிடலாம். பிறகு என் பாரியிடமுள்ள கோபமும் அவருக்கு தணிந்துபோகும். கல்யாணமும் செய்துகொள்வார். டாடியின் யோசனை அபாரமானது. எப்படி பாரி? உன் அத்தானுக்கு நாளைக்கே கடிதம் எழுதிப்போடு" என்றாள்.

"ரொம்ப தாங்ஸ், அங்கிள். அத்தானை எழுதிக் கேட்டுப் பார்க்கிறேன்" என்று உவகையோடு நன்றி தெரிவித்தாள் பாரிஜாதம்.

'ஆனால் ஒரு நிபந்தனை, மிஸ் பாரி வேலையை உடனடியாக அவர் மேற்கொள்ளமுடியாது. ஏனெனில்குறைந்தது ஒருவருடமேனும் அவர் என்னோடு இங்கிலாந்திற்கு வந்து தொழில் பயின்றுகொள்ள வேண்டும். இயந்திர சாதனங்களை விற்பனவு செய்யும் தொழிலாதலால் தொழில் நுணுக்கத்தில் அவர் நன்றாகப் பயிற்றப்பட்டிருக்கவேண்டும். இங்கிலாந்து செல்வது. பயிற்சிபெறுவது இவற்றிற்கான செலவுகளையெல்லாம் நானே ஏற்றுக் கொள்வேன். லண்டனில் அவருக்குச் சகல சௌகரியங்களும் செய்துகொடுக்கப்படும். பிரியப்பட்டால் எங்கள் மாளிகையிலேயே அவர் தங்கலாம்,' என்றார் மிஸ்டர் டேவிட்ஸன்.

'அத்தானை இங்கு வரவழைக்கிறேன். தாங்கள் ஹொங்கோங்கிலிருந்து திரும்பிவரும்போது எல்லோரும் கலந்தாலோசித்து செய்யவேண்டியதைச்செய்வோம். அத்தான் ஒப்புக்கொள்வார் என்பதே என் நம்பிக்கை. தனிமனிதர் தானே! எங்கு வேண்டுமானாலும் செல்ல அவர் தயாராகவே இருப்பார்' என்றாள் பாரிஜாதம்.

'ஆல், ரைட் மனேகரனை நான் நேரில் சந்தித்துப் பேசுவதே மிகவும் நல்லது. இன்றே கடிதம் எழுதுங்கள். எல்லாம் உங்கள் நன்மைக்காகத்தான் மிஸ். பாரி' என்றார் மிஸ்டர் டேவிட்ஸன். அப்போது அவர் கண்களில் இருந்த குறும்பைப் புரிந்துகொண்ட பாரியும் புன்னகை பூத்தாள்.

அன்று மாலை வீட்டிற்குத் திரும்பும்போது தன் மார்பை அழுத்திக்கொண்டிருந்த ஏதோ ஒரு பெரிய பாரம் நீங்கியது போன்ற உணர்ச்சி பாரிஜாதத்திற்கு ஏற்பட்டது. அன்று சுகமாக மட்டுமல்ல பல இன்பக் கனவுகளுடனும் கண்ணயர்ந்தாள் அந்தப் பெண்.

★

முதல் நாளைய ஏற்பாட்டின்படி, கப்பல் சிங்கப்பூருக்குப் புறப்படுவதற்கு முன்னால், மறுதினம் மிஸ்டர் டேவிட்ஸனும் அவர் புதல்வியும் சந்திரபவனத்திற்கு விஜயம் செய்தனர். பாரிஜாதம் அகமும் புறமும ஒருங்கே மலர அவர்கள் இருவரையும் வரவேற்று உபசரித்தாள். சிற்றுண்டி வழங்கப்பட்டது மிஸ்டர் டேவிட்ஸன் மகள் மோணியை அங்கு சிறிதுகாலம் தாமதிக்கும்படி சொல்லிவிட்டு ஏதோ காரியமாக வெளியில சென்றார்.

பாரிஜாதம் மோணியை அறை அறையாக அழைதுசெனறு தன அழகிய பங்களாவைப் பெருமையுடன் காணபித்தாள. பாரிஜாதத்தின் அறைக்குள் போனதும் சுவரில் பெரிதாக மாட்டப்பட்டிருந்த அழகிய வாலிபனின படததைக்கண்ணுற்ற மோணி, 'இநதப படததலிருப்பது யார் பாரி?' என்று கேட்டாள.

பாரிஜாதத்தின் முகம் சட்டென்று சிவந்துவிட்டது; அவள் தயங்குவதைக் கண்ட மோணி, 'நீ சொல்லாமலே நான் ஊகிதுக்கொண்டேன் பாரி; உனனை ஏமாற்றிய உன் காதலன தானே!' எனறு சிரித்துக்கொண்டே மொழிந்தாள்.

'நீ சொலவது சரி மோணி, ஆனால் 'என்னை ஏமாற்றிய' எனற பதத்தை மட்டும் வாபஸ் வாங்கிவிடு' என்றாள் பாரி.

'ஏன், ஏமாற்றுமல் வேறு என்ன?.....'

'ஏமாற்றினார் என்று சொல்ல முடியாது. அவர் லட்சியவாதி. நான் வந்து குறுக்கிட்டதால் அவருக்கு ஏற்பட்ட நஷ்டம்; கஷ்டம். மேல் நாட்டிலுள்ள ஒருவனுயிருந்தால் அன்றே என்னைச் சுட்டுக் கொன்றிருப்பான். அவருக்குள்ள சொத்துரிமையைப் பறித்துக்கொண்டவளல்லவா நான்? அவர் சாந்த சொரூபி; நாள் ஆக ஆக அவர் மனோநிலை மாற்றமடைவது நிச்சயம். பிறகு தாமாகவே வலிய என்னை ஏற்றுக்கொள்வார் என்ற நிச்சயம் எனக்குண்டு.

'மோணி, அத்தான் அழகாய் இருக்கிறார் அல்லவா? நேரில் பார்த்தால இதைவிடவும் அழகாய் இருப்பார். ஒரே பார்வையில் என உள்ளத்தையும் உயிரையும் கவர்ந்து கொண்ட கள்வன், அவர். கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை!" இதைக் கூறும்போது பாரியின் கண்கள் இலேசாகக் கலங்கின.

மோணி இடைமறித்து: 'ஆமாம் பாரி' உன் அத்தானுக்கு வேறு எந்தப் பெண்ணின் மேலாவது காதல் இருக்கக்கூடுமோ?' என்று கேட்டாள்.

'அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தால் என்னிடம் சொல்லியிருக்க மாட்டாரா? மறைத்துவைக்கும் சுபாவம் அவரிடம் இல்லை, மோணி' என்றாள் பாரிஜாதம் கபடில்லாமல்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மிஸ்டர் டேவிட்ஸன் வந்து சேர்ந்தார். இருவரும் பாரியுடன் கைகுலுக்கி 'குட்பை' சொல்லிக்கொண்டு வெளியேறினர்.

நெஞ்சினில் மாற்றம் நிகழ்த்திடுமோ?

"அண்ணல்"

மாலையிலே தினஞ் சோலையிலே அவள்
மாங்குயில் போலிசை பாடுவதும்
வேலைநிகர்த்த விழியினுல் வீதியை
வியர்த்தமாய்ப் பார்த்துக்கண் பூப்பதுவும்
சேலை விதம் விதம் தேடி அணிவதும்
செவ்விதழ் சாயத்தில் மூழ்குவதும்
நாலை அவள் பொய்யாய்ப் பார்ப்பதுவும் அவன்
நெஞ்சினில் மாற்றம் நிகழ்த்திடுமோ?

பச்சைக் கிளியினிற் பேசுவதும் பழக்
கன்னத்தில் தீஞ்சுவை சேர்ப்பதுவும்
நச்சுக் கருநாகம் போன்றலை பின்னலை
நாணத்தொடு பற்றி ஆட்டுவதும்
இச்சைபழுத்த பழமெனக் கொங்கைகள்
எண்ணத்தில் ஈட்டியைப் பாய்ச்சுவதும்
இச்சையைக் கொள்ளுமோ? இனையில் புலவனின்
எண்ணத்தில் மாற்றம் நிகழ்த்திடுமோ?

கண்ணில் எமனைப் புகுத்துவதும் உள்ளக்
கருத்தை யவனிற் செலுத்துவதும்
விண்ணின் எழில்தன்னை மெல்லுடல் சேர்ப்பதும்
விந்தைப் பெருமூச்சு வீசுவதும்
வெண்ணகை முல்லையைக் காட்டுவதும் கையை
வீசிநடப்பதும் கூசுவதும்
என்னைவனென்றோ? இனையில் புலவனின்
எண்ணத்தில் மாற்றம் நிகழ்த்திடுமோ?

தமிழுக்கு ஐ. நா. சபையின் மரியாதை!

ஐ. நா. சபையை சேர்ந்த கல்வி கலாசார ஸ்தாபனம் தமிழ் மொழிக்கு கௌரவம் அளித்திருக்கிறது. கம்பராமாயணம், திருக்குறள் ஆகிய இரண்டு நூல்களையும் தமிழிருந்து ஆங்கிலத்திலும் பிரெஞ்சு பாஷை, ஸ்பானிஷ் பாஷை ஆகிய பாஷைகளிலும் மொழி பெயர்க்க மேற்படி ஸ்தாபனம் முடிவு செய்திருக்கிறது.

இந்திய பாஷைகளிலிருந்து 8 இலக்கியங்களை உலக பாஷைகளில் மொழி பெயர்க்க திட்டமிடப்பட்டிக்கிறது. இந்த 8 நூல்களில் திருக்குறளும், கம்பராமாயணமும் அடங்கியுள்ளன.

பிரேம்சந்த் டங்கிம் சந்தர் சட்டர்ஜி துளசி தாசர் முதலானோரின் படைப்புக்களும் மொழி பெயர்க்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனநாயக-சமதர்மத்தின் ஆசான் திரு குர்ஆன்

அட்சரமும் அசையாது முக்காலத்துக்குமுகந்த மூல வேதம்

யுத்தத்தை கருவறுத்து சாந்தி-சுபீட்சம் விளைக்கும் புனித கோட்பாடு வந்த கதை

இஸ்லாத்தின் சத்திய வேதமாகிய திருக்குர்ஆன் முழுதும் ஒரே நாளிலோ அல்லது ஒரே முறையிலே அருளப்பட்டதன்று. நாயகமவர்களுக்கு நபித்துவம் அருளப்பட்ட நாள் முதல் அவர்கள் இவ்வுலகைவிட்டு மறைந்த நாள் ஈறாக 23 வருட காலமும் திருகுர்ஆன் வசனங்கள் இறங்கிக் கொண்டேயிருந்தன. இவை கொஞ்சங் கொஞ்சமாக சமய சந்தர்ப்பத்துக் கேற்றவாறு வெளியாகிக் கொண்டிருந்தன. இவற்றில் நாயகமவர்கள் நபித்துவமடைந்து மக்காவிலிருந்த 13 வருடங்களும் அருளப்பட்ட குர்ஆன் பகுதிக்கு 'மக்கி' என்றும் மதீனாவிலிருந்த 10 வருடங்களும் அருளிய திருகுர்ஆன் பகுதிக்கு 'மதனி' என்றும் அழைக்கப்படுகின்றது.

மக்கி சம்பந்தப்பட்ட அத்தியாயங்களில் பெரும்பாலும் இறைவனின் ஏகதத்துவம், விக்கிரக ஆராதனை, மூடக் கொள்கைகள் பற்றிய கண்டனங்கள், இறைவனின் தாத்து (குணி) ஸிபாத்து (இலட்சணங்கள்) ஆகியவை பற்றிய ஆதாரங்களும் மரித்தபின் நன்மை தீமைகளுக்குரிய சன்மானது, தண்டனை முதலியவை சம்பந்தமாய் கூறப்பட்டுள்ளன. சட்டதிட்டங்கள் அதிகமாக மதனியிலும் கூறப்பட்டுள்ளது.

இக்குர்ஆன் சரீப் கொஞ்சங் கொஞ்சமாய், காலத்துக்குக் காலம் அருளப்பட்டதென்றாலும் அது அன்று இறைவனுல் எவ்விதம் போதனையளிக்கப்பட்டதோ அதே நிலையில் தான் இன்றும் உளது. குர்ஆன் போதிக்கப்பட்ட நாளிலிருந்து அதன் கடைசிவரை நபிகள் நாயகமும் அவரைச் சூழ்ந்த ஸகாபாக்களும் திருக் குர்ஆன் மனப்பாடம் பண்ணியிருந்தார்கள். நபியவர்கள் அடிக்கடி தமக்கு போதிக்கப்படும் 'வஹீ'யை 'காத்திபுல்வஹீ' என்னும் இழுவின் மூலமாய் நாள்தோறும் எழுதுவித்தார்கள். இன்னின்ன வசனங்களுக்குபின் இன்னதைதான் எழுதவேண்டுமென்று தமது குழுவுக்கு போதித்தும் வந்தார்கள். இதனால் குர்ஆன் ஒருவித மாற்றமுமின்றி அழகாகவும், தொடராகவும், இறைவன் போதனைப்படி அமைந்தது.

நபிகள் நாயகமவர்கள் இறந்த பின்னரும் குர்ஆன் மனப்பாடம் பண்ணிய பல ஸகாபாக்களிருந்தனர். இவர்களில் சிலர் நாயகமவர்கள் குர்ஆன் எழுத நியமித்த "காத்திபுல் வஹீ" என்னும் குழுவிலும் அங்கம் வகித்தவர்களாகும். இவர்களில் ஹஜ்ரத்துக்களான ஜைதுப்னுதாபித் அன்ஸாரி அப்துல்லா இப்னு மஸ்ஊது மஆதுப்னு ஜபல், அப்துல்லா இப்னு அர்க்கம் என்பவர்கள் மிகவும் முக்கியமானவர்களாகும். இவர்களுடன் இன்னும் சிலர் தம் பொருள், உடல் ஆவி அனைத்தையும் தியாகஞ் செய்து மக்களுக்கு குர்ஆனைப் போதிக்கவும் குர்ஆன் மக்களுக்கு பயிற்சியளிக்கவும் தயாராய் இருந்தார்கள். இவர்களிடையேயும் பலர் குர்ஆன் மனனஞ் செய்த ஹாபிஸ்களாகவும் இருந்தார்கள். குர்ஆனைப் பார்க்காமலே போதிக்கும் திறமையுடையவர்களாய் திகழ்ந்தார்கள். இப்படிப்பட்ட ஹாபிஸ்கள் இன்றும் இஸ்லாத்தில் காண்பது கண்கூடு.

ஒரு சந்தர்ப்பத்தை நோக்கி ஒரு குர்ஆன் வசனம் நாயகமவர்களுக்கு போதிக்கப் படுமானால் அதை நாயகமவர் தம் ஸகாபாக்களுக்குக் கூறுவதற்கு தவறியதில்லை. அதோடு அதை எழுதியும் வைக்க அவர்கள் தாமதிக்கவில்லை. இதனால் குர்ஆன் முழுவதும் நாயகமவர்களின் காலத்திலேயே எழுதப்பட்டவையென்பதற்கு போதிய சான்றுண்டு.

திருகுர்ஆன் அக்கால உபகரணங்களான ஈச்சோலை மரப்பட்டை போன்றவற்றில்தான் எழுதி வைக்கப்பட்டிருந்தது. மார்க்கத்தை விளக்கிக் கூறவும் விவாதமெழும்போதெல்லாம் சமாதானம் கூறவும் மக்களிடையே குர்ஆன் மனப்பாடம் பண்ணிய ஸகாபாக்கள் பலர் இருந்ததினால் குர்ஆனின் அவசியம் அவர்களுக்கு புலப்படவில்லை. குர்ஆனை ஒன்றுசேர்க்க வேண்டுமென்ற தேவையும் ஏற்படவில்லை. ஆனால் நாயகமவர்களுக்குப் பின் கலீபாவாக வந்த ஆபூபக்கர் சித்தீக் அவர்களின் காலத்தில் ஏற்பட்ட யுத்தங்களினால் பல ஸகாபாக்கள் தம் உயிரை தியாகஞ் செய்ய நேரிட்டது. இதில் குர்ஆன் மனப்பாடம் பண்ணிய பல ஸஹாபாக்களும் உயிர் துறந்தனர். இதனால் குர்ஆனின் தேவை முக்கியமானதாகக் காணப்பட்டது. ஸகாபாக்கள் இப்படியே இறந்து போனால் குர்ஆனை ஒன்று சேர்க்கவும் முடியாது. ஸகாபாக்களையே எக்காலமும் நம்பியிருக்க முடியாதென்றும் இதனால் வருங்காலத்தில் குர்ஆன் பலவகைப்பட்டதாக ஆகிவிடுமென்ற நோக்கத்தை தம் மனதிற் கொண்ட ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீபாவிடம் சென்று குர்ஆன் ஒன்று சேர்க்கப்பட வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். இவரின் இவ்வேண்டுகோளை கலீபா ஏற்றுக் கொண்டு இதற்கென ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இக்குழுவுக்கு ஹஜ்ரத் ஜைது இப்னு தாபித் (றலி) அவர்கள் இத் திருப்பணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் நபிநாயகமவர்களின் காலத்திலும் குர்ஆன் எழுதும் பணியிலீடுபட்டவர்; திருக் குர்ஆன் முழுவதையும் மனப்பாடம் பண்ணிய ஹாபிஸ்ஸாகவும் விளங்கினர். இவர் இதற்குமுன்தான் எழுதிவைத்திருந்த குர்ஆன் பிரதியையும் குர்ஆன் மனப்பாடஞ் செய்த ஹாபிஸ்களையும் துணையாகக் கொண்டு

எம். வை. யு. ஸாஹிபு

திருக் குர்ஆன் எழுதி முடித்தார். இப்பிரதி அச்சமயம் கலீபாவாயிருந்த அபூபக்கர் சித்தீக் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் குர்ஆன் அபூபக்கர் சித்தீக் அவர்களுக்குப்பின் கிலாபத் பதவியைப் பெற்ற உமர் (ரலி) அவர்களிடம் கைமாறியது. கிலாத் ஆட்சியில் உமர் ரலிபவர்களின் காலத்தில் இஸ்லாம் அயல் நாடுகட்கெல்லாம் பரவியது. ஆபிரக் கணக்கானவர்களெல்லாம் கூட்டங் கூட்டமாய் இஸ்லாத்தை தழுவ திரண்டு வந்தனர். இதனால் இவர்களுக்கு குர்ஆனை போதிக்க குர்ஆனை மனப்பாடஞ் செய்த ஹாபிஸ்கள் எல்லா ஊர்களுக்கும் செல்வது சிரமமாய் காணப்பட்டது. இந்நிலையில் ஹஜ்றத் உதுமான் (ரலி) அவர்கள் கலீபாவானார்கள். திருக் குர்ஆனை பிழையறப் போதிக்கும் பணியில் தவறேற்பட்டு குர்ஆனை தப்பும் தவறுமாய் ஓதவேண்டியதேற்படும் போலானது. இவ்விஷயத்தை ஹஜ்ரத்ஹுதைபத்துப்னுல் யமான் (றலி) அவர்கள் கலீபாவான உதுமான் (ரலி) அவர்களுக்கு குர்ஆன் பிரதியிலிருந்து பல பிரதிகளை எழுதி இஸ்லாமிய நாட்டின் பல அயல் நாடுகளுக்கும் அனுப்ப வேண்டுமென்று ஆலோசனை கூறினர். இதன் பயனாக திருக் குர்ஆனுக்கு பல பிரதிகளையுண்டாக்கும் வேலை மறுபடியும் ஹஜ்ரத் ஜைதுப்னு தாபித் என்பவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. இவர் குர்ஆனின் முந்திய பிரதியையும், அப்துல்லா ஹிப்னுஜுபைர் ஸயீதுப்னுல் ஆஸ், அப்துல்லா ஹிப்னு ஹாரித் முதலிய ஸஹாபிகளையும் துணையாகக் கொண்டு ஏழு பிரதிகளை தயாரித்தார். இவை ஷாம், ஈரான், எகிப்து முதலிய இஸ்லாமிய நாடுகட்கு அனுப்பப்பட்டன.

அபூபக்கர் சித்தீக் அவர்கள் காலத்தில் தயாரிக்கப்பட்ட திருகுர்ஆனின் ஆதிப் பிரதி ஹஜ்றத் உமர் (ரலி) அவர்களின் புதல்வியும் உம்முல் மூமினீனுமான ஹஜ்ரத் ஹப்ஸா (றலி) அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. இந்த ஆதிப் பிரதிக்கு "உம்மு" என்று பெயர். ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் காலத்தில் மறுபடியும் ஒன்று கூட்டி எழுதப்பட்டதால் இவருக்கு "ஜாமிஉல் குர்ஆன்" (குர்ஆனை ஒன்று சேர்த்தவர்) என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார்.

பின்னர் இந்தப் பிரதிகளிலிருந்தெல்லாம் ஆயிரக்கணக்கான பிரதிகள் ஒவ்வொரு நாட்டிலும் எழுதப்பட்டு இஸ்லாமிய நாடுகள் முழுதும் பரவின.

இப்புனித குர்ஆனில் முப்பது அத்தியாயங்களையும் பல பாடங்களையும் கொண்டது. இதுவே இஸ்லாமும், இஸ்லாமியர்களின் ஜீவநாடியுமாகும். இக் குர்ஆன் ஒரு காலத்து மட்டுமன்று. இஃது முக்காலத்துக்கும், முழு உலகத்துக்கும் பொருந்தியதாகும். காலத்துக்குக் காலம் மாற்றிக் கொள்ளவோ அல்லது திருத்திக் கொள்ளவோ கூடியதன்று. இக்குர்ஆன் ஆசியாவிலிருந்து அமெரிக்காவுக்கு போனாலும்சரி வடதுருவத்திலே இருந்து தென்துருவத்துக்குபோனாலும் அதில் எந்த மாறுதலையும் காண முடியாது. ஆனால் உலகின் எக்கோடியிலுள்ளவராகிலும் அவர்கள் அத்தனை பேருக்கு பொருந்திய வாறும், பொருந்தக் கூடிய வாறுமே அஃது ஆக்கப் பெற்றுள்ளதாகும். கலைகளுக்கெல்லாம் பெரும் ஏடாகவும் அரசியலுக்கெல்லாம் ஆசானாகவும் விளங்குகின்றது. எந்தக் கலையாலுலும் அவற்றிற்கெல்லாம் தலைமை தாங்கக் கூடியதாக விளங்குகின்றது.

இப்புனித குர்ஆனின் கீர்த்தி உலக மாந்தரின் கல்வியறிவும், நாகரீகமும் வளர வளர ஓங்கிக் கொண்டே இருக்கும். நாகரீகம் நிறைந்த பாரிஸ் நகரத்துக்கும் அநாகரிகம் ஆட்கொண்ட ஆபிரிக்காவுக்கும் எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டுக்கும் பொருத்தமுடையதே. சுமார் 1400 வருடங்களுக்கு முன்னர் அருளப்பட்ட இப்புனித குர்ஆன் உலகமே மாறிபிருக்கும் காலத்தில் ஒரு அட்சரமும் மாறுமலிருப்பது விந்தையே. இஃது முக்காலத்துக்கும் ஆக்கப்பட்ட இறைவசனம். உலக போறிஞர்களெல்லாம் திருக் குர்ஆனின் பெருமையைப்பாராட்டாமலில்லை. ஆங்கில அறிஞரான பேனட்ஷா உலகமே ஒரு காலத்தில் இஸ்லாம் மயமாகிவிடுமென்று ஜோசியங் கூறியுள்ளார். ஆசியாவின் தலைவரான மகாத்மா காந்தி மற்றும் பேரறிஞர்களும் போற்றியதுடன் குர்ஆனையும் கற்றூர்கள்.

கெடுபிடி யுத்தமேகஞ்சூழ்ந்த இந்த யுகத்துக்கு ஏற்ற அரசியல் முறையைகுர்ஆன்கூறுகின்றது. ஜனநாயகம், கம்யூனிசம் சோசலிஸம் எது வேண்டுமானாலும் குர்ஆனில் காணலாம். பசிக்கொடுமை தாங்காத மக்கள் செத்து மடியவோ, அல்லது பணம்படைத்த பிரபு ஏப்பமிடவோ குர்ஆன் கூறும் வகையில் இல்லை. மாந்தர் யாவரும் சமம். கறுப்பரென்றோ வெள்ளையரென்றோ பாகுபாட்டைக்காண முடியாது. இரத்தினக் கம்பளத்தில் நடைபயிலும் மன்னனும்சரி, தெருத் தெருவாய் அலையும் ஆண்டியும்சரி இறைவனின் சன்னிதானத்திலே சமத்துவம், சகோதரத்துவம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது.

குர்ஆன் நீதிக்கு நிகரில்லாத பொக்கிசமாக விளங்குகின்றது. குர்ஆனின் நீதியில் களவைக் கலையாகக் கொள்ள முடியாது. மறைமுகமாய் அல்லது பகிரங்கமாய் செய்த குற்றத்தையும் இன்றைய நீதியில் வாதாடலாம். ஆனால் குற்றவாளியென்பதை அறிந்தாலே போதும் குர்ஆன் தண்டனையளிக்கும். இன்றைய நீதியில் களவெடுக்கலாம், ஆனால் கள்ளனைப் பிடிபடக் கூடாது. களவெடுத்தபொருளைக்கொண்டே வழக்கையும் வாதாடலாம். இங்கே முடியவில்லையென்றால் பிரிவுக்கவுன்சில் உண்டு. நீதி பச்சோந்தியாக மாறிவிட்டது; ஆனால் புனித குர்ஆனில் இஃது என்றுமே மாறவில்லை. அன்றும்சரி இன்றும்சரி ஒரே தண்டனை;

குர்ஆன் மதுவை மக்கள் அருந்தக் கூடாது என்று விலக்கிவைத்தது 1400 ஆண்டுகளுக்கு முன்பு. ஆனால் இன்றுதான் மதுவை விலக்க முற்படுகின்றனர் நாகரீகமடைந்த சாதியினர். மக்கள் உண்ண வேண்டிய உணவு, உடுக்க வேண்டிய உடை, சுகவாழ்வுக்கு ஏற்ற சுகாதாரம் எது வேண்டுமானாலும் குர்ஆனில் காணலாம். சுத்தமும் சுகாதாரமும், அழுக்கும் அசுத்தியும் நிறைந்த அந்தக் காலத்திலேயே போதிக்கப் பட்டன; இப்படியே திருக் குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு வசனமும் முக்காலத்துக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது. இன்றைய நிபுணர்களும் வல்லரசுகளும் கூறும் ஒவ்வொரு அதிசயத்தையும் குர்ஆன் 1400 ஆண்டுகளுக்குமுன் கூறியதென்றால் இதன் தீர்க்கதரிசனத்தின் மகிமைதானென்ன. இன்றைய வல்லரசுகளெல்லாம் குர்ஆனைப் படித்தால் உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவுமன்றே.

கிராமிய இலக்கியம்:

தந்தையர் தடையை மீறி காதலர் கூட சாகஸம் செய்யும் பாட்டி

காதலியை மறைத்து காதலனை சோதிக்கும் விந்தை

'மச்சானே மாம்பழமே' என்று நாடி வரும் தையலிடம் 'கந்து விளக்கே கடவலடித்தோரணமே' என்று சொக்கும் காதலன்

(எம். வை. எம். முஸ்லிம்)

இலங்கையின் கீழ்க்கரையில் உள்ள முஸ்லிம் கிராமங்களில் கிராமியப் பாடல்கள் மலிந்து கிடக்கின்றன. இப்பகுதியில் உள்ள முஸ்லிம் பெண்கள் தங்கள் சொந்த வேலைகளின்போது, அவ்வேலையில் அலுப்புத் தட்டாதிருக்கப் பாட்டுப்பாடுவார்கள். சந்தர்ப்பவசமாக அவர்கள் பாடும் பாட்டுக்கள் இலக்கியச் சுவை செறிந்த கவிகளாக அமைகின்றன. இக்கவிகள் வசன நடையிலும் நன்கு விளங்குமாறு அமைகின்றன. கிரிய சொற்களுள் பல பெரிய விஷயங்கள் அமுங்கிக் கிடப்பதை அக்கிராமியப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. இலங்கையின் இலக்கிய வின்பம் படைத்த இணையிலாச் சொத்தாக கிராமியப் பாடல்கள் அமையும்.

***

வாலிபனும் ஸுறையாவும் இளமையிற் தொட்டு அன்புடன் பழகி வந்தார்கள். பாடசாலைப் படிப்பிலுஞ் சரி, வீட்டுச் சாப்பாட்டிலுஞ் சரி பூந்தோட்ட விளையாட்டிலுஞ் சரி இவர்களிடம் ஒற்றுமை குன்றுது நிலவி நிற்கும். இவர்கள் பால்ய அன்பு காலக்கிரமத்தில் காதலாக மாறியது. இவர்கள் இருவருக்குமிடையில் உள்ள விஷயங்கள் அத்தனையையும் ஸுறையாவின் பாட்டி மரியம் அறிவாள். பாட்டி மரியமும் ஸுறையாவின் தந்தையும் நெருங்கிய உறவினர்கள். அதுபோன்றுதான் வாலிபனின் தந்தையும். வாலிபனுடைய பெற்றோர் வாழ்க்கையில் எந்தக் கட்டத்தைப் புரட்டினாலும் அங்கு பாட்டியின் நாமம் குறுக்கிடாமலில்லை. ஸுறையாவின் பெற்றோர் பிரச்னைகளில் பாட்டியின் இறுதியான தீர்ப்பே முடிவானதாய் இருக்கும். இதே போன்றுதான் இவர்கள் காதல் விவகாரங்களிலும் நெருங்கிய பற்றுடனிருந்தாள்.

இக்காதல் வானம் பாடிகள் காலக்கிரமத்தில் பாட்டியின வீட்டில் சந்திப்பது வழக்கம். இச்சந்திப்புகளில் பாட்டி நல்ல பாதுகாப்பாய் அமைவாள். சின்னட்களின் பின்.....

ஒருநாள் ஸுறையாவுக்கும் வாலிபன் தந்தைக்கும் மிடையில் கவியாண விஷயத்தில் வரதட்சணை சம்பந்தமாகச் சில தகராறுகள் நடந்தன. அதன் பின் இருவரும் ஒருவரைக் கண்டால் ஒருவர் பேசாமடந்தையாய் விட்டனர். இது காதலர்களுக்கு என்ன செய்யும். அவர்களின் முடிவு அசைக்கவியலாததாய்விட்டது.

அன்று காதலர்களின் சந்திப்பைக் தற்செயலாக ஸுறையாவின் தந்தை கண்டுவிட்டார். "இனிமேல் பாட்டியின் வீட்டுக்கு ஸுறையா போகக்கூடாது. வாலிபற்கும் உனக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இவ்வுத்தரவு தவறினால் பின்னர் நடப்பது வருந்தத்தக்கதாய் இருக்கும்," இவ்வாறு கடுமுத்தரவு போட்டார். இவ்வுத்தரவு காதலர்கள் வாழ்வில் துக்கத்தைத் தந்தது. பாட்டி மட்டும் வரதட்சணைக்கு விடிவு காலம் வருமென வாளா விருந்தாள்-சந்தர்ப்பத்தை நோக்கி.

ஒருநாள் காதலர் இருவரும் சந்திப்பதற்கு சந்தர்ப்பத்தை (10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1954 ஜனவரி மீ 17 ஆ

194 ஏ, தட்டா தெரு. போன்: 3411.

விவேகானந்த சபையின் தீர்க்கமான தீர்மானம்

கொழும்பு விவேகானந்த வித்தியாலயம் கொழும்பிலுள்ள மிகப்பெரிய தமிழ்ப் பாடசாலையாகும். இப்பாடசாலையை நிர்வகிக்கும் விவேகானந்த சபையில் கொழும்பிலுள்ள தமிழ்ப் பிரமுகர்கள் பலர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுள் சந்தர்ப்ப வாதிகள் சிலர் இருந்த போதிலும் தமிழ் அபிமானிகள் பலர் இருக்கிறார்கள் என்பது சமீபத்தில் அங்கு நடைபெற்ற ஒரு சம்பவத்திலுல் தெளிவாகியிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்பு விவேகானந்த சபையின் நிர்வாகக்குழு ஒன்று கூடி புது வருடத்துடன் வித்தியாலயத்தில் ஒரு சிங்கள ஆசிரியரை நியமிப்பதென்றும் சிங்கள வகுப்புகளை நடத்துவதென்றும் முடிவு செய்ததாம். தமிழ்ப் பொதுமக்கள் செய்த கிளர்ச்சியினுல் இந்த முடிவை கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய விவேகானந்த சபையின் விஷயாலோசனை கவுன்ஸில் ரத்துசெய்துவிட்டதாகத் தெரிகிறது. இதன் முழு விவரத்தையும் நமது அரசியல் விமர்சகர் பிறிதோர் இடத்தில் விவரிக்கிறார். நேயர்கள் படித்து அறிவார்களாக.

விவேகானந்த சபையின் விஷயாலோசனைக் கவுன்ஸில் ஒன்றுகூடிச் செய்த இந்தத் தீர்க்கமான முடிவை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் படிக்கவே கொழும்பில் பள்ளிக்கூடம் இல்லையென்ற நிலைமை ஏற்பட்டு வருகிறது. தமிழ்ப் பள்ளிக்கூடத்தின் அத்தியாவசியத்தை உணர்ந்த தமிழ்ப் பிரபலஸ்தர்கள் சிலர் ஒரு வாரத்திற்கு முன்புதான் கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலயத்தில் ஒன்று கூடி ஒரு தமிழ்ப் பாடசாலையை அமைப்பதற்கு பூர்வாங்க ஆலோசனையை நிசழ்த்தியிருக்கிறார்கள். தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்ப் படிப்பதற்கே திண்டாடும் நிலையில் விவேகானந்த வித்தியாலயத்தில் சிங்கள வகுப்புகள் நடத்ததிட்டமிடுவது மாதா கிண்ணிப் பிச்சையெடுக்க மகன் கங்கைக் கரையில் கோதானம் செய்யும் மடத்தனத்தை நிகர்த்ததாகும்.

தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் மாத்திரமல்ல மற்றும் எத்தனை பாஷைகள் வேண்டுமோ அத்தனை பாஷைகளையும் பயில்வது வரவேற்கத் தக்கதுதான். தமிழைத் தவிர, ஆங்கிலத்தைத் தவிர, மற்ற எந்தப் பாஷையையும் தமிழ்ப் பிள்ளைகள் பயிலக் கூடாது என்று கருதும் குறுகிய நோக்கம் நமக்கு கிடையாது. பற்பல பாஷைகளையும் கற்பதனுல் ஒருவன் அதிக அறிவைச் சம்பாதிக்கலாம் என்பதையும் நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனுல் இலங்கையின் அரசியல் இன்று இருக்கும் நிலையில் தமிழ் மக்கள் சிங்களம் கற்பது என்பது சிங்களப் பாஷை அரசாங்க மொழியாவதற்கு அனுசரணையாகவும் தமிழ்மொழி அழிந்தொழிவதற்கு காலாகவும் அமைந்துவிடும். இந்தக் காரணத்தினுல்தான் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களப் பாஷையைக் கற்பிப்பதை நாம் மூர்த்தண்யமாக எதிர்க்கிறோம்.

தமிழ்ப் பிள்ளைகள் எல்லாம் சிங்கள் பாஷையைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டால் இன்னும் ஐந்து வருட காலத்தில் என்ன சம்பவிக்கும் தெரியுமா?

அரசாங்க சேவையில் சேர விண்ணப்பிக்கும் இளைஞர்களிடமெல்லாம் ஒரு வினுப்பத்திரம் வழங்கப்படும். அதில் பெயர், ஊர், வயது முதலிய விவரங்களோடு ''உமக்கு சிங்களம் பேச, எழுதத் தெரியுமா?'' என்று ஒரு வினு இருக்கும். ''உமக்கு தமிழ்ப்பேச, எழுதத் தெரியுமா?'' என்று இன்னெரு வினு கேட்கப்படும்.

வேலை கிடைக்க வேண்டுமே என்ற ஆசையினுல் தூண்டப்பட்டு தமிழ்ப் பிள்ளைகள் எல்லோரும் முதல் கேள்விக்கு ''ஆம், சிங்களம் பேச எழுதத் தெரியும்'' என்று பதிலிறுப்பார்கள், ஆனுல் சிங்களப் பிள்ளைகளோ இரண்டாவது வினுவிற்கு ''இல்லை, தமிழ் பேச எழுதத் தெரியாது'' என்று பதிலிறுப்பார்கள்.

மேலும் ஐந்து வருஷங்கள் சுழிந்த பின்பு அந்தப் பத்திரங்களை அரசாங்கத்தினர் பவித்திரமாக வைத்துக் கொண்டு புள்ளி விவரத்தோடு கூடிய ஒரு அறிக்கையை வெளியிடுவார்கள். அதாவது ''அரசாங்க சேவையிலிருக்கும் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் சிங்களம் பேசவும் எழுதவும் தெரியும். ஆனுல் பெரும்பான்மையினருக்கு தமிழ் பேசவோ எழுதவோ தெரியாது. எனவே அரசாங்கத்தின் நிர்வாகச் செலவுகளையும் ஏனைய இடஞ்சல்களையும் குறைப்பதற்காக அரசாங்கத்தின் நிர்வாகத்தை சிங்களத்திலேயே நடத்துவது என்று முடிவு செய்கிறோம்'' என்று அந்த அறிக்கையில் கண்டிருக்கும். இப்படியாக சிங்களம் அரசாங்க மொழியாகிவிட்டால் பின்பு தமிழ் தலையெடுப்பதென்பது நடக்காத காரியமாகிவிடும்.

இப்போது தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களம் போதிக்க வேண்டும் என்று விரும்பும் தலைவர்களும், பாடசாலை அதிபர்களும், அரசியல் தீர்க்கதரிசனமற்ற இதரர்களும் இலங்கைத் தமிழ் மக்களை இந்த நிலைமைக்குள்ளாக்கி இலங்கையிலிருந்து தமிழ் மொழியை அழித்தொழிப்பதற்குத்தான் பாடுபடுகிறார்கள் என்பது திண்ணம்.

தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படிக்க வேண்டுமென்று சில மானங்கெட்ட தமிழர்கள் துடியாய்த் துடிக்கின்றார்களே, எந்த சிங்களத் தலைவராவது அன்றி சிங்கள மக்களாவது தங்கள் பிள்ளைகள் தமிழ்ப்படிக்கவேண்டுமென்று கவலைப் படுகிறார்களா என்பதை இவர்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? அன்றி அரசாங்கமாவது, அதன் கல்வி இலாகாவாவது சிங்களப் பாடசாலைகளில் தமிழையும் ஒரு பாடமாகவைக்க திட்டம் வகுத்ததுண்டா, ஏற்பாடு செய்ததுண்டா என்று கேட்கிறோம்?

சேர் ஜோனின் நரம்புகளில் சிங்கள இரத்தம் ஓடுகிறதாம்!

எனவே 'இந்தியர்' பிரச்னையில் சிங்களவர் நலவுரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டாராம்

[சுதந்திரன் அரசியல் விமர்சகர்]

மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரச்னை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் நேருவுடன் கலந்து பேசுவதற்கு நமது பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை கடந்த புதன் கிழமை காலையில் புறப்பட்டுப் போய்விட்டார். இதர பத்திரிகைகள் எல்லாம் ஆர்ப்பாட்டம் பண்ணுகிறபடி இந்த விஜயத்தினுல் பெரும்பயன் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை நமக்கு கிடையாது. இந்த சந்திப்பு தங்களுக்கு விமோசனத்தைக் கொண்டுவரும் என்று மலைநாட்டுத் தமிழர்கள் எண்ணுவார்களேயானுல் அவர்கள் ஏமாறவேண்டியதுதான். நமது அரசியல் ஜாஸியத்திற்கு மாறுக இப்பிரச்னை சுமுகமாகத் தீர்ந்துவிட்டால் அது நடவாதது நடந்துவிட்டது; ஒரு அதிசயம் சம்பவித்துவிட்டது என்று நாமும் மகிழ்ச்சிகொண்டாடத் தயாராய் இருக்கிறோம். ஆனுல் அந்த அற்புதம் நிகழுமா?

சேர் ஜோன் கொத்தலாவலையைப் பயணம் அனுப்புவதற்கு பற்பல பிரமுகர்களும், வெவ்வேறு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் விமான நிலையத்திற்கு சென்றிருந்தனராம். அப்படி சென்ற பிரதிநிதிகளுள் இங்குவாழும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் காணப்பட்டனர். இவர்கள் சேர் ஜோனுக்கு ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுத்து வழியனுப்பினர். எலுமிச்சம் பழத்தைக் கொடுப்பது ஒரு மங்களகரமான சகுனம் என்ற நம்பிக்கை அதைக் கொடுத்தவர்களுக்கு இருக்கலாம். ஆனுல் அதைப் பெற்றுக் கொண்டு சேர் ஜோன் உடனே மொழிந்த வார்த்தைகள் என்ன தெரியுமா?

''நான் உங்கள் எல்லோரையும் நாடு கடத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எனக்கு வாழ்த்துக் கூறி அனுப்புகிறீர்கள்!'' என்பதுதான்.

பிரதமரின் இந்தப்பேச்சைக் கேட்டதும் எலுமிச்சம்பழம் தானம் செய்த அந்த மகானுபாவர்களுக்கு முகம் சுண்டிப் போய்விட்டதாம்!

சேர் ஜோன் மேற்படி பேச்சை கேலியாகவோ அன்றி மனத்தில் எதுவித விகற்பமும் இன்றி சிறுபிள்ளைத் தனமாகவோ சொல்லிவிட்டார் என்று கொள்வதற்கில்லை.

கடந்த செவ்வாய்கிழமை இரவு கல்கிசையிலுள்ள மவுன்ட்லெவினியா ஹோட்டலில் கண்டிப் பிரதிநிதிகள் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு ஒரு விருந்தளித்தனர். அந்த விருந்தில் சேர் ஜோன், நேருவுக்கும் தமக்கும் இடையில் நடைபெறவிருக்கும் இந்த சந்திப்பில் இலங்கை இந்தியர் பிரச்னை ஒரு முடிவுக்கு வந்துவிடாதென்றும் வெறும் பூர்வாங்க ஆலோசனைகள் மட்டுமே நடைபெறும் என்றும் அந்தரங்கத்தில் வாக்குறுதியளித்ததாகத் தெரியவருகிறது.

மேலும் சிங்கள மக்கள் தம் உரிமைகளில் ஒரு துளியைத்தானும் விட்டுக் கொடுக்க வேண்டியதான எந்த முடிவுக்கும் தாம் ஒப்புதல் கொடுக்கப் போவதில்லை யென்றும் சேர் ஜோன் ஸ்திரமாகக் கூறினுராம். இப்படிக் கூறுகையில் அவர் உணர்ச்சி வசப்பட்டவராகி 'என்னுடைய நரம்புகளிலே சிங்கள இரத்தம்தான் ஓடுகிறதென்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். என்னுடைய இனத்திற்கு அழிவு வர நான் காலாயிருக்க மாட்டேன்'' என்று கூறியதாகவும் தெரியவருகிறது.

தொடர்ந்து அவர் பேசுகையில், 'இலங்கையின் தெருக்களில் சிங்களவர்கள் சர்வ சுதந்திரத்துடனும் பாதுகாவலுடனும் நடமாடுவதற்குவழிவகைகள் வகுப்பதே என் தூது கோஷ்டி இந்தியா செல்வதன் நோக்கமாகும்'' என்றும் 'சில தேசாபிமான மற்ற சிங்களவர்களின் நடவடிக்கைகளினுலேயே இலங்கை இந்தியர் பிரச்னை ஏற்பட்டது'' என்றும் கூறினுராம்.

சேர் ஜோனுடைய மேற்படி பேச்சைப்பார்க்கும்போது மலைநாட்டுத் தமிழர்களுடைய பிரச்னையை அவர் மனிதாபிமானத்துடன் நோக்குவார் என்ற நம்பிக்கை நமக்கு அறவே அற்றுப்போவது இயற்கையேயல்லவா? இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டுதான், இப்போது நிகழப்போகும் பிரதமர்கள்சந்திப்பில் ஏதாவது சமரச முடிவு ஏற்பட்டால் அது நடக்க முடியாதது நடந்துவிட்டதாகவே கொள்ளவேண்டும் என்றுஅபிப்பிராயப்படுகிறோம்.

இன்றைய இலங்கையில் தமிழ் மொழி சகல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றதான நிலையிலே, தமிழ் பிள்ளைகள் சிங்களம் கற்பதும், தமிழ் பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாகவைத்துப் போதிக்க ஏற்பாடு செய்வதும் புத்தியான செயலாகுமா?

கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் கொழும்பிலுள்ள மிகப் பெரிய தமிழ்ப் பாடசாலையான விவேகானந்த வித்தியாலயத்தை நிர்வகித்துவரும் விவேகானந்த சபையின் விஷயாலோசனைக் கவுன்ஸில் அவசரமாகக் கூடியபோது மேற்படி வினு கிளப்பப்பட்டதாகத் தெரியவருகிறது.

சில வாரங்களுக்கு முன்பு விவேகானந்த சபையின் நிர்வாகக்குழு கூடிற்று. தங்கள் சொந்த உயர்வுக்கும் செல்வாக்கிற்கும் அரசாங்கத்தின் அபிமானத்தையும் அனுதாபத்தையும் கவர வேண்டிய சிலர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். அரசாங்கத்திற்குத் தாங்கள் நல்ல பிள்ளைகள் என்று காட்டுவதற்காக அவ்வப்போது சிற்சில காரியங்களை இவர்கள் செய்வதுண்டு. சில மாதங்களுக்கு முன்பு ஒரு அரசியல் வாதியான மந்திரிக்கு நடைபெற்ற வரவேற்பில் சமயஸ்தாபனமான விவேகானந்த சபையையும் இந்த வகையில்தான் இவர்கள் சம்பந்தப் படுத்தினர்கள்.

கடந்த நிர்வாகக் குழு கூடிய போது, புது வருடத்துடன் விவேகானந்த வித்தியாலயத்தில் ஒரு சிங்கள ஆசிரியரை நியமித்து, சிங்கள வகுப்புகளை நடத்தி, தமிழ் மாணவர்களுக்கு சிங்கள பாஷையையும் போதிப்பதென முடிவு செய்யப்பட்டதாம்.

ஆனுல் இந்த செய்தி வெளியே தெரிந்தபோது சபையின் அங்கத்தவர்களும் பொதுமக்களும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ''சிங்கள அரசாங்கத்தினுல் நாட்டில் தமிழ்மொழி ஒதுக்கப்பட்டு வரும்போது விவேகானந்த வித்தியாலயத்தில் சிங்கள வகுப்பு ஆரம்பிப்பதை நாம் ஆட்சேபிக்கிறோம். உடனே பொதுச்சபை கூட்டுக'' என்று மிகப் பலர் கையொப்பமிட்டு ஒரு எதிர்ப்பு விண்ணப்பத்தை காரியதரிசியிடம் சமர்ப்பித்தார்கள். அதைத் தொடர்ந்து மற்றும் பற்பல இடங்களிலிருந்தும், கடந்த நிர்வாகசபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்காத அங்கத்தவர்களிடமிருந்தும்பலமான எதிர்ப்புகள் கிளம்பியதாகத் தெரியவருகிறது. எனவே விஷயாலோசனைக் கவுன்ஸில் அவசரமாகக் கூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய விஷயாலோசனைக் கவுன்ஸில் இப்பிரச்னையை நன்கு ஆராய்ந்தபோது பெரும்பான்மை அங்கத்தினரும் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்றோரும், தமிழ்ப் பொதுமக்களும் சிங்களவகுப்பு நடத்துவதை அறவே விரும்பவில்லையென்பது தெரியவந்தது.

எனவே சிங்களவகுப்பு நடத்துவது என்று நிர்வாக சபையினர் செய்த தீர்மானத்தை விஷயாலோசனைக் கவுன்ஸில் ரத்துச் செய்துவிட விரும்பியது. ஆனுல் அப்படிச் செய்தால் நிர்வாக சபையினரை அவமரியாதை செய்ததாகும் என்றும், உடனே அவர்கள்

(9—ம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் அனைத்திலும் தமிழை முதன் மொழியாகவும், ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் சிங்களத்தை மூன்றுவது கட்டாய மொழியாகவும், அதேபோல சிங்களப் பிரதேசத்திலிருக்கும் பாடசாலைகளில் சிங்களத்தை முதன் மொழியாகவும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் தமிழை மூன்றுவது கட்டாய மொழியாகவும் வைக்க அரசாங்கம் திட்டமிட்டால் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் கற்பதை நாம் வரவேற்க முடியும். ஆனுல் அப்படி மூன்றுவது கட்டாய மொழியைப் பற்றிய ஒரு கல்விக் கொள்கையை இன்னும் அரசாங்கம் உருவாக்கவில்லை. இந்த நிலைமையில் தமிழ்ப் பிள்ளைகள் மட்டும் வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்து சிங்களத்தை விழுந்து படித்துக்கொண்டு கற்பதானது முடிவில் தாய்மொழியான அருந்தமிழ் மொழியை நசித்து விடுவதற்கு உடந்தையான செயலாகவே முடியும். மொழியழிந்தால் பிறகு இனமேது, கலையேது, கலாச்சாரமேது? எல்லாம் சர்வ சிங்களமயமாகிவிட வேண்டியதுதான்!

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் தமிழ் பிள்ளைகளுக்கு சிங்கள வகுப்புகள் நடத்தும் தூரதிருஷ்டியற்ற பாடசாலை அதிபர்கள் இன்றைய அரசியல் நிலையையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நம் தாய்மொழியின் பேரால் அவர்களை இறைஞ்சிக் கேட்கின்றோம்.

தலை நகர் வாசிகளான விஷயம் அறிந்த தமிழர்களையும், இன்றைய அரசியல் நிலையை ஓரளவு உணர்ந்த பிரமுகர்களையும் அங்கத்தவர்களாகக்கொண்ட விவேகானந்தசபை, ''இப்போது சிங்களம் வேண்டாம்'' என்று செய்திருக்கும் தீர்மானம் யாழ்ப்பாணத்தில் சிங்களம் பயிற்றுவிக்கும் பாடசாலை அதிபர்களின் கண்களையும், வயிற்றுப் பிழைப்புக்காகத் தம் பிள்ளைகளைச் சிங்களம் படிக்கவைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசீயபாஷைகள் பற்றி 15 வருடங்களுக்கு புனராலோசனையே இல்லை

மக்கள் பாஷையில் ஆட்சி வருவது பற்றி கிலியே காரணமாம்

(நமது நிருபர்)

தேசிய பாஷைகள் சம்பந்தமான அரசாங்கத்தின் கொள்கையில் அடுத்த 15 வருடங்களுக்கு எந்த விதமான மாற்றமும், புனராலோசனையும் இராது என்று தெரிகிறது.

தேசிய பாஷை கமிட்டியால் தயார் செய்யப்பட்ட அறிக்கையை ஆலோசனை செய்த மந்திரிசபைக் கூட்டம் "தேசிய பாஷைகளில் அரசாங்கத்தை நடத்துவதற்கான காலம் வரவில்லை" என்று தீர்மானித்துள்ளது.

தேசிய பாஷைகளில் அரசாங்க கருமங்களைக் கொண்டு வர குறைந்த பட்சம் 15 ஆண்டுகளாவது வேண்டும் என்று மந்திரிசபை முடிவு செய்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த முடிவு தேசிய பாஷைகளில் ஆட்சி முறை வரவேண்டும் என்று விரும்பும் மக்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளதென்றும், 15 வருடங்கள் கழிந்த பிறகுகூட அரச கருமங்கள் நாட்டின் மொழிகளில் வரும் என்பது சந்தேகமானதுதான் என்றும் கருதப்படுகிறது.

மக்களின் பாஷையிலே ஆட்சி வந்துவிட்டால், அரசாங்க நடைமுறையில் பொது மக்கள் நேரடியான பங்கெடுக்க முன்வருவார்கள் என்றும் எனவேதான் மக்களை எட்டத்தில் வைத்திருப்பதற்காகவே அரசாங்கம் ஆங்கிலத்தை வைத்திருக்க விரும்புவதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

தம் பாஷை ஆட்சிமொழியாகும் என்று எண்ணியிருந்த சிங்கள மக்களிடையே யு. என். பி. யின் இந்த தீர்மானம் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதென்றும், இதைச் சமாளிப்பதற்காகத்தான் ஆட்சியாளர் இனவெறி பேச்சுகளில் இறங்கியுள்ளார்கள் என்றும் கருதப்படுகிறது.

லிபி இல்லாத மொழிகளுக்கு லிபி கொடுத்து அவற்றை உடனே அரசாங்க பாஷைகளாக்க மற்ற நாடுகளில் முடிகிறதென்றால் சிங்களத்தையும்—தமிழையும் ராஜ்ய மொழியாக்க ஏன் முடியாது என்று கேட்கப்படுகிறது.

சங்கிலியன் நாடகம்...

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவில் இருக்கும் மூத்தவர்களே ஈழத் தமிழ் மக்கள் சார்பாகக் கேட்கிறேன். இப்படியான ஒரு முடிவுக்கு வரமுன் இவர்கள் ஈழத் தமிழ் மக்களே உசாவியதுண்டா? வடநாட்டுப் புராணக் கதையாகிய இக் "காலவரிஷி"யைவிட நடிப்புக்குச் சிறந்த கதைகள் நம் தமிழ்நாட்டில் தமிழன் பண்பாட்டுப் பின்னணியுடன் இல்லையா என்று கேட்கிறேன். உண்டு, அநேகம் உண்டு: ஆனால் அவற்றைத் தெரிந்து நடிப்புக்குத் தகுந்த முறையில் வகுக்கும் ஆற்றல், அறிவு, அனுபவம் என்பன இந்நாடகக் குழுவில் இருப்பவர்களுக்கு இல்லை என்றே இவர்களின் கருமங்களில் இருந்து யூகிக்க வேண்டி இருக்கிறது.

இப்போதுதானும் ஒன்றும் மூழ்கிப்போய்விடவில்லை. "காலவரிஷி"யைக் கைவிட்டு தமிழனுக்கே உரியதான ஒரு சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளுமாறு இந்நாடகக் குழுவினரையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படித் தெரிந்தெடுக்கும் சக்தி குழுவினருக்கில்லாவிட்டால் அவர்கள் இது விஷயத்தில் வல்லாரின் ஒத்தாசையை நாட வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் அவர்கள் தம் கடையைக் கட்டிக் கொண்டு தம்பாட்டிற் போய்விட வேண்டும். அப்படிப் போய்விடுவார்களானால் அவர்கள் நம் தமிழினத்துக்குசேவை செய்பவராவர். தமிழனிடம் நல்ல கதைகள் இல்லை என்ற அபவாதம் நீங்கும்: அரசாங்கத்துக்கு சில ஆயிரம் ரூபாய்கள் மிஞ்சும்.

இதுவிஷயத்தில் ஈழத் தமிழ் மக்கள் வாளா விருப்பின் கெடுதி விளையும். ஆகவே அவர்கள் தங்கள் கண்டனங்களைச் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு ஆணித்தரமாக எடுத்துக்காட்ட வேண்டுமென்று தமிழ் மக்களையும் தமிழ்த் தாபனங்களையும் வேண்டிக் கொள்ளுகிறேன்."

"இளைஞர்களுக்கு தன்மான உணர்ச்சி ஏற்பட வேண்டும்"

நீர்கொழும்பு இளைஞர் ஆண்டு விழாவில் பேச்சு

நீர்கொழும்பு தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 2வது பெற்றோர் தின விழா 2-1-54ல் இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் திரு எஸ். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திருவாளர்கள் எம். பி. பாரதி, கே. எஸ். எம். கலாநேசன், மதுரை கா. இளஞ்செழியன், திருச்சி இளங்கீரன் ஆகியோர் சொற்பெருக்காற்றினர்.

திரு கலாநேசன் மறுமலர்ச்சி என்னும் பொருள்பற்றி பேசுகையில் இளைஞர்களே இன்னுட்டின் சிற்பிகள், ஓவியங்கள், மன்னர்கள் என்றும், இளைஞர்களாலே நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியும் என்றும், செஞ்சீனுவை குடியரசு நாடாக்கியதும் பாகிஸ்தானை சுதந்திர நாடாக்கியதும், இன்று திராவிட நாட்டிலே தமிழுக்காக அறப்போர் நடத்துவதும் அன்னுட்டு இளைஞர்களே! என்று கூறினர்.

மதுரை திரு கா. இளஞ்செழியன் பேசுகையில் தரணி ஆண்ட தமிழர்கள் தன்மானத்தை இழந்து தவிக்கின்றனர். தன்மான உணர்ச்சி ஏற்பட வேண்டும். தமிழ்நாடு பிரிய வேண்டும் என்று கூறி இங்கு தமிழ் சில பகுதியில் வதைபடுகிறது. விளம்பரப் பலகைகளில் தமிழ் சிதைந்துகிடக்கிறது. அவைகள் எல்லாம் இந்த இளைஞர் முன்னேற்றக் கழகம் திருத்த வேண்டும் என்று கூறினர்.

பின் தமிழர் கலாச்சாரம் என்பதுபற்றி திருச்சி திரு இளங்கீரன் பேசுகையில் சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற பழம் பெரும் காப்பியங்களை எடுத்து கலாச்சாரத்தைப்பற்றி விளக்குவதைவிட இன்று நம் வாழ்க்கையில் இருந்துவரும் கலாச்சாரத்தை எடுத்துப் பேசுவது—திருத்துவதுமேல் என பலசான்றுகளைக் கூறி விளக்கினர்:

கழகச் செயலாளர் திரு அ. மயில்வாகனம் பேசுகையில் இக் கழகத்தின்பால் சிலர் தப்பான கருத்துக்களை பெற்றோர்களிடம் பரப்பியுள்ளார்கள் என்றும் சாதி சமய வேறுபாடின்றி யாவரும் அங்கத்தவர் ஆவர். இது—கண்யம்—கட்டுப்பாடு—ஒழுக்கம்—இவைகளால் உருவாக்கப்பட்டது என்றும் கூறினர்:

கடைசியில் கழக உறுப்பினர்களால் "பழிக்குப்பழி" என்ற ஒரு நாடகம் நடந்த பின் செயலாளரால் நன்றி கூறியதும் கூட்டம் இனிது கலைந்தது.

சேர் ஜோனின்.....

[8-ம் பக்கத்தொடர்ச்சி]

ராஜினமாச் செய்யவேண்டி வரும் என்றும் கட்டிக் காட்டப்பட்டதாம். ஆகவே நிர்வாக சபையினரையும் காப்பாற்றுவதற்காக அவர்கள் செய்த தீர்மானத்தை ரத்துச் செய்வதைவிட அத்தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில்லையென்றும் அதைக் காலவரையறையின்றி ஒத்திப் போடுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பரோபகாரம்

மனிதன் தன் வாழ்க்கையை சமூக சேவையிலும் பரோபகார எண்ணத்துடனும் வாழ்வானேயானால் அவன் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்திற்கு உரியவனுகிறான் என்பதை விளக்கும் சோபா பிலிம்ஸாரின் பரோபகாரம் இப்பொழுது கொழும்பு சென்றல் திரையில் காண்பிக்கப்படுகிறது.

பணத்தினால் எதையும் சாதிக்கலாம் என்ற எண்ணம் கொண்ட பணக்காரன் அன்பே உருவாக விளங்கிய ஒரு குடும்பத்தை நாசமாக்கி பிரித்து வைக்கிறான். கணவனையும், பச்சிளங் குழந்தையையும் இழந்த ரமா தற்கொலை செய்ய துணிகிறாள். ஒரு சாதுவால் காப்பாற்றப்பட்டு சமூக சேவையே தனது குறிக்கோளாகக் கொண்டு இழந்த கணவனையும், மகனையும் மீண்டும் அடைய பாடுபடுகிறாள்: மனைவியை இழந்த ரமேஷ் பைத்தியக்காரனாக நடமாடுகிறான். [illegible] பாப்பா, ரகுநாதன் [illegible] சமூகப் படம்.

பெயருடன் அனுதை ஆஸ்ரமத்திலே வளர்ந்து பெரியவனுகிறான். இவர்கள் குடும்பத்தை பிரிக்க உதவிய கொள்ளைக்காரன் வஞ்சகமும், சூதும் நிறைந்த பெரிய மனிதர்களின் பித்தலாட்டங்களையும் கொடிய பாதையிலே சேர்த்த பணத்தால் கொடுமையே விளையும் என அறிந்து திருந்தி ரகுவைக் காப்பாற்றி அவர்களை பிரித்த பணக்காரனை சட்டத்தின் முன்னிலையில் நிறுத்துகிறான்.

ரமேஷாக முக்கமாலா கிருஷ்ணமூர்த்தி நடித்திருக்கிறார். ரமாவாக ஜி. வரலட்சுமி நடிக்கிறார். ஆஸ்ரம தலைவராக வரும் சி. வி. வி. பந்துலு தனக்கு கொடுக்கப்பட்ட பாகத்தை கச்சிதமாக நடித்துள்ளார். ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு குறை சொல்வதற்கில்லை, கதை அமைப்பு விறுவிறுப்பாக செல்கிறது. மொத [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து மேடை:

ஆராய்ச்சி முடிவென்பது அடுத்தவர் இரவல் கருத்தா?

"குற்றம் குற்றமே" என்ற நக்கீரன் பரம்பரையில் மெய்ப்பொருள் காண்பதே அறிவு

[மு. சுந்தராசு]

"ஹம்லத்" என்னும் ஆங்கிலப் படத்தைத் திரைப்படமாக்கு முன்னர் சேர் லோறன்ஸ் ஒலிவர் அறிஞர்கள் பலரை கலந்தாலோசித்து அதைத் திரைப்படமாக்கினர் என்று திரு கணேசலிங்கம் கூறியதைத் தவறு என்றும் சேர் லோறன்ஸ் ஒலிவர் தமது அறிவிலும் ஆற்றலிலும் அவருக்கு அவ்வளவு அவநம்பிக்கை என்றும் திரு என். தர்மலிங்கம் தமது கருத்தைக் கருத்துமேடையில் ஏற்றியிருக்கிறார்.

ஒவ்வொரு துறையிலும் மறுமலர்ச்சி கண்டுவரும் இந்நாளில் பயனுடைய ஆராய்ச்சிகளை வரவேற்கத் தக்கதே. காவியமானாலும்சரி அல்லது சரித்திரமானாலும்சரி அல்லது வேறு எதுவாயிருந்தாலும்சரி அது மக்களுக்குப் பயன் விளைக்க வேண்டுமானால் மக்கள் அனைவரும் விரும்பத்தக்க வகையிலும் விளங்கிக் கொள்ளும் முறையிலும் அதற்கு விளக்க முடன் விரிவுரை தரல்வேண்டும்.

எதுசரி எது தவறு என்பதை யறிந்து முடிவு கட்டுவது எப்படி இரவல் கருத்தாக முடியும்?

ஔவை என்றொரு தமிழ்ப் பெரும் மூதாட்டி தமிழ் நாட்டில் இருந்தாள் என்பதை நூற்றுக்குப் பத்துபேர் வீதம் கூட அறியமாட்டார்கள் என்பதற்காகவேண்டி சரித்திரம்காணுதற்பனைகளைப் புகுத்தி ஔவையைப்பற்றி அறியாத மக்களுக்கு பொய்யைக் கூறி நம்பும்படி செய்வதுதான் அறிவாளிக்கு அழகா!

"தமிழனின் உயர்ந்த பண்பு எதுவெனில் ஒருவன் செய்த காரியத்தையிட்டு குறைகூறுதிருப்பதே ஆகும் என்னுதை தமிழ் அறிஞர்கள்—தமிழ்ப்பண்பாடுமிக்கவர்கள் அறியவேண்டும்' என்று கூறுகின்றார்கள். யார் என்ன செய்தாலும் அது தவறு? இல்லையா? என்று அறியக் கூடாதா? தவறு என்றுமுள் எடுத்துக் கூறக் கூடாதா? அவர்கள் கூறுவது போன்று விட்டுவிட்டால் தவறு செய்தவன் தன் தவறை உணர்வது எப்படி? அவன் திருந்துவது எப்படி? அல்லது தவறு செய்தவன் எப்பொழுதும் செய்துகொண்டே இருக்கட்டும் என்பதுதான் அவர்கள் எண்ணம்போலும். "ஒருவன் செய்த காரியத்தை குறை கூறுமல் இருப்பதே தமிழனின் உயர்ந்த பண்பு" என்று எந்த தமிழ் இலக்கியங்களும் கூறவில்லை. எதையும் குறை கூறுமல் இருப்பதே தமிழன் பண்பு என்று கூறுபவர்கள்,

"எப்பொருள் யார் யார்
வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு"
"எப்பொருள் எத்தன்மை
தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு"

என்று வான்புகழ் கொண்ட வள்ளுவர் வாய் மொழிக்கு என்ன பதில் கூறமுடியும்?

"போர் வேண்டாம்" என்று அறம் வேண்டிச் சென்ற பாரியின் முதுகில் அம்பெய்து கொல்கிறான் மூவேந்தர் படையைச் சேர்ந்தவன். இது மூவேந்தர் வீரத்திற்கு இழுக்கல்லவா?" என்று அன்பர் கணேசலிங்கம் கேட்கின்றார்; ஆனால் "அது இழுக்கல்ல" என்று வாதிக்கிறார் நண்பர் தர்மலிங்கம். எதிரியை பின்னிருந்து தாக்கி வெற்றிகண்டதாக தமிழன் சரித்திரத்தில் காணக்கிடக்கவில்லை. அப்படியிருந்தும் அன்பர் தர்மலிங்கம் உலகம் போற்றும் உத்தமர் காந்தியைச் சுட்டுக் கொன்றது ஒரு இந்தியன்தானே? அது இந்தியருக்கு இழுக்கில்லையா? என்று கேட்கிறார்.

காந்திஜியைக் கொன்ற கடனைப் பார்த்து பாரதமும்—ஏன் அகிலம் அனைத்தும்வெறுத்தது. இந்திய மக்கள் தங்கள் அண்ணலின் இன் உயிரைப் பலியிட்ட பாவியை தூக்குமரத்திலே தொங்கவைத்தனர். செம்மலைக் கொன்ற கறையை இமயம் போலெழுந்து துடைத்தது இந்தியா.

ஆனால் படத்திலே புறமுதுகிட்டுக் கொல்லும் பாவியின் செயலை மூவேந்தர்கள் ஒறுத்ததாகக் காட்டப்படவில்லை; அவர்கள் ஆசியும் அனுமதியும் உண்டென்பதே புலனுகிறது: எனவேதான் இது தமிழன் பாரம்பர்யத்திற்கு இழுக்கு என்கிறோம்.

கேட்டுப் பாருங்கள்

மிஸ்டர் குயுக்தியார், பொங்கலையொட்டி ரஜாவில் போய்விட்டதால் இவ்வாரம் "கேட்டுப் பாருங்கள்" வெளிவரவில்லை. அடுத்த வாரம் வழக்கம்போல் வெளிவரும். —ஆசிரியர்

"பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவில கால வழுவகையினானே"

என்பது நன்னூல் சூத்திரம்.

இந்த இலக்கண வழிப்படி ஒவ்வொரு துறையிலும் உள்ள பயனற்ற பழைய விதிகளுக்கு சீட்டு கிழித்துவிட்டு மக்களின் வாழ்க்கைக்குகந்த முறையில் புதிய கருத்துக்கள் வெளிவர வேண்டும். இது மறுமலர்ச்சிக் காலம். பழைய இலக்கியங்களும் புதுமை அடைகின்றன.

ஒருவர் முன்கூட்டியே ஒரு கருத்தை முடிவு கட்டிக்கொண்டு தமது கருத்தை உறுதிப்படுத்துவதற்கும், தனது கருத்தை நிலை நாட்டுவதற்கும் ஆதாரங்களைத் தேடுவது உண்மை ஆராய்ச்சியாக முடியாது. ஆராய்ச்சியாளர்களுக்கு எப்பொழுதும் நடுவு நிலைமை உள்ளம் வேண்டும்.

ஆகவேதான் சேர் லோறன்ஸ் ஒலிவர் தமது ஆராய்ச்சியை முடிந்த முடிவாகக் கொள்ளாமல் மேலும் தொடர்ந்து ஆராய்வதற்காக நடுவு நிலைமை வகித்து, பல அறிஞர்களை கலந்தாலோசித்து அதன் பின்னரே "ஹம்லத்" என்னும் கதையைத் திரைப்படமாக்க முனைந்திருக்கிறார். சேர் லோறன்ஸ் ஒலிவர் கையாண்ட முறை எப்படி தவறு என்று கூறமுடியும்?

மேலும் சேர் லோறன்ஸ் ஒலிவர் மேற்கொண்ட முறையை தமது அறிவிலும் ஆற்றலிலும் அவநம்பிக்கை அதிகம் என்று கூறுவது பொருந்துமா?

சரித்திர சம்பந்தமான கதையை ஆராய்ச்சியாளர் மூலம் தெளிவு படுவது எந்த விதத்தில் தயாரிப்பாளரை சிறுமைப்படுத்தும்? இதில் சொந்தக் கருத்து—இரவல் கருத்து என்று சடைப்பதற்கு என்ன இருக்கிறது? உண்மையான கதையை ஆராய்ச்சி முடிவுடன்—உயர்ந்த பண்புடன் வெளியிடுவதுதானே கலைத் தர்மம்? ஒருவர் தாம்கொண்ட [illegible] ஆராய்ச்சியாளர்களின் ஆலோசனைக்குவிட்டு

வறுமை-வெறுமையில் திண்டாடும் தீவுப் பகுதிமக்கள் நிலை

ஓட்டைப் படகில்உயிரை பணயம் வைத்து அலை கடலலையும் பரிதாபம்

கல்வி-சுகாதாரவசதிகள் மறுக்கப்படுகின்றன

வடஇலங்கையில் சகல துறைகளிலும் பின்தங்கிக் கிடக்கும் ஒரு பிரதேசத்தைப் பார்க்கவேண்டுமானால் ஒரு யாத்திரிகருக்கு யாழ்ப்பாணப் பட்டினத்தின் தென் பாகத்தே பரவிக்கிடக்கும் தீவுகளுக்குச் செல்லுமாறு ஆலோசனை கூறுவது பயனுடையதாயிருக்கும். இலங்கைத் தேசத்திலேயே மிகப் பிற்போக்கான நிலையிலுள்ள இடங்களில் இந்தத் தீவுப் பகுதியுமொன்று. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என் பனவற்றில் மிகப் பின்தங்கியுள்ள இத் தொகுதி ஜனநாயக உணர்ச்சியிக்க எந்தச் சிந்தனையாளனின் மனதையும் கொதிக்க வையாமலிராது.

கடந்த காலத்தில் தீவுப் பகுதி மக்களைக் கவனிப்பாரெவருமிலர். அடிமையாட்சியின்போது தீவுப் பகுதி மக்கள் அடைந்த கஷ்டநஷ்டங்கள் அளப்பில. பிரயாணக் கஷ்டங்கள், கல்வித்துறைக் கஷ்டங்கள் அவர்கள் நல்வாழ்வை நசுக்கிய இரு பெரும் பூதங்களாகும். 'சுதந்திரமடைந்துவிட்டோம்' எனக் கூறப்படும் இப் போழ்தும் தீவுக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்றவில்லை. இதற்கு விடிவேயில்லையா? தீவுப் பகுதி மக்கள் துயர் தீராதா?

காரணம் என்ன?

தீவுப் பகுதி மக்கள் ஏன் இந்த இழிநிலைக்கு ஆளானார்கள்? இலங்கையின் மற்றைய பிரதேச மக்களளவுகூட முன்னேற முடியாது என் முடங்கிக்கிடந்தார்கள் என்பதை நாம் முதல் அறிந்து கொள்ள வேண்டும். ஊர்காவற்றுறை (உடன் தீவு) காரை தீவு, எழுவை தீவு, அனலை தீவு, நயினை தீவு, நெடுந் தீவு, புங்குடு தீவு என்பன தீவுப் பகுதியாகும். இலங்கைப் பாராளுமன்றத் தொகுதிகளில் இதுவுமொரு தொகுதி. இத் தொகுதிக்கும் ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டு(!)ப் பாராளுமன்றத்தில் உறங்கிக்கொண்டிருக்கிறார். இந்தத் தொகுதி ஏழு தீவுகளைத் தன்னுளடக்கியிருக்கிறதென்பதை நாம் முன்னர் கண்டோம். ஏழு தீவையும் கடல் பிரித்து நிற்கின்றது. இயற்கையின் வஞ்சனை இது!

ஆனால் பெரும் இளர்ச்சிகளின் பயனுக காரை தீவு (காரைநகர்) யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும், புங்குடு தீவு கூடன் தீவுடனும் பாலம்மூலம் இப்பொழுது இணைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த காலங்களில் இத்தீவு மக்கள் பிரயாணக் கஷ்டங்களினால் பட்ட அவதிகள் மிகப் பல. இப்பொழுது சிறு வசதியுண்டாகியிருக்கிறது. எனினும் ஏனைய தீவுகளைப் பொறுத்தமட்டில் பிரயாணக் கஷ்டங்கள் "பழைய கறுப்பனே கறுப்பன்", "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற பழமொழிகளுக்கிணங்க ஒரு சிறிதும் மாற்றமடையாமலே இருந்து வருகின்றன. தேர்தல் காலத்தில் நெடுந்தீவு மக்களுக்கு பிரயாணக் கஷ்டத்தைத் தீர்த்துவைக்க 'ஹெலிகொப்டர்' விமானம் வாங்கித் தருவதாக வாக்குறுதியளித்த அபேட்சகர் வெற்றிபெற்றும் சொன்ன சொல்லை நிறைவேற்றாதுவிட்டதின் மர்மமென்னவோ? அவ வாக்குறுதி "பொய்யாய்ப் பழங் கதையாய்ப்போய்"விட்டது!

அக்கம்பக்கத்தில் அரை மைல் ஒரு மைல் தொலைவிலுள்ள அயல் தீவுகளுக்குச் சென்று வர இரண்டு நாள் மூன்று நாள் செலவாகின்றது. மணிக்கு ஆயிரம் மைல் பிரயாணம் செய்யும் இந்த விஞ்ஞான யுகத்தில்! நெடுந்தீவும், நயினை தீவும், அனலதீவும், எழுவைதீவும் அரசினரின் ஓட்டை இயந்திரப் படகையும் தனிப்பட்ட முதலாளிகளின் 'நாய் வண்டில்களையும்' (இது தீவு மக்களின் பரிபாஷை!) பிரயாணத்துக்கு எதிர்பார்த்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. அலை கடலில் அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு விடும் கண்ணீர் இந்தக் கல்நெஞ்சு படைத்த இலங்கை அரசாங்கத்தையும் தீவுப் பகுதிப் பிரதிநிதியையும் சும்மாவிடுமா? "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்" என்கிறார் ஒரு தமிழ்ப் பெரியார்.

வைத்திய வசதிகள்

துணை கஷ்டங்கள். மற்றத் துறைகளிலாவது மக்கள் நிறைவுடன் வாழ வழியுண்டா! இல்லவே இல்லை. இப்பொழுது எங்கோ மூலைக்கொன்றாக இரண்டொரு மருந்துச்சாலைகளும், பிரசவவிடுதிகளும் திறக்கப்பட்டபோதும் தீவுப் பகுதி மக்கள் அவற்றால் வேண்டிய வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தீவுக் கொன்றாக அரசினர் மருந்துச் சாலைகளிருக்கின்றன. அங்கே போத்தல்கள் இருக்கும். மருந்து இருக்காது! கட்டிடம் இருக்கும் படுக்கைகள் இருக்காது! கதிரைகள் இருக்கும் டாக்டர்கள் இருக்க மாட்டார்கள். நேர்சுகள் இருப்பார்கள் அவர்களுக்கு மூளை இராது. இந்த அழகில்தான் அவை வைத்திய வசதிகள் அளித்துக் கொண்டிருக்கின்றன.

(நாவேந்தன்)

சில அரசினர் ஆஸ்பத்திரிகள் பெரும் பெரும் நடனசாலைகள்-இளைப்பாற்று விடுதிகள்போல இருக்கின்றன. டாக்டர்கள், நர்ஸ்கள், அட்டென்டன்கள் யாவரும் நன்றாகக் குடித்துவிட்டு மதுப் போதையில் நடனமாடுவது சாதாரண சம்பவம்! இந்தத் திருவிளையாடல்களினால் தீவுப் பகுதியின் சனத்தொகை குறைந்து வருவது ஒரு பெரிய 'ஆறுதல்' தரும். 'சிறு வயதில் சாகிற வர்களைக் கடவுள் அதிகமாக நேசிக்கிறார்' எனக் கிறுவாய் மலர்ந்தருளிய நமது பிரதம மந்திரியாருக்கும்! பிரயாணத்துறையில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களும் இத்தகைய ஒரு சூழ்நிலை வளர நல்ல உதவியளிக்கின்றன.

கல்வித்துறையிலே பிற்போக்கு

பிரயாண வசதிகள், வைத்திய வசதிகள் இல்லாத்தன்மையையும் அவற்றால் விளையும் இன்னல்களையும் இதுவரை அறிந்தோம். கல்வித்துறையைப்பற்றிச் சிறிது கவனிப்போம். ஊர்காவற்றுறையிலே ஒரு கத்தோலிக்க ஆங்கிலக் கல்லூரியும், காரைநகரிலே இரு ஆங்கிலக் கல்லூரிகளும் இருப்பதால் குறிப்பிட்ட இடங்கள் ஓரளவுக்கு முன்னேறியுள்ளன என்பது கண்கூடு. ஆனால் மற்றைய இடங்களின் கதியென்ன? அரசினர் கனிஷ்ட ஆங்கில பாடசாலைகள் சமீபகாலத்தில் ஒவ்வோர் தீவிலும் தோன்றின. அவற்றுள் புங்குடு தீவு (அனல தீவு, எழுவை தீவு, இரு தீவுகளிலும் இப் பாடசாலைகள் இல்லை) தவிர்ந்த மற்றைய தீவுப் பாடசாலைகள் ஓரளவு முன்னேறியுள்ளன. புங்குடு தீவில் இப் பாடசாலையில் இரவில் ஆடு, மாடுகளும் பகலில் பொழுது போக்க வழியற்ற சில 'மந்தைகளும் மேய்ப்பர்களும்' காலங்கழிக்கிறார்கள்.

தக்க முறையில் நடைபெறும் ஆங்கிலக் கலாசாலை ஒன்றுகூட ஒரு தீவிலுமில்லை. இதனால் தீவு மக்கள் கல்வித்துறையில் காத தூரம் பின்னே கிடக்கிறார்கள். தீவு மக்கள் படிப்பில் மகாசூரர்கள். எந்தக் கல்லூரியில் படித்தாலும் முதலிடம் அவர்களுக்குத்தான் என்பதை அனுபவத்தில் பலமுறை கண்டுள்ளோம். அத்தகைய விவேகமுள்ள மக்களைத் தலைமுறை தலைமுறையாகக் கல்வித்துறையில் பின்தங்க வைத்திருக்கும் கயமைத்தனத்தை யாரிடம் முறையிடுவது? ஆட்சிபீடம் இதை என்று கவனிக்கும்? வருடாவருடம் தீவுப் பகுதி மக்கள் தம் பிள்ளைகளின் கல்விச் செலவு என்ற சாக்கில் பெருந்தொகைப் பணத்தை வெளியிடங்களுக்கனுப்பித் தாம் வறுமை வயப்பட்டு வாடுகின்றார்கள். இந்த அவலநிலையை யார் போக்குவது? யார் உண்மைக்காக உழைப்பது?

வெளியேறுகிறார்கள்!

தம் பிள்ளைகளின் கல்வி விருத்திக்காகப் பட்டின வாசஞ் செய்வதே நல்லது என்ற எண்ணம் தீவுப் பகுதி மக்கள் மனதில் பெரும்பாலும், நடுத்தர வகுப்பினர் மனதில் இப்போது மேலோங்கி வருகின்றது. அதற்காக அவர்கள் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்கூடாகப் பட்டின வாசஞ் செய்யக் கிளம்பிவிடுகிறார்கள். இந்தக் காரணங்காட்டி வெளியேறுபவர்கள் தொகை நெடுந் தீவு, நயினை தீவு, அனலை தீவு, புங்குடு தீவு முதலிய இடங்களில் நூற்றுக்கு முப்பது சதவிகிதமாக இப்பொழுது அதிகரித்திருக்கிறது. இதன் முடிவு தீவுப் பகுதியையே சிலவேளை காலியாக்கிவிடவுங்கூடும்! இத்தகைய வெளியேற்றம் நல்லதா கூடாதா என்பதைச் சிந்திப்பாரில்லை! தீவுக்கொரு ஆங்கிலக் கல்லூரி இருப்பின் தாய் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய அவசியமும் இல்லை. அத்தகைய சூழ்நிலையைத் தீவு மக்கள் விரைவில் ஆக்கிக்கொள்ள வேண்டும். இன்றேல் குடியேற இடமின்றி (பட்டினத்தில்தான்?) 'திரிசங்குசுவர்க்கம்' சேர வேண்டிய நிலைமை தீவுப் பகுதி மக்களுக்கு நிச்சயம். தீவுப் பகுதியைச் சேர்ந்த பெரியார்களும். நல்லவர்களும் இதுவிஷயத்தில் சிரத்தையெடுக்க வேண்டும்.

பட்டின வாசஞ் செய்ய வெளியேறுவோர்களில் அநேகர் தமிழ் ஆசிரியர்கள். இவர்களில் கடந்த தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ்-யூ. என். பி. கலப்பின் பிறப்பான ஒரு அபேட்சகரை அதரித்தவர்களின் தொகையே அதிகமாக இருக்கிறது. அவர் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகள் பற்றி இவர்கள் இப்போது கேட்க என் மனங்கூசுவான்? அல்லது இந்த 'வெளியேற்றத் திட்டமும்' அந்த வாக்குறுதிகளில் ஒன்றாக இருக்குமோ தெரியாது!

தீவுப் பகுதி மக்கள் இனியும் வாய்பேசா விரதம் பூண்டிராது தமது பிரதிநிதியையும், அரசாங்கத்தையும் தட்டியெழுப்பி உரிமை கேளப் பெறும் காலம் கிட்டிவிட்டதென்பதை உணர வேண்டும்.

படத்திலே உள்ளது தங்க பைசிக்கிள். கல்கத்தாவைச் சேர்ந்த திரு. ஜே. டி. நண்டி தனது 19 வயது புதல்வனின் பிறந்த தின பரிசாக இந்த தங்க பைசிக்களுக்கு ஆடர் செய்தார். லண்டனிலுள்ள ஒலிம்பியாவில் மோட்டார் சைக்கிள் காட்சியின்போது இந்த சைக்கிள் வைக்கப்பட்டிருந்தது. இதன் விலை ரூபா 2600

ராணியார் வைபவத்தை கலைஞர்கள் பகிஷ்கரிக்கலாம்

கண்டி நடன நிகழ்ச்சியை ரத்து செய்வதன் விளைவு

தேசிய கலை அவமானப்படுத்தப் படும்போது கலைஞர்கள் வாளாதிருக்க முடியாதாம்

[நமது நிருபர்]

பிரிட்டிஷ் ராணி எலிஸபத்தின் இலங்கை விஜயத்தின்போது அவருக்கு அளிப்பதற்காக கொழும்பிலும், கண்டியிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் கலா வைபவங்களை, பிரசித்தி பெற்ற கண்டி நடன வல்லுனர்களான திரு குணேயும், சேடர்மனும் பகிஷ்காரம் செய்வது என்று தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது'

கொழும்பிலுள்ள ரீகல் மண்டபத்தில் இருபது நிமிடங்கள் கண்டி நடன நிகழ்ச்சி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்தை கலைச் சங்கம் ரத்து செய்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

கண்டி நடன சங்கீதக் கருவிகள் பிரிட்டிஷ் ராணியாரின் செவிகளுக்கு இரைச்சலைக் கொடுக்கும் என்ற காரணத்தாலேயே இந்த நிகழ்ச்சி ரத்து செய்யபட்டதாக அறியப்படுகிறது.

தேசிய சங்கீதக் கருவிகள் இல்லாது ஐந்து நிமிடத்திற்கு சிறிய ஒரு கலா நிகழ்சி நடத்துமாறு இவர்கள் கேட்கப்பட்டுள்ளார்களாம். ஆனால் கண்டியில் சில நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று தெரியவருகிறது.

"கொழும்பில் நிகழ்ச்சி நடத்த மறுத்தால் நாம் ராணியாரை ஒட்டிய எந்த வைபவத்திலும் கலந்துக் கொள்வதில்லை" என்று திரு குணேயும் சேடர்மனும் நமது நிருபரிடம் கூறினார்கள்.

"கண்டி நடனத்தை கம்பளம் விரித்த மேடையில் ஆட முடியாது என்று சிலர் எண்ணுகிறார்கள். கண்டி நடனத்தை இவ்வளவு கேவலமாக இவர்கள் பார்ப்பதைப் பார்த்து தன் மானமுள்ள கலைஞர்களும்—பொது மக்களும் வாளாதிருக்க முடியாது. ராணி வருகைக்கு தேசிய விழா எடுப்பு நடத்துகிறார்களே அங்கு தேசியக் கலைக்கு இடமில்லை யென்றால் நாட்டின் கௌரவம், மக்களின் கலாப் பாரம்பர்யத்தின் பெருமை கேலி செய்யப்படுகிறது என்று தானே அர்த்தம்" என்று சொன்னார்கள்.

தேசியக் கலையை கேவலப் படுத்தும் இந்த போக்கை எதிர்த்து நாட்டிலுள்ள கலைஞர்கள் எல்லாரும் ராணி வைபவத்தை பகிஷ்கரிக்கலாம் என்றும் இது கண்டி நடன கலைஞர்களிடம்பெரும் அதிருப்தியையும், வெறுப்பையும் கிளறிவிட்டுள்ளதென்றும் கருதப்படுகிறது.

இதை எதிர்த்து நாட்டிலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலாரசிகர்கள் சங்கங்களும் மற்றும் பொது ஸ்தாபனங்களும் தமது எதிர்ப்பை பிரகடனப் படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமாக ஒரு பரஸ்பர முடிவுக்கு வர முடியவில்லையென்றால் முழு வைபவத்தையும் நிராகரிப்பதாக கலைஞர் ஒன்றுபடுவர்.

தந்தையர்தடையை..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக்கித் தர எண்ணினாள் பாட்டி. இருவருக்கும் சொல்லி வைத்தாள். குறித்த நேரத்தில் தண்டை (கழல்) கலகலக்க, முத்துக்கொலிசம் காலில் மின்ன, அன்ன நடை நடந்து வந்து சேர்ந்தாள் ஸுறையா. பாட்டியின் வீட்டுக்கு வாஹித் இன்னும் வந்து சேரவில்லை. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேடிக்கை பார்க்க வெண்ணினாள் பாட்டி. ஸுறையாவை வீட்டு மூலையில் ஒளித்திருக்கச் செய்துவிட்டு தான்மட்டும் வாஹித்தின் வரவுக்காக வாசல் திண்ணையில் காத்திருந்தாள். வந்தான் வாஹித். தன் காதலிக்குப் பதிலாக பாட்டி மட்டும் இருப்பதைக் கண்டான். ஏமாற்றமடைந்தான். அவன் முகம் வெளுத்தது நாவரண்டது. வாசலைப் பார்த்தான். ஏதோ ஒன்றைக் கண்டவன்போல்,

"தண்டை பதிந்திருக்கு கொலிசம்
இழுபட்டிருக்கு
அன்ன நடை இன்னிக்கு இங்கு
ஆருவந்து போனபாட்டி?"

என்று உணர்ச்சி மேலிட, துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டான் பாட்டியிடம். சந்தர்ப்பத்தை எண்ணியிருந்த பாட்டி வாஹிதைத் திணற அடிக்க எண்ணி உன்னதமான ஒரு போடுபோடுகிறாள்.

.....

"கேலியடாபண்ணவந்தாய் உண்ட
கிளியிருந்து போகுதுடா"

என்று கூறி வேடிக்கை பார்க்கிறாள்.

தனக்காக வந்த காதலி தன் வரவு பிந்தியதால் திரும்பிவிட்டாளேயென்று ஏங்குகிறான். "உன் கிளியிருந்து போகுதுடா" என்று பாட்டி சொன்னதும் ஆயிரம் ஈட்டிகொண்டு அவன் நெஞ்சைத் தாக்குவதுபோல் இருந்தது அவனுக்கு. தான் இனி ஏன், எதற்காக இருக்க வேண்டும் உலகில் என்று எண்ணினான். அவன் துக்கத்தின் பக்கத்தில் எழுந்த மன எண்ணத்தை

"வாளில் விழுந்திடட்டோ
வன்கொலையாய் செத்திடட்டோ
கடலில் விழுந்திடட்டோ என்
கண்மணியாள் எங்கே பாட்டி"

என்று கூசாமற் கூறுகிறான். திடுக்கிட்டாள் பாட்டி. தன் வேடிக்கை எங்கே விகற்பத்தில் முடிந்துவிடுமோ என்று பயந்துவிடுகிறாள். இனி வாஹிதின் துக்கத்தைச் சகிக்கமாட்டாத நிலையில், சந்தோஷத்துடன்.

"வாளில் விழுந்திடாதே
வன்கொலையாய்ச் செத்திடாதே
கடலில் விழுந்திடாதே இப்ப
திரும்பிவரும் உன்றிளி"

என்று கூறுகிறாள். இக்கவியைக் கேட்டதும் வாஹிதின் மனம் சாந்தியடைகிறது. காதலியைக் கண்டவன்போல் வழியின்மேல் விழி வைத்து இன்முகத்துடன் புன்முறுவல் பூத்தவண்ணம் இருக்கிறான் திண்ணையில்.

வீட்டினுள் ஒழித்திருந்து விஷயங்களையறிந்த ஸுறையா இனியும் தாமதித்து தனது காதலனின் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. வீட்டினுள் இருந்து வெளிவருகிறாள். வரும்போது

'மச்சானே மாம்பழமே
மாமிபெத்த பாலகனே
ஏலங்காம்பே உங்களையென்ன
சொல்லிக் கூப்பிடட்டும்"

என்று கூறியவண்ணம் வெளிவருகிறாள். தன் காதலி உள்ளிருந்து வெளிவருவதைக் கண்ட வாஹித் உணர்ச்சிமேலிட

"கந்து விளக்கே
கடலலைத்தோரணமே
மாலிக்கக்கல்லே உன்னை
மறந்திருக்கக்கூடுதில்லே"

என்று கூறி அவளின் கைகளைக் கெட்டியாகப் பிடிக்கின்றான். இனி அவர்களைக் கேட்கவும் வேண்டுமா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமுகர் பேட்டி 38

அவரவர் அபிப்பிராயம்

கேள்வி:
எப். ஜி. ஜெயசிங்கம்

பதில்: ஜனப் ஐ. எல். எம். மஸஹர் பி. ஏ.



இன்று நமது பேட்டிப் பிரமுகராகத் தோன்றுபவர் மட்டக்களப்பைச் சேர்ந்த அட்டாளைச்சேனையில் இருக்கும் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றி வரும் முஸ்லிம் அறிஞரான ஜனப் ஐ. எல். எம். மஸஹர் அவர்களாவர். பி. ஏ. பட்டதாரியான இவர் ஆசிரியர்களுக்குரிய உளநூல் போதனையில் ஆழ்ந்த அறிவும், அகன்ற ஆராய்ச்சியும் உடையவராக விளங்கின்றார். இவருடைய தலைமையின்கீழ் அட்டாளச்சேனை ஆசிரியர் கலாசாலை குறிப்பிடக்கூடிய உன்னத நிலையை அடைந்து வருகிறது. ஜனப் மஸஹர் அவர்களுடைய நேர்மையையும் நிர்வாகத் திறனையும்பற்றி அங்கு பயிலும் ஒவ்வொரு மாணவரின் வாயிலிருந்தும் எப்போதும் புகழ் மொழிகளே உதிர்வதை நாம் கேட்கலாம்.

சுதந்திரனுக்குப் பேட்டியென்றதும் அளவற்ற மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டதுமல்லாமல் தாம் விரும்பிப் படிக்கும் பத்திரிகைகளுள் சுதந்திரன் முக்கிய இடம் வகிக்கிறது என்றும் கூறினர். சுதந்திரனில் முஸ்லிம்களுக்கென ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு வருவதை அவர் பாராட்டியதோடு அப்பகுதியில் முஸ்லிம் இலக்கியத்துக்கு அதிக இடம் கொடுபட வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

நமது நன்றியும், சுதந்திரன் வாசகர்களுடைய நன்றியும் ஒருங்கே இவருக்கு உரித்தாகுக.

கேள்வி:-

1 இலங்கைவாழ் இஸ்லாமியர்களின் மொழிப்பிரச்னை பற்றித் தாங்கள் கூறக்கூடியது என்ன?

பதில்:-

இலங்கையிலுள்ள இஸ்லாமியர்களிடையே தொன்று தொட்டு வழங்கிவரும் தாய் மொழி தமிழாகும். தென், மேற்கு, மத்திய மாகாணங்களில் (சிங்களப் பகுதிகளில்) வாழும் இஸ்லாமியர் கூட வீட்டில் தமிழையே பேசிவருகின்றனர். எனவே இஸ்லாமியர்கள் தமிழ்ப் பற்றுடையவர்கள். மேற்கூறிய மாகாணங்களில் வாழும் சில இஸ்லாமியப்பெரியார்கள் தங்கள் சூழ்நிலைக்குச் சிங்களமே தாய்மொழியாக வேண்டுமெனக் கூறுகின்றனர். ஆனால் அப்படிச் செய்வது ஒன்றுக இருக்கும் இஸ்லாமிய சமுதாயத்தைப் பிரிவினையாக்க முயல்வதுபோலாகும். அத்துடன் இஸ்லாமியரின் சமய ஆசாரங்கள் தமிழில்தான் இப்பொழுது நடைபெறுகின்றன. அதிகமாக வெள்ளிக் கிழமைகளில் மசூதிகளில், பிரசங்கங்கள் தமிழில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. சமய நூல்கள் எல்லாம் தமிழில் உண்டு. சிங்களம் தாய்மொழியாகும்பொழுது இவற்றில் மாற்றம் ஏற்படவேண்டியிருக்கும் ஆனால் சீறுப் புராணம், மஸ்தான் சாகிபுப் பாடல் போன்ற இலக்கிய நூல்கள் சிங்களத்தில் எக்காலத்தில் வெளியாகும் என்பதுதான் பிரச்னை. தென் இந்தியாவிலுள்ள சுமார் ஒரு கோடி இஸ்லாமியர்களுடனிருக்கும் தொடர்பும் மாற்றம் ஏற்படின் அற்றுப்போகும். அதிகமான இஸ்லாமியர்கள் தமிழையே தங்கள் தாய்மொழியாகக் கொள்வார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை!

கேள்வி:-

2 2 வருடகாலப்பயிற்சியில் மற்றைய பாடங்களுடன் உளநூல் கற்கும் ஆசிரிய மாணவர்கள் உளநூலில் பரிபூரண தேர்ச்சிபெற முடியாதல்லவா? எனவே எவ்விதம் அவர்கள் குழந்தைகளின் மனோநிலையறிந்து கல்விகற்பிக்க முடியும்?

பதில்:-

உளநூல் சம்பந்தமான ஆரம்ப அறிவையே அவர்கள் பெறமுடிகிறது. உளநூல் சம்பந்தமான ஆராய்ச்சியைப் பெறுவது அசாத்தியமே! ஆனால் வெளியேறியதன் பின்னர் பயிற்றல் காலத்தில் உளநூல் சம்பந்தமாக அறிவதனால் கூடிய ஆற்றலும் அறிவும் விருத்தியாக முடியும். பயிற்றலில் பற்றுள்ள ஆசிரியர்கள் இவ்விஷயத்தில் கண்ணும் கருத்துமாக விருப்பர்.

கேள்வி:-

5 இன்றைய சுயபாஷா ஆசிரியர்களின் நிலைமை பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:-

பொதுவாக அவர்களது சம்பளவித்தியாச காரணமாக அவர்கள் ஆங்கில ஆசிரியர்களைவிட குறைந்த தரத்திலேயுள்ளனர். சுயபாஷா ஆசிரியரின் வாழ்க்கைத் தரம் கூடுவதற்கு அவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் சம்பளமும் கிடைக்க வேண்டும். சுயபாஷா ஆசிரியர்கள் பயிற்சியில்—ஏனைய விஷயங்களில் தரம் குறைந்தவர்களென்று பயிற்சி பெறும் ஆங்கில ஆசிரியர்களும் ஆங்கிலத்தில் சி. பா. த. பத்திரத்துடன் பிரவேசிப்பவர்கள். அதுபோலவே சுயபாஷா ஆசிரியர்களும் பிரவேசித்துப் பயிற்சி பெறுகின்றனர். இறுதிப் பரீட்ஷையும் ஏறக்குறைய ஒரே தரத்தையுடையது. இரு சாராருக்குமுரிய வித்தியாசம் பாஷை வித்தியாசமேயாகும். அந்த வகையில் சம்பள வேறுபாடு இவர்களுக்கிடையிலிருப்பது பெரிதும் வருந்தத்தக்க விஷயமாகும்.

கேள்வி:-

4 இஸ்லாமிய அடிப்படைக்கும் பொதுவுடமைத் தத்துவத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டா?

பதில்:-

ஒரு சில விஷயங்களில் தொடர்புண்டு. விஷேடமாக சமத்துவம், சகோதரத்துவம் எனும் இலட்சியங்கள் இஸ்லாமிய தத்துவார்த்தங்களில் முக்கிய மான இடத்தைப் பெறக்கூடியன. பொருள் சம்பந்தமாகவும் சரிவர பிரயோகிப்பதற்கான கோட்பாடுகளும் இஸ்லாமிய மதத்தில் வற்புறுத்தப்படுகின்றது. உதாரணமாக ஒருவனுக்கு ஒரு வருடத்துக்கு 40 ரூபாவுக்குரிய வருவாயிருப்பின் அதில் இரண்டரை ரூபாய் பொது நன்மைக்குச் செலவிடல் வேண்டும் என்பன போன்ற நியதிகள் அநுசரிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனால் தெய்வபக்தி, புருஷத்துவ விருத்தி உயர் நோக்கங்கள் சம்பந்தமாக வித்தியாசங்களுண்டு. பொதுவுடமையில் ஊண், உடல், உறைவு என்பனவற்றில் மாத்திரம்தான் கவனம் செலுத்தப்படுகிறது. இஸ்லாமிய தத்துவார்த்தங்களில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற கிழக்குத் தேய உயர் இலட்சியங்கள் பெரிதும் பொருட்படுத்தப் படுகின்றன. உடலை வளர்ப்பது மாத்திரம் போதாது. உலக வாழ்க்கையில் மனிதத்துவம் சரிவர விருத்தியாவதற்கு மேற்கூறப்பட்ட உயர் நோக்கங்களை மனிதர்கள் போற்றினால்தான் பூரணமான வாழ்வைப்பெற முடியும்.

கேள்வி:-

5 சமூக சேவையில் இஸ்லாமிய பெண்கள் அதிகமாக இறங்காமைக்குக் காரணம் யாது?

பதில்:-

பொதுவாக கல்வியில்லாமை எனலாம். இஸ்லாமிய அரசாங்கங்கள் செழித்து விளங்கிய முற்காலத்தில் விசேஷமாக நபிகள் நாயகத்தின் காலத்திலும் அதன் பின்னால் நிலவிய குலபாயே ராஸ்தீன் காலத்திலும் இஸ்லாமிய பெண்கள் பெரும் புலவர்களாகவும், வீரத்துவம் பொருந்தியவர்களாகவும், கல்வியில் மேனிலையடைந்தவர்களாகவும் சமூக சேவையில் முன்னேறியவர்களாகவும் இருந்தனர் என்று இஸ்லாமிய சரித்திரம் கூறுகிறது. ஆனால் இக்காலத்தில் கல்விக் குறைவின் காரணமாக பெண்கள் மிகவும் பின்னணியிலிருந்து வருகின்றனர். எதிர்காலத்தில் போதிய அறிவையும், ஆற்றலையும் பெண்கள் பெறும் பொழுது உரிய இடம் பெறுவர்.

கேள்வி:-

6 மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்வது தங்கள் எண்ணம் என்ன?

பதில்:-

அரசியலில் மாணவர்கள் கலந்து கொள்வதால் பலவித மான பாதகங்கள் அவர்களுக்கு விளைகின்றன. அநுபவக் குறைவினாலும் வயதுக் குறைவினாலும் அரசியல் புரட்சிகளில் ஆயுதமாகப் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் உபயோகிக்கப் படுவர். அதுவுமின்றி அவர்கள் பயிற்சிபெறும் இளங்காலத்தில் பயிற்சியிலே கணணும் கருத்துமாக விருப்பதற்கும் அரசியலீடுபடுவது தடையாகும்.

கேள்வி:-

7 வாலிபர் வளம்பெற மறுமலர்ச்சிப் பாதையில் செல்வது நல்லதா? பழமைப் பாதையில் செல்வது நல்லதா?

பதில்:-

இரு பாதையிலும் செல்வதே நலம் ஒரு பாதையில் மாத்திரம் செல்லும் பொழுது பழையனவற்றை அழிப்பது மாத்திரமே நேரிடும். புதியவொன்றை ஆக்குவதற்கு பழையன அதிகம் அநுகூலமாகும். புதியன செய்ய மூலப் பொருட்கள் பழையனவற்றிலிருந்தே வரவேண்டும். புதிய ஆக்கம் ஒன்றை பரிசீலனைசெய்யும் பொழுது அவையெல்லாம் பழையவற்றிலிருந்து உருப்பெற்ற புதிய தோற்றங்களாகவேயிருக்கும்.

கேள்வி:-

8 தனித்தியங்கும் வன்மை பெற்ற தமிழ்மொழிக்குப் பிற மொழிக் கலப்பும் அவசியமா?

பதில்:-

பிறமொழிக் கலப்பும் அவசியமே! ஒரு மொழி வளர்ச்சி பெற பல மொழிகளிலிருந்தும் சொற்கள் திணிக்கப்பட வேண்டியதவசியம் என்பது அனுபவத்திலிருந்து இலகுவில் மட்டிடக்கூடியதாயிருக்கிறது. உதாரணமாக ஆங்கிலத்தைக் கவனிப்போம். உலகில் மிகவும் உபயோகமாகி வரும் மொழிகளில் ஆங்கிலம் முதன்மையானது. சிங்களம், தமிழ், உருது, அரபு, சீனம், ஜப்பான் முதலிய பல பாஷைச் சொற்களும் ஆங்கிலத்தில் கலந்துள்ளன என்பதை ஆங்கிலம் கற்றவர்கள் மறைக்க முடியாது. ஒரு மொழி சரிவர மலர்ந்து ஓங்குவதற்கும் விருத்தியாவதற்கும் பல மொழிகளிலிருந்தும் அது போஷிக்கப்பட வேண்டும். இல்லாத வரையில் ஒரு மொழி தனியாக விருத்தியாவது சிரமம்.

கேள்வி:-

9 இஸ்லாமிய மக்களிடையே மலிந்து காணப்படும் 'கவி' என்னும் கிராமிய இலக்கியச் செல்வங்களை ஒன்று சேர்த்து அவைகளின் பெருமையை [illegible] வாம் இலக்கிய அறிஞர்கள் முன்வராமைக்குக் காரணம் என்ன?

பதில்:-

இலங்கையில் இலக்கிய ஆராய்ச்சியாளர் மிகவும் குறைவு. இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி இப்பொழுதுதான் ஒருவாறு நடைபெற்று வருகிறது சர்வகலாசாலையில் மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகக்கொள்ளும் பொழுது 'கவி' பற்றிய ஆராய்ச்சி வளர்ச்சியடையலாம். இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சியும் வளரவேதுவுண்டு.

கேள்வி:-

10 பால்ய விவாகக் கொடுமை இஸ்லாமிய மக்களிடம் மண்டிக் கிடப்பதேன்?

பதில்:-

இஸ்லாமிய மக்களிடையே இலங்கையின் மேல்ப் பகுதிகளில் பால்ய விவாகங்கள் கிடையாது. கிழக்குப் பகுதிகளில்தான் காண முடிகிறது. இஸ்லாமிய சமய சம்பந்தமாக இதற்குப் போதிய ஆதாரம் கிடைக்கும் எனக் கூற முடியாது. இது கல்வியில்லாக் குறைவின் விழைவு எனச் சொல்லலாம். இஸ்லாமிய மக்கள் கல்வியில் படிப்படியாக முன்னேறுகையில் இப்பழக்கம் மறைந்துவிடலாம்.

கேள்வி:-

11 தாங்கள் ஆசிரியத் தொழிலை அதிகமாக விரும்புவதற்குக் காரணம் என்ன என்று நான் அறியலாமா?

பதில்:-

ஆசிரியத் தொழில் ஏனைய தொழில்களைவிட சமூகம் பண்படையப் பெரிதும் பயன்தரக் கூடியது. சமூக முன்னேற்றத்தில் அதிகம் ஆர்வமுள்ளவர்கள் ஆசிரியத் தொழிலையே விரும்புவர். அது மட்டுமன்றி இலங்கையில் இஸ்லாமிய சமூகம் கல்வியில் மிகப் பின்னணியில் இருப்பதனால் இஸ்லாமிய ஆசிரியர்களின் சேவை அவசியமாகிறது. அந்த வகையில் இஸ்லாமிய சமூகத்தில்—கலாச்சார முன்னேற்றத்தை விரும்பும் பலருக்கும் இச்சேவை சிறந்ததேயாகும். எனது சிறப்பான நோக்கமும் அதுவே.

கேள்வி -

12 எதிர்காலத்தில் இலங்கை அரசியலில் பிரவேசிக்கும் எண்ணம் தங்களுக்குண்டா?

பதில்:-

அப்படியான நோக்கம் எதுவும் இல்லை. அரசியலில் பங்குபெறுவதால் சமுதாயத்திற்கு ஆசிரியர் செய்யக்கூடிய சேவைகள் தடையாகலாம். அதன் காரணமாக அரசியலில் பங்குபெறுவதை நான் விரும்பவில்லை

கேள்வி:-

13 இலங்கையில் சிங்களமும் தமிழும் அரசியல் பாஷைகளாகவரவேண்டியது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:-

இலங்கையில் சிங்களமும் தமிழும் அரசியல் பாஷைகளாக வரவேண்டியது முக்கியமாகும்.

கேள்வி -

14 கட்டுக் கதைகள்—கற்பனைக் கெட்டாத கருத்துகள்—பகுத்தறிவுக்குப் பொருந்தாத எண்ணங்கள்—ஆபாசங்கள் நிறைந்த சில நூல்கள் பாடசாலைகளில் இலக்கியமாகப் படிப்பிக்கப்படுவது குறித்து என்ன கருதுகிறீர்கள்?

பதில்:-

பாடசாலைகளில் படிப்பிக்கப்படும் நூல்கள் மாணவர்கள் சிறந்த பண்பாட்டையடைவதற்கான நூல்களாயிருக்க வேண்டும். மாணவர்களின் தற்போதைய அகப்புற வாழ்க்கையில் தொடர்புறுத்தப்பட்டதாக அமையவேண்டும். இன்றேல் பிள்ளைகளின் மானத வளர்ச்சி அசாதாரண நிலையடைய முடியும். வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய மானத—சமநிலை பெரிதும் வேண்டற்பாலது. இது கல்வி பயிற்றலில் காணக்கூடிய பெரும் பிரச்னையாகும்.

கேள்வி:-

15 பாரதியாருக்குப் பின்னர் தற்பொழுதுள்ள கவிஞர்களில் தாங்கள் யாரை சிறந்த கவிஞர்களாகக் கருதுகிறீர்கள்?

பதில்:-

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், புதுவைக் கவி சுத்தானந்த பாரதி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் என்போர்.

கேள்வி:-

16 திருக்குறள், திருக்குர்—ஆன் இவையிரண்டும் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:-

இரண்டும் உயரிய தத்துவார்த்தங்களையும் ஆத்மீக நோக்கங்களையும் வற்புறுத்தக்கூடிய உயரிய நூல்களாகும். திருக்குர்ஆன் இஸ்லாமிய பண்பாட்டைப் பெரிதும் உற்சாகப்படுத்தி மக்களிடையே அரும்பெரும் தொண்டு புரிய ஆர்வமளிக்கும் சமய நூல் என்ற முறையில் நேரான வாழ்க்கையைச் சீராக நடாத்துவதற்கு உறுதுணை புரிகிறது. திருக்குறளும் ஒழுக்க நூலாக—சட்ட நூலாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

கேள்வி:-

17 அராபித் தமிழ் என்றொருவகைத் தமிழ் இருப்பதாகச் சேர் ராசிக் பரித் கூறுகிறார். ஆனால் "அரபி எழுத்துக்களால் தமிழை எழுதுவதால் அது அரபித் தமிழாகி விடாது" என்று சமீபத்தில் இலங்கை வந்த திருச்சி ஜமால் முகம்மது கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ஜனப் கபூர் கருதுகிறார். இந்தப் பிரச்னையை விட்டு உங்கள் அபிப்பிராயம் யாது?

பதில்:-

தமிழை வகுத்து நோக்கும் பொழுது செந்தமிழ், வடதமிழ் இஸ்லாமிய தமிழ், கிறிஸ்தவ தமிழ், சைவத்தமிழ் என்று பல வாறுகக் குறிப்பிடலாம். அவ்விதமாக நோக்கும்பொழுது அரபிச் சொற்கள் அதிகமாகக் கலந்த தமிழை—அரபி (லிபி) எழுத்துக்களால் எழுதப்படும் பொழுது அதை அரபித் தமிழ் எனச் சொல்வது மேற்பகுதியில் ஒரு வழக்கம். ஆனால் தொகுத்து நோக்குகையில் எல்லாம் தமிழே என்று கூற வேண்டும். எல்லாம் தமிழில் அடங்கியது எனக் கூறுவதுதான் பொருத்தமாகும்.

கேள்வி:-

18 தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்ற கிளர்ச்சியைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:-

தமிழ் பூரண வளர்ச்சியடைந்து வருவதற்கு அப்படியான ஒரு பல்கலைக் கழகம் அமைவது இலங்கைக்கு இன்றியமையாத தொன்றாகும்.

கேள்வி:-

19 மட்டக்களப்புத் தமிழ் பற்றித் தங்கள் அபிப்பிராய

(12—ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங் கரும்பு

[4–ம் பக்கத் தொடர்ச்சி]

மறுபடியும் மாடமாளிகை எழுப்பி விடலாம் என்று மனக் கோட்டை கட்டினர். கிழட்டு குடுக்கைக்கு கட்டி வைத்து செல்வத்தில் உப்பரிகை கொட்டலாம் என்று எக்களித்தனர். ஆனல் வாழ்வை— வாழ்வின் பாசத்தை உடைக்க முடியாது என்பது அவர்களுக்கு—சீர் கெட்ட சமுதாயத்தின் சொக் கட்டான்களுக்கு எங்கே தெரியும்? அவர்களின் அரணிலே தான் காலங்கழித்தாள் கரும்பு.

கரும்பின் அருகிலே காவல். உள்ளத்தில் கனல். உடம்பெல்லாம் காதல். முதுகில் தழும்புகள். நரம்பில் சோர்வு. நடையில் தளர்ச்சி. நாவில் வரட்சி, விழிகளில் ஏக்கம். ஆனல் ஆவியில் துணிச்சல் துள்ளியது. வாழ்வோம், சண்டாளர் சமுதாயத்தை புரட்டிவிட்டு வாழ்வோம் என்று அவள் அந்தரங்கம் கீதம்பாடியது.

தேய்பிறைபோல் தேய்ந்தாள் கரும்பு. மூன்று கிழமைகள் கடந்தன. தையும் பிறந்து முகூர்த்தமும் வந்தது. வெகுண்ட அவள் கருத்திலே ஒரு புதுவழி பிறந்தது. கலியாணம் ஆகட்டும், ஆனல் அந்தக் காதகனுக்கு கற்பைப் படைத்து விட மாட்டேன். இது அவள் திட்டம். சிறகொடிந்து கிடந்த வண்ணக்கிளி வானம்பாடி எழ புதுவழி கண்டது. மறுபடியும் வளர் பிறைபோல் சோபித்தாள் கரும்பு. எல்லோரோடும் இங்கிதமாகப் பேசிப் பழகினுள். கண்டோரை கவரச் செய்தாள். காதலே காற்றிலே விட்டுவிட்டவள்போல் அபிநயித்தாள். எனவே கருத்தில் களிப்போடு கரும்பின் கழுத்தில் மாலேயிட முடிந்தது அத்தை மகனுல். மணத்தின் மணம் எல்லோரையும் கொள்ளே கொண்டது—நாகப்பனைத் தவிர!

தம்பதிகள் தனிக்குடி தொடங்கிய அன்று.....அவள் தோழியாக அமைந்த நல்லம்மாவின் மகள் செல்லம் வந்திருந்தாள். நம்பிக்கைக்குரியவள். அவள் காதிலே கரும்பு ஏதோ முணுமுணுத்தாள்.

இரவு மணி எட்டடித்தது. அவ்வளவுதான். கரும்பை ஊரார் ஊர் முழுதும் தேடினர்கள்.

***

மூன்று ண்டுகளுக்கு அப்பால்.....

இலங்கையிலே எங்கேயோ ஒரு மூலையில்.....ஒரு தேனீர் கடை. கணக்கப்பிள்ளை, அவர் மனைவி, ஆராயி, அவள் மகன், அவன் புதுமனைவி உட்பட ஒரு கூட்டம் தோசை, இட்டலி முதலியன சாப்பிட்டுக் கொண்டிருந்தது. ஆடையும் அணியும், பூவும் மணியும் சீரும் சிறப்பும் எங்கேயோ திருமணத்துக்குப் போகிறவர்கள் என்பதை விளம்பரப்படுத்தின. பேச்சிடையே ஒரு பெண் குரல் பேசியது. "போனதடவை இங்கே நாகம்மா கலியாணத்துக்கு வந்திருந்தபோது நம்மோடே கரும்பும் வந்திருந்திச்சி, இல்லேயா?"

கணக்கப்பிள்ளை முகம் வெளுத்து சுண்டியது.

"அதுதான் எல்லார் கண்ணிலேயும் மண்ணைத் தூவிட்டு மறைஞ்சு மண்ணுப் போச்சே—நம்ப மானம் மரியாதி யெல்லாம் குட்டிச்சுவராகிவிட்டதே என்ற வார்த்தைகள் கணக்கப்பிள்ளையின் ஆழ்ந்த பெருமூச்சோடு கலந்து வந்தன.

இதை அந்தக் கடையின் சமையற் கட்டிலே இருந்த கரும்பு களிப்போடும் பதைப்போடும் கவனித்துக்கொண்டு நின்றுள். அது "நாகப்பன் ஓட்டல்" என்பது எப்படித் தெரியும் அவர்களுக்கு.

கரும்பு நாகப்பனை கூப்பிட்டுக் காட்டினுள். அவன் விழித்தான், தர்ம சங்கடமான நிலை.

கரும்பு தன் இரண்டு வயது மகன் மதியழகனைப் பிடித்துக் காட்டினுள்; "அதோ, நம்ப தாத்தா அம்மா எல்லாம். தாத்தா கிட்டே போய் தாத்தா சுகமான்னு கேளு"

ஓடி வந்த சிறுவன் தன் முத்துவாயாலே, "தாத்தா எப்படி சொகம்" என்றுன். பின்குறுநடைபோட்டுஓடினுன். மீண்டும் அனுப்பினுள் கரும்பு, தூது செல் கிளியே என்று இப்போது தன் அம்மாவிடம், "எங்கம்மா முறுக்கு சுடுது ஒனக்கு வேனுமா? காசு குடு" என்று பொக்கை வாயை அசைத்து விட்டு ஓடினுன் பாலகன்.

"அடடே பலே ஆசாமியா இருக்கானே. யார் பையன் இவன்? பார்த்தா நம்ப கரும்பு முகச்சாடையா இருக்கான்' 'என் ரூர் கணக்கப்பிள்ளை. பெத்தவுங்க வீட்டுப் புள்ள தான்" என்றது ஒரு பெண் குரல்.

எல்லோரும் புறப்பட்டார்கள். கடைப்பையன் காசு வாங்கும்படி நாகப்பனை அழைக்கச் சென்றுன் "காசா? வேண்டாம்னு சொல்லு"என்றுன் நாகப்பன். பையன், கணக்கப்பிள்ளையிடம் வந்து, "காசு வேண்டாங்களாம்— மொதலாளி சொல்ருர்" என்றுன். அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அது யாரப்பா அந்த தயாளன்—கடை வச்சு, காசு வாங்காதவரு—முதலாளியைக் கூப்பிடு தம்பி" என்ருர். மறு கணம் நாகப்பன் நாணத்தோடு எட்டிப்பார்த்தான்.

"யாரு? நம்ப நாகப்பனு? அடடே, நீ இங்கேயா இருக்கிரு?" என்ருர் கணக்கப்பிள்ளை.

"ஆமாங்க நம்ப கடைதான் இது?"

"உன் கடையா? சரி, கரும்பு எங்கே?" என்றவுடன் அவள் தன் அருமை மகனை வாரியணைத்துக்கொண்டு எதிரே தோன்றினுள் கரங் கூப்பிய படி எல்லோரும் ஏக காலத்தில், "கரும்பு?" எனக் கூவினர்

"அம்மா.....அப்பா.....
அத்தை..... அக்கா.....
"செல்வம் .....
தொண்டை அடைத்தது. அவள் தாய் அவளைக் கட்டி அணைத்தாள். தாயின் பாசம் அத்தனையும் சொரிந்தாள். எல்லார் கண்களும் நீர்மல்கின. இன்பத் துளிகள் சொட்டின. கணக்கப்பிள்ளை சீர்திருத்தவாதிபோல் நடந்ததெல்லாம் மறந்தவராய் மகளைப் பரிவோடு பார்த்து நின்னர், பிரிந்தவர் கூடினுல்பேசவும் வேண்டுமோ?

அந்த சந்திப்பிலே புதுமை கொட்டியது—தாயின் பாசம், தந்தையின் கருணை, மகளின் பூரிப்பு, குஞ்சலக் குழந்தையின் குறும்பு—இந்த வாழ்வின் சங்கமத்திலே பழமை பறந்தது, வாழ்வின் வைரியான சமுதாய அமைப்பு இடிபட்ட சுவர் போல் சரிந்தது.

புது வாழ்வுக்காக விம்மிப் பொருமும் தாய் திரு நாட்டின் மார்பகத்தை ஒக்கும் மலைச் சாரலே ஆலிங்கனம் செய்து கொண்டு தென்றல் மிருதுவாக தவழ்ந்து கொஞ்சியது. வெளியிலே ஒரு தொழிலாளி—"சாதியில் இழிவு கொண்ட மனிதரென்ப திலேயே" என்ற பாரதி பாட்டை உரத்த குரலில் சுருதி மீட்டிக் கொண்டே நடந்தான். உயிரெடுத்த பாரதி நடை வெற்றி கொட்டிய "கரும்பின்"சுவைப்பு மனித இனத்துக்கு அள்

மேன்மையான உங்கள் ஜீவிதம் சௌக்கியமாக இருப்பதற்கு எப்பொழுதும் எமது திவ்ய ஒளஷதங்களை உபயோகியுங்கள்.

விகரின்: உடலுக்கு ஆரோக்கியமும் நரம்புகளுக்கு பலமும் கொடுக்கும். சரீர பலம் இல்லாதவர்களுக்கும் மூலசூடு, நரம்பு தளர்ச்சி, சக்தி குறைவு, கைகால் உளைவு, இடுப்பு வலி, மாறும் சிறுநீரில் ஏற்படும் எல்லா வியாதிகளையும் கண்டிக்கும் திவ்ய மருந்து.

விகரின் சூபா 3/– தபால் செலவு 75 சதம்

ரெசோன்: பெண்களின் மாதாந்த கோளாறுகளுக்கும் வயிற்று வலி, மயக்கம், உடல் பாரம், வயிற்றில் கட்டிபோல் திரண்டு மார்பில் அடைத்தல், மற்றும் எல்லா மாதாந்தக் கோளாறுகளையும் சுகப்படுத்தும்.

ரெசோன் சூபா 7-50 தபால் செலவு சதம் 75

குன்மசம்காரி: தீராத வயிற்றுவலி அல்லது குன்மவியாதி சாப்பிட்ட பின்னும் முன்னும் வயிற்றில் வலி, டல் புண்போல் இருத்தல், வயிற்றின் ஈரலிலும் எரிச்சல் ளுசியால் குத்தல் போன்ற வேதனைகள் எல்லாவற்றையும் அடியோடு சுகமாக்கும்.

குன்மசம்காரி சூபா 7–50 தபால் செலவு 85 சதம்

சுவாசனல்: தீராத இருமல், இளைப்பு, ஆஸ்மா, காசம், தொண்டை வலி. மார்பு வலி, குர்குர் சத்தம், சளியோடு ரத்தம் வருதல், மூச்சு திணறல் இவைகளைப் போக்கி ஆரோக்கியம் அளிக்கும்.

சுவாசனல் பாட்டில் 1க்கு சூபா 6 00 தபால் செலவு சதம் 85

பயில் ஓமன்: மூல வியாதிக்கு நிகரற்றது. மூலமுளை, மூல திரவு, மூலரத்தம், உள்மூலம், கிழ்மூலம் கடுப்பு, அடிதள்ளும் மூலம், பவுந்திரம் முதலிய சகல மூலரோகத்தையும் அடியோடு நாசமாக்கும் அற்புத நிவாரணி.

பயில் ஓமன் 1க்கு சூபா 6–00 தபால் செலவு 75 சதம்

அண்டவாத சம்காரி: அண்டவாய்வு, அடிக்கடி விரை வீங்குதல், நரம்பு தடிப்பு, விரை ஏறி இறங்குதல், குத்தல், குடைச்சல், கல்லுப்போல் இருத்தல், விரையில் ஜலம் சேர்ந்து பெருத்துப்போதல் முதலிய சகல அண்டரோகங்களையும் சுகமாக்கும். அண்டவாத சம்காரி (செட் 2 வகை மருந்து) சூபா 12-50. தபால் செலவு சூபா 1-

கவனியுங்கள்: உங்கள் வாழ்க்கையில் தீர்க்க முடியாமல் கள் எதுவானலும் எமது பிரதம டாக்டர் இம்மானுவேல் ஜோசேப் அவர்களை இன்றே காணுங்கள். அவருக்கு உத்தரவாதமாக தீர்க்க முடியும் என்பதை மறவாதீர்கள்.

எமது மருந்துகளை இலங்கை முழுவதும் விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை. விபரத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

கல்கத்தா மெடிக்கல் ஹால்,
140, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 6919.

மலேயாவில் குரங்கு மனிதர்கள்

குரங்கு மனிதர் இருந்திருக்கக் கூடுமா என்ற சந்தேகம் அதே கருக்கு இருந்தது. அந்தச் சந்தேகத்திற்கு இறுதி இல்லாமல் போய் விட்டது. இப்பொழுது மலேயாவில் குரங்கு மனிதரைச் சிலர் நேரில் கண்டு தகவல் அறிவித்திருக்கின்றனர். ஜனவரி முதல் தேதியன்று மலேயாவில் பிராக் என்ற காட்டில் இரு ஆண் குரங்கு மனிதரும் ஒரு பெண் குரங்கு மனுஷியும் திரிந்துகொண்டிருந்ததை ரப்பர் பால் எடுப்பவர் ஒருவர் கண்டார். அவரிடம் அம்மூன்று மனிதரில் ஒன்று ஏதோ நூதனமான மொழியில் பேசியதாகத் தெரிகிறது.

டிரோலக் என்று கூறப்படும் காட்டு ரிசர்வ் பிரதேசத்தில் ஸ்பெஷல் கான்ஸ்டேபிள்கள் அந்தக் குரங்கு மனிதரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்று ஸ்லிம் நதிக்கரையில் மூன்று குரங்கு மனிதர் இருப்பதைக் கண்டனர். மலேயாவின் பழங்குடிகளாக இருக்கக்கூடுமென்று சந்தேகித்து சுடுவதற்கு கான்ஸ்டேபிள்கள் எத்தனித்தனர். ஆனல் சுடவில்லை. ஸ்பெஷல் கான்ஸ்டேபிள்கள் அருகே வந்ததும் குரங்கு மனிதர் நதிக்குள் மூழ்கிவிட்டனர்.

டிரோலக் பிரதேசத்தில் ரப்பர் பால் எடுத்துக்கொண்டிருந்த ஒருவரை ஒரு பெண் மனித குரங்கு கட்டித் தழுவியது. அவர் நடுங்கிப்போய், பெண் குரங்கின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு தப்பி ஓடினர். அதைக் கண்டு மனித குரங்குகள் சிரித்ததாகவும் கூறப்படுகிறது.

அம்மனித குரங்குகள் மரவுரி தரித்துக் கொண்டிருந்ததாகவும் நீண்ட பற்கள் உடையனவாக இருந்ததாகவும் கரிய ரோமம் உடையதாக இருந்ததாகவும் உடல் முழுவதிலும் ரோமம் உண்டென்றும் ரப்பர் பால் எடுக்கும் தோட்டத் தொழிலாளி கூறினர்.

இக்குரங்கு மனிதரின் உறைவிடத்தைக் கண்டுபிடிக்க டலர் தேடிக்கொண்டிருக்கிறார்கள். குரங்கு மனிதரை மீண்டும் சந்தித்தால், டார்வின் சித்தாந்தத்தில் ஆராய்ச்சி நடத்துவோருக்கு அரிய தகவல்கள் கிடைக்கும்.

ஆனல் இப்போது கண்ட குரங்கு மனிதர்கள் சாதாரண மனிதரைப்போலிருக்கிறார்கள்.

அவரவர் அபிப்பிராயம்

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

மென்ன?

பதில்–:

மட்டக்களப்புத் தமிழ் சுவை பொருந்தியதாகவும் காதுக்கினியதாகவும் காணப்படுகிறது. இதற்குக் காரணம் மட்டக்களப்புப் பகுதிகளின் இயற்கை வனப்பு என்று சொன்னல் அது மிகையாகாது. இயற்கையின் செல்வாக்கு எப்பகுதிகளில் கூடியிருக்குமோ அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் பண்பாட்டிலும்–மொழியிலும் அது பிரதிபலிக்கும் எனவே மட்டக்களப்புத் தமிழ் இயற்கையின் வனப்பினுல் சிறந்த தமிழாகவும் இசை பொருந்திய இனிய தமிழாகவுமிருக்கிறது.

கேள்வி:–

20 சாதி மதத்துவேசம் பாராட்டும் பக்தர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்:–

படிப்படியாக மனிதன் அறிவிலும் ஆற்றலிலும் முன்னேற்றம் அடைந்து வரும்பொழுது மனப்பான்மையிலும் வித்தியாசங்கள் ஏற்படக்கூடியதாகவிருக்கும் குறுகிய மனநிலையிலிருப்பவர்கள் சாதிமதப் பேதங்களைப் பொருட் படுத்துவதுண்டு. உலகில் தோன்றிய பெரியார்களின் வாழ்க்கையை உற்று நோக்கும் பொழுது அவர்கள் சாதி மத பேதங்களை ஒரு பொழுதும் பொருட் படுத்தினவர்களல்ல! "பெருந்தன்மை" என்பது மனம் இவ்வித மான பேதங்களிலிருந்து விடுதலை யடைவதனல் ஆகவேண்டும்.

கேள்வி:–

21 சுதந்திரன் வார இதழ் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:–

மக்கள் மனதில் போதிய அறிவையும் பண்பையும் வளர்க்கக் கூடியதாக சுதந்திரன் வெளிவருகிறது. இன்னும் கூடிய அளவு சமய, இலக்கிய சம்பந்தமான ஆராய்ச்சிகளுடனும் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களையும் ஓரளவுக்கேனும் புகுத்திக்கொள்ள முடியுமெனில் இன்னும் விசேஷ போக்குடையதாகச் சுதந்திரன் வார இதழ் அமைய முடியும். அதன் தன்னலமற்ற தனிப் பெருஞ் சேவையைப் பாராட்டுகிறேன்.

திரு. இளஞ்செழியன் மதுரைக்குப் பயணமானர்

"இலங்கைவாழ்இந்தியப்பெருங்குடி மக்கள் இலங்கையின் சுபீட்சத்திற்காகவே தங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் அளிப்பதன் மூலம் தங்களை இலங்கையர்களென உறுதிப்படுத்தல்வேண்டுமென இலங்கை இந்தியர்களை கேட்டுக் கொள்கின்றேன்.. இவ்வாறு அகில இலங்கை அருந்ததியர் சங்கம் நாடாத்தும் 2–வது மகாநாட்டுக்கு விசேஷ செவ்வாயன்று மதுரைக்குப் மாக அழைக்கப்பட்டிருந்த தமிழ் பயணமானர்.

நாடு அருந்ததியர் சங்க பொதுக் காரியதரிசி மதுரை திரு பி. கே. இளஞ்செழியன பத்திரிகைக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரு இளஞ்செழியன் கடந்த இரண்டு மாத காலமாக இலங்கையில் தங்கி பல பொதுக் கூட்டங்களில் பேசினர். அகில இலங்கை அருந்ததியர் சங்கம் உட்பட பல சங்கங்கள் திரு. இளஞ்செழியனுக்கு வரவேற்பு உபசாரம் நடாத்தின. திரு இளஞ்செழியன் செவ்வாயன்று மதுரைக்குப்

மலச்சிக்கலுக்கும் மூல வியாதிக்கும்

ரிஷி லேகியம்

ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்



இதனை சாப்பிடுவதால் 9 வகையான மூலரோகங்களும் அதற்கு காரணமான மலச் சிக்கல்கள், அவற்றல் ஏற்படும் உபாதைகளும் பூரணமாக தீர்ந்துபோகும். மூலமுளைகள், இரத்தம், சீழ், பவுந்திரம், உள்மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினுல் உண்டாகும் உபாதைகள் தேக மெலிவு, கைகால் தேக எரிவு, கடுப்புகள், வாய்வு ரோகங்கள், இரத்த அசுத்தத்தால் உண்டாகும் தோலப்பற்றிய வியாதிகள், சூதக ரோகங்கள் யாவும் தீரும். கேட்டலாக் இனமாக கொடுக்கப்படும்.

30நாள் மருந்து ரூ. 5–50 15நாள் மருந்து ரூ. 3–00

தபால் செலவு சதம் 85:

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.

சோல் ஏஜெண்ட்:

எஸ். சுப்பிரமணியம் அன் கோ.,
55, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியான நித்திரை

என்ன ஆச்சரியம்...இப்பொழுதெல்லாம் இராக் காலங்களில் நாங்கள்எழுந்திருப்பதே இல்லே. காரணம் குழந்தைக்கு லெக்டோஜன் உணவு கொடுப்பது தான். தாய்ப் பாலில் உள்ள சத்துக்கள் பூராவும் லெக்டோஜனிலும் கிடைப்பதால் குழந்தை திருப்தி யடைகிறது. மேலும் லெக்டோஜன் எளிதில் சீரணமாவதால், சீரண உறுப்புக்கள் ஓய்வு பெற்று குழந்தைக்கு நல்ல நித்திரையைக் கொடுக்கின்றன. ஆம், எல்லா இடங்களிலுமுள்ள தாய்மார்கள் இதை ஒத்துக்கொள்கின்றனர்...ஆகவே உங்கள் குழந்தைக்கு லெக்டோஜன் உணவு கொடுங்கள்.

லெக்டோஜன்

குழந்தைகளுக்கேற்ற சிறந்த உணவு.

மகத்தான 3-வது வாரம்!

முருகன்டாக்கீஸ் [ஜிந்துப்பிட்டி]

தினசரி மாலை 6-00, இரவு 9-30 மணிக்கும்
சனி,ஞாயிறு பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30மணிக்கும்
ஞாயிறு காலை 10-00 மணிக்கும்

ரேவதி ப்ரொடக்ஷன்ஸ்

"மனிதனும் மிருகமும்"

(தமிழ்)

சிவாஜி கணேசன், மாதுரிதேவி, சாரங்கபாணி, ராமச்சந்திரன், எம். என். ராஜம் திறம்பட நடித்தது.

நடனம்:
குமாரி [பேபி] கமலா

கதை, வசனம், பாட்டு:
எஸ். டி. சுந்தரம்

பின்னணி:
வசந்தகுமாரி, ஜிக்கி, ராஜா ஜெயராமன், மாரியப்பா

டைரக்ஷன்:
வேம்பு & சுந்தரம்

சிலோன் எண்டர்டெயின்மென்ட்ஸ் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

உன்னதமாகக் கொண்டாடி மகிழ சிறந்த சித்திரம்

ஷோபா பிலிம்ஸ்

பரோபகாரம் (தமிழ்)

வார்த்தையால் வர்ணிக்க முடியாத சோகத்தில் பார்ப்போர்களின் உள்ளத்தை உருகச் செய்யும் பாங்கான சித்திரம், உங்கள் வாழ்க்கையையொட்டிய கதை.

எம். கிருஷ்ணமூர்த்தி, ஜி. வரலட்சுமி, சாவித்திரி, ராமசர்மா, ஸி. எஸ். ஆர். ரேலங்கி ஆகியோர் நடிப்பது.

கொழும்பு
சென்ட்ரல்
தினசரி பிற்பகல் 2-15, மாலை 6
இரவு 9-30மணி

★

யாழ்ப்பாணம்
ராணி
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6,
இரவு 9-30மணி

★

மட்டக்களப்பு
அலைஜா
தினசரி மாலை 6, இரவு 9-30மணி

இலவச பாஸ்கள் ரத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கில் முன்கூட்டியே டிக்கெட் பெற்றுக்கொள்ளலாம்.

போன்: 5033.

உழைப்பவன் உவகைக்கு புதுமுறை அமைக்கும் பொங்கல் விழா

களத்திலே கொளித்தது வீட்டிலே புதுக் கலத்திலே பொங்கியதா?

பொங்கல் திருநாள் பொங்கிச் சென்றது. அன்று தமிழகத்திலே ஒரு புதுமை பொங்கியது. புதிய தமிழகம், பொங்கும் புது வாழ்வு வேண்டும் என்று தமிழர் திருக்கூட்டம் முஷ்டி உயர்த்தி உணர்ச்சியில் பொங்கி ஆர்ப்பரித்தது.

ஆனல் உழவன் மனையிலே, உழைப்பவன் உலையிலே, நல்லாளான இல்லாளின் இதயத்திலே, விடுகள்தோறும் புதுக்கலத்தில் பால் சோறு—நெய்ச் சோறு பொங்கியதா? நிலமில்லாத உழவன், ஊதியம் போதாத உழைப்பாளி, பாதை தெரியாத படிப்பாளி-இந்த நிலையில் பொங்கல் பொங்குவதெங்கே?

பொங்கல் புதுநாள், தமிழர் பாணியிலே, தான் உழைத்ததில் சிறிதளவு பலனுவது சேர்வதைக் காணும் நாள்.

திருநாள்! திருந்திய தமிழரின் திருநாள்! தீதெலாம் களைந்து தெறித்து நன்மை பயிரிட்டு நற் பயனெலும் அறுவடையைக் குவித்து, குவித்ததைப் பதுக்கி வைக்காமல், குறித்ததைவிட அதிகம் பெற்றுக் கள்ளத்தனத்தால் காசாக்காமல், வேண்டுவோர்க்கீந்திட வேண்டும் என்ற நன்னெறியுடன் மட்டுமல்ல, உழைப்பவர் வாழ்க்கைக்கு உரியதை அடைவர் எனும் புதுமுறை அமைக்க வேண்டும் என்ற உறுதி கொண்ட தமிழரின் திருநாள். அறுவடையின் உவகை தரும் உரை. மனைகள் பலவற்றிலே கேட்கப்பட்டு, இன்முக மாதரும் எழில்முகச் சிறாரும், களித்திடும் அடவரும் அனைவரும் அகமகிழ்ந்திடும் பொங்கற் புதுநாளன்று இன்பம் பெற்று, இன்பம் இன்றும் மனதிலே பொங்குதல்போல் என்றும் தங்கி வாழ்வே திருநாளாகத் திகழ்ந்திட வேண்டும்.

உழவரின் பெருமைக்குரிய நன்னாள் இத் திருநாள். எனவே, இன்னளவு அவர்தம் நிலையினையும் உழவுத் தொழிலின் நிலையினையும் ஊரார் அறிந்திட வேண்டுவது அவசியம்.

அதோ உள்ள கிழங்கும் கீரையும், மஞ்சளும், கரும்பும், செந்நெல்லும், பாகும், அவரையும் அவன் அளித்த அரும் பொருள்கள். அவன் பாடுபட்டுக் குவித்த செந்நெல், மாளிகையில் மந்தகாச முகவதிகளின் மேனிக்கு மெருகாக அமைகிறது; பிரபுவின் மோட்டாராகிறது; வைரமாக ஜொலிக்கிறது; வழக்கு மன்றத்திலேறி வக்கீல்களைக் கொழுக்க வைக்கிறது; ஏரடிக்கும் சிறுகோல் கொண்டு, அதனல் உண்டாகும் பெரிய செல்வத்தின் துணைகொண்டு நாட்டிலே போக போக்கியங்கள் மலிகின்றன. அவன் இவ்வளவும் தந்தவன், தலைமுறை தலைமுறையாகத் தந்துகொண்டே வருகிறவன். அதோ மண்குடிசையிலே தான் இருக்கிறான். அவனுக்கும் பொங்கல்தான்! ஆனல் அது மண் கலயத்தோடு நின்றுவிடுகிறது. மகிழ்ச்சி அவனுக்கும் உண்டு ஆனல் மாளிகையிலே காணப்படும் மகிழ்ச்சியல்ல. உழைத்தவன் அதன் பயனைப் பெறுகிறான். அந்த நிலை நல்லதல்ல. தமிழர் திருநாளன்று இதனை மனதிலே பதியச் செய்துகொள்ள வேண்டும்.

உழவன் உழைக்கிறான், உழைக்காதவன் பிழைக்கிறான். இம்முறை மாறியாக வேண்டும். இன்பம் பொங்கும் இன்னாள் இதனை எண்ணிப் பார்க்க வேண்டும். தூங்கும் கலப்பைத் தொழிலாளர்கள், காலமெல்லாம் பாடுபட்டுக் கையைத் தலையணையாய், தரையே பஞ்சணையாய், வானமே போர்வையாகக்கொண்டு வதைகிறார்கள். வறுமை, அறியாமை, பிணி முதலிய எண்ணற்ற தளைகளால் கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்களில் யாரும் முழு வாழ்வு வாழ்வதில்லை. அப்படிப்பட்டவர்களைத் தான் உழுதுண்டு வாழ்வானே வாழ்வான் மற்றவர்கள் தொழுதுண்டு பின் செல்வோர் என்று புகழ்ந்து பாடிப்புகழ்கிறார்கள். இன்றையநாளில்புகழ்ந்துஏமாற்றி இருக்கிறார்கள் என்று சொல்வதே மிகப் பொருத்தமாயிருக்கும்.

பொங்கல் உழவர் விழா! தமிழர் திருநாள்! நம்பொருப் புராணக் கருத்தினை நாட்டினர் மனதிலே மூட்டிடும் மற்றைய விழாக்கள்போலன்றி உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா. களத்திலே காணப்பட்ட பலன் வீட்டிலே புதுப் பானையிலே பொங்கி வழியும் நாளாம் பொங்கற் புதுநாள்.

பொங்கல் விழா செந்நெல்லும் செங்கரும்பும் பச்சைக் காய்கறியும் பசும் பொன்நிறப் பண்டங்களும், வண்ணக் கோலமும், வாடாமலர்களும், மனிதோறும் குவிந்து மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டும் நன்னாள். கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள். ஆடல் பாடல் கொட்டு முழக்கு, குதூகலம் கூத்தாடும் நாள் பொங்கல் விழா. பாடுபட்ட உழவன் தன் வீட்டுப் பானையிலே, தான் உழைத்ததில் சிறிதளவு பலனுவது சேர்வதைக் காணும் நாள்.

களத்திலே செந்நெல் குவியக் கண்டபொழுதும், அது புதிய கலத்திலே தீம் பாலமுதாக மாறுவதைக் காணும்பொழுதும் அவனுடைய உள்ளத்திலே உவகை பொங்குகிறது.

இவ்வளவு நற்கருத்துக்களும் இவ்விழாவின் உட்பொருளாக அமைந்திருக்கிறது. அறுவடை தரும் ஆனந்தத்தை, பயன் பெறுபவர் கண்டு மகிழ்கின்றனர். பொங்கற் புதுநாள், தமிழர் திருநாள், வாழ்வின் உட்பொருளை உணருவதற்கு உதவும் நாள்.

அதோ பாலிலே குழையும் சீரகச் சாம்பாவைப் பெறுவதற்கு பாட்டாளி சிந்தியது வியர்வை. இரத்தமும் கூடத்தான். பாற் பொங்கலாகும்போது, சுவையும் பயனும் இச்சுவையும் பயனும் கிடைத்திட பல பாடுபட்டான். பஞ்சையாகி நொந்தான் பகலெல்லாம் உழைத்துவிட்டு இரவிலே தூக்கம் பிடிக்காமல் டரண்டிநக்கிறான். கோழியுடன் எழுந்திருந்து கோட்டான் கூவும் போது படுத்திருக்கிறான். கார் கண்டு களிப்பான்! கடும் காற்று கண்டு கிலிகொண்டிருப்பான்! பூச்சி கண்டு பதைசதான்! பூமி உலரக் கண்டு பீதிகொண்டான்! மூங்கூகண்டால் முகம் மலரும், கூவை கண்டால் சரம் செல்லும் கூளை! கதிர் கண்டு ஓர் களிப்பு. அதிலே மணி முற்றுவது கண்டு ஓர் பூரிப்பு. அறுவடையின்போது மகிழ்ச்சி! இவ்வளவுமான பிறகுதான் இன்பம் தரும் பொங்கற் புது நாள் காண முடிகிறது. களிப்பூட்டும் விழா நாளன்று இந்தக் கருத்து மனிதோறும் உலவ வேண்டும். உலவியதா?

வாழ்க்கையிலே இன்பம் பெறுவதையே குறிக்கோளாக மக்கள் கொண்டுள்ளனர். இந்த இன்பத்தைப் பெறுவதற்காக பாடுபட வேண்டும். முறையுடன் திறத்துடன் களைக்காமல், சலிக்காமல் என்பதைப் பொங்கல் விழா தரும் பாடமாகக்கொள்வோம்.

ஆனல் இந்த விழாவிலே ஈழமக்கள் வாழ்விலே இன்பம் பொங்கியதா? உழவர் உவகையோடு பொங்கினர்களா? மனிதோறும் பால் சோறும் கற்கண்டு சுவைப்பும் பொங்கியதா?

ச. திருச்செல்வம்
மட்டக்களப்பு

புற நானூறு

புற நானூறு என்பது சங்கப் புலவர்களால் அருளிச் செய்யப்பட்ட எட்டுத் தொகையுள்ள ஒன்று பாரதம் பாடிய பெருந்தேவனுர் முதல் கோவூர் கிழார் இறுதியாக உள்ள புலவர் பல ராற் பாடப்பெற்ற நானூறு அகவற் பாக்களை உடையது. இதிலுள்ள பாக்கள் எல்லாம் தமிழுக்கே உரிய அகம் புறம் என்னும் பொருளிலக்கண வகையுள் புறப் பொருளிலக்கணத்தின் திணை துறைகளுக்கு இலக்கியமாக உள்ளவை. இந்நூற் செய்யுட்களிலிருந்து பழைய நாளில் தமிழகத் திலிருந்து செங்கோலோச்சிய மூடியுடைய தமிழ் வேந்தராகிய சேர சோழ பாண்டியர்களில் பலருடைய வரலாறுகளையும் பாரி, பேகன், ஆய், அதிகன், காரி, ஓரி, நள்ளி, குமணன் முதலிய வரையாகையினை உடைய வள்ளல்களின் வரலாறுகளையும் புலவர் வீரர் முதலானவர்களின் வரலாறுகளையும் அறிந்துகொள்ளலாகும். மற்றும் அரசரொழுக்கம் ஒற்றுமை அன்பு அருள் துறவு வாய்மை தவம் கற்பு நட்பு முதலிய எண்ணிறந்த அறங்களும் பண்புகளும் இவற்றிடை நன்கு விளங்கிக்கிடக்கின்றன. தமிழரின் வரலாறுகளையும் பழம் பெருமைகளையும் பழக்க வழக்கங்களையும் அறிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ள நூல்கள் எல்லாவற்றிலும் இது முதன்மையானது.

காவலூர்க் குமரன்
கரம்பொன் இழக்குர்
ஊர்காவற்றுறை

முன் செல்வோம்

"உள்ளத்திலே உண்மையொளி
உண்டாகின் வாக்கினிலே ஒளி
யுண்டாகும்" என்றார் பாரதி ஆம்!
நமது உள்ளத்தில் ஊறும் ஆழ்ந்த
தமிழ் உணர்வின் காரணமாக
நமது வாக்கினிலே இனிமை
மூழிழ்க்கும். "வட வேங்கடம்
தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு
நல்லுலகிலே" தோன்றிய நமது
நாவினிலே தமிழே, தமிழே, தமி
ழே முழங்கல் வேண்டும். புதுப்
புது வசந்தம் பூத்துக் குலுங்கும்
புதுமைத் தமிழகத்தின் வசந்த
கால எழில் நலத்தில் கூவித்திரி
யும் பெரு வாழ்வு பெற்ற இளங்
குயில்கள் நாம்.

"தமிழ்" என்ற சொல்லுக்கே
இனிமை என்பதுதானே பொருள்.
வள்ளுவன் வகுத்த வளமார் அற
மும் இளங்கோவின் இன் கவித்
தேனும், சங்கத்துச் சான்றோரின்
நாம் சால் உலகப் பொதுக் கருத்
துக்களும், கடல் மடையெனப்
பாய்ந்தோட செந்தமிழ் வளம்
கொளித்த நாடல்லவ நமது நாடு
நெற்றிக் கண்ணனைச் சீறிய கீரனும், சோழப் பேரரசனைச் சீறிய
கம்பனும், போன்ற கவி வீரர்கள்
நமது இனமல்லவா?

அன்னிய ஆட்சியை எதிர்த்து
ஆக்ரோசத்துடன் பாட்டிசைத்த
பாட்டுக் கொரு புலவன் பாவேந்
தன் பாரதியும், 'வெள்ளம்
போல்" தமிழர்கூட்டம். வீரங்
கொள் கூட்டம் அன்னூர் உள்ளத்
தார் ஒருவரே" என தமிழர்கள்
ஒற்றுமைக்கு உரம் இட்டு வளர்க்
கும் புரட்சிக் கவி பாரதி தாசனும்
தோன்றிய நாடு நமது இன்பத்
தமிழ் நாடல்லவா? கட்ட பொம்
மனும், சிதம்பர பிள்ளையும் போ
ன்று உள்ளுரம் வாய்ந்த நாட்டு
ணர்ச்சிக்கு மிக்க பெரு வீரர்களை
ன்ற தமிழ்த் தாய் அல்லவா
நமது தாய்? தமிழுக்கும், தமிழ்
உரிமைக்கும் வளம் வளங்கிய வள்
ளல்கள் பலர் தோன்றிய நாடு
தமிழ் நாடு. அன்புக்கு, அறத்துக்கு
ஆற்றலுக்கு, தொண்டுக்கு தோழ
மைக்கு, தூயமனதுக்கு உலகில்
பெயர் பெற்ற நாடு நமது தமிழ
கம்.

உலகில் எவரும் பெற முடியாத
பெருமையை தமிழ் மொழியால்
பெற்றிருக்கும் தமிழ் இளைஞர்களே!
உணர்வு பெறுங்கள்! இனப்பற்
றும் மொழிப்பற்றும் உங்கள் உள்
ளங்களிலே வீறிடுக! தெளிவும்
இனிமையும் பெறத் தமிழ் மொழி
யினை ஆழ்ந்து பயிலுங்கள். உல
கில் ஒரு காலத்தில் உன்னத
வாழ்வு வாழ்ந்த நாம் இன்று பல்
வேறு சாதிமதப் பிரிவுகளாகப்
பிரிக்கப்பட்டு வாழ்விழந்து, வள
மிழந்து, வறியராய் கூலிகளாய்,
கோழைகளாய் வாழ்கிறோம்.
இந்த நிலை மாண்டு மீண்டும் புது
வாழ்வு பெற நமது தொன்மை
யான தூய நற் கொள்கை என்று
கருதப்படுகின்ற 'ஒன்றே குலம்
ஒருவனே தேவன்" என்ற தத்துவ
அடிப்படையில் நமது வாழ்க்கை
யை மாற்றி அமைப்போம். காலத்
தால், கருக்தில் தெளிவு பெற்றுத்
தன்னம்பிக்கை உள்ள மக்களாக
வும், உலக மக்களிடையே இன்
றையத்தினம் அரிய சாதனைகளைச்
சாதித்துக் காட்ட முன் செல்
வோம்!

க. யோட்ஜ்
ஊர்காவற்றுறை

குழந்தாய்.....!

"சுந்தரன்"

சின்னஞ்சிறு குழந்தாய்-என்கண்ணே
மின் ஒளிச் சித்திரமே
பொன்னே நிகர் நிறத்தாய்—மழலை
பொங்கு மலர் வாயாய்

வண்ண எழில் மலரோ-உன்முகம்
வான முழு மதியோ
கன்னல் தமிழ் மொழியோ-உன்குரல்
கானக் களஞ்சியமோ?

சின்ன மலர் வாயில்—என்றுமே
புன்னகை பூத்திடுவாய்
வண்ண நிறக் கரத்தால்—எங்களை
வா வென் றழைத்திடுவாய்

சுற்றித் திரியும் வண்டோ—உனது
சின்னக் கரு விழிகள்
சுற்றிக் கறங் கெனவே-அவைகள்
சுழலக் காரணமென்?

தங்கப் பதுமை யல்லோ-உன்னுடல்
தனக் குவியலல் லோ
அன்புக் கடலலவோ—உன்னுளம்
இன்பப் புரியுமல்லோ

வானத்து வில்லினுள்ள-சிறந்த
வர்ண ஜாலங்கள்போல்
மேனி முழுவதுமே-அனந்தம்
வர்ணங்கள் காட்டுகின்றாய்

பொங்குமழ கொளிதான்-உன்னிடம்
புகலடைந்த துண்டோ
அன்பும் இளமையும்தான்-உனையே
அணையக் காரணமென்?

இன்பக் கதைகள் சொல்லக்
—குழந்தாய்
எங்கு நீ கற்று வந்தாய்
சிந்தைக் கினிய சொல்லாய்
—குழந்தாய்

சீரிய வாய் திறந்தே
தாமரைப் பொய்கையிலே
—தோன்றும்
தனி ஒரு மாமலர் போல்
தாரணியிற் பிறந்தாய்—உன்தன்
தாய் செய்த மாதவத்தால்
பொங்குமலைக் கடல் போல்
—என்னுளம்
பூரித் தெழுகிறதே
பிஞ்சு மனிக் கரத்தாய்—உனையே
கொஞ்சித் தழுவிடவே.

மாற்றார் மதிக்கும் தொண்டினல்.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைகளை மறுக்கின்ற முகமில்தானிருக்கிறேன் நான்; ஆனல் அதற்காக நாட்டு விடுதலையை மறைக்கவில்லையே! உத்தமர் வாங்கித்தந்தவிடுதலையை மறைத்துக் கூறுபவன்-ஏமாளி!!

அவர் விரும்பியது இந்த நாட்டுக்கு சுயராஜ்யம் மட்டுமல்ல—அவர் விரும்பிய சுயராஜ்யமல்ல இங்கே இருப்பதும்.

"ஏழை பணக்காரன் கூடாது! மதத்தின் பெயரைச் சொல்லி ஒருவரை யொருவர் பகைத்துக் கொள்வது கூடாது—மோதுதலை உண்டாக்கக் கூடாது — ஜாதி ஆணவம் கூடாது" என்றார் அவர்.

அத்தகைய விடுதலை பூமியைக் காண விரும்பினர்! அதனலேயே ஒருமுறை அவரைக் கேள்விகேட்ட பொழுது கேட்டவருக்கு விளக்கினர்:

"வைணவர் என்றல் யார்? நெற்றியிலே திருநாமமும், நெஞ்சிலே வஞ்சகமும், கழுத்திலே துளசி மாலையும் கருத்திலே கபட எண்ணங்களும் கொண்டவர்களல்ல. உண்மையான உள்ளம் [illegible]

அவர் அன்றூர் நாள் தென்னூட்டுக்கு வந்திருந்த நேரத்தில், நானும் என்னைச் சார்ந்த இயக்கத்தினரும் 'ராமாயண எரிப்பு' விளக்கியில் ஈடுபட்டிருந்தோம். அதைப்பற்றி அவரிடம் குறிப்பிட்டபோது, உத்தமர் குறிப்பிட்ட வார்த்தைகளை தெரிய நண்பர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், அவர் சொன்னர்:-

"நான் கூறும் ராமன் வேறு! ராமாயணத்தில்-வால்மீகியும் கம்பரும் வர்ணித்தும் ராமன் வேறு! என்னுடைய ராமன் சீதையின் புருடனல்ல; தசரதரின் மகனுமல்ல; இராவணனைக் கொன்றவனுமல்ல; அவன் அன்பின் சொருபம்! உண்மையின் உருவம்" என்று விளக்கினர். அப்போது நான் "திராவிட நாடு" இதழில் தீட்டினேன்-"எரியிட்டார் என் செய்தீர்!" என்று.

இதுபோல அவருடைய அடிப்படைக் கொள்கைகளை அலசிப் பார்த்தால்தான் அவருடைய எண்ணங்களுக்கும் எனது இயக்கத்தின் அடிப்படை ஆசைகளுக்கு மிடையே ஒற்றுமைகளிருப்பதைக் கண்டோம். அதனல்தான் காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டதும் எனது இயக்கத் தலைவர் பெரியார் ஒரு அறிக்கையை விடுத்தார்:-

"இந்த நாட்டின் பெயரை இந்தியா என்பதற்குப் பதில் "காந்தி நாடு" என்றழையுங்கள்—"இந்து மதம்"என்பதற்குப் பதில் "காந்தி மதம்" என்று மாற்றுங்கள்—இவ்வண்ணம் செய்தால் ஏற்கத் தயார்!" என்று கூறினர். யார் முன்வந்தார்கள்? இன்றிருக்கும் காங்கிரஸ் தலைவர்களைக் கேட்கிறேன், யார் ஏற்றுக்கொண்டார்கள்?

அதுமட்டுமா? காந்தியார் அடிக்கடி சொன்னர் - "உண்மையே என் கடவுள்!" என்று. இதனை யார் ஏற்றுக் கொண்டார்கள்? இதுபோல அவர் கூறிச்சென்ற பல வழிகளை உங்களால் ஜீரணிக்க முடியவில்லை-ஆனல் மாற்றுக் கட்சியிலிருக்கும் நாங்கள் ஏற்று பணிசெய்துவருகிறோம். அந்த நற் பணியின் பெயரால் மணிமண்டபம் கட்டி, உருவச் சிலையைத் திறந்துவைக்கும் இந்த நேரத்தில் உங்களை நான் கேட்டுக்கொள்வேன்-அவரது பெயரால்.

அரசியல் நாகரீகத்தை வளர்க்க பாடுபடுங்கள்.

ஜாதி பேதம் ஒழியப் போராடுங்கள்.

இல்லாமைக் கொடுமையொழிய ஒத்துழையுங்கள்.

மத நம்பிக்கையால் விளையும் கேடுகளை ஒழித்துக்கட்ட முன் வாருங்கள்.

யார் அடிமை?

மனிதர் யாவரும் ஆண்டவன் படைப்பில் சரிநிகர் சமானமானவர்கள். பிரிக்கவொணுத சில உரிமைகளைக் கடவுள் அவர்களுக்கு அருளியுள்ளார். உயிர் வாழ்தல், சுயேச்சை, இன்புற்றிருக்க நாடுதல் இவை இவற்றிற் சில அம்சங்களாகும்.

மனித வாழ்வில், இவைகள் பறிக்கப்படுமாயின், அவர்கள் மனிதரல்ல, மாக்களாகின்றனரென்றே சொல்லல் வேண்டும். எப்போது ஒருவனிடமிருந்தவை அழிக்கப்படுகின்றதோ? அன்றே அவன் அடிமையாகின்றான். கடவுளுக்கல்ல, கயவர்களுக்கு. வலியவர்கள் தன்னை வஞ்சிப்பரென்று ஏழையைக் கண்டுமிரங்காது செல்கின்றான். தனது நெஞ்சத்தே உதிக்க உண்மையை, உரைப்போமாயின் ஊரார் நம்மைப் பகைப்பார், உமிழ்ந்து பேசுவார். ஏளனம் செய்வரென கோழையாய் சீவிக்கின்றான். நேர்மையைக் கடைப்பிடித்து நீதி வழி செல்லத் தயங்குகின்றான், நெறி தவறுகின்றான்.

மாணவர்களே! வருங்கால அரசியல் தந்தைகளே! பாருங்கள் மனிதனின் கதியை. அடிமை வாழ்வை. சுதந்திர நாட்டில், அதுவும் ஜனநாயக ஆட்சியைக் கொண்ட இந்நாட்டில், நாங்கள் இவ்விதம் அடிமை பூணுவோமா? மாட்டோம். மக்களின் கருத்தே மன்னனது கருத்துமாக்கி வைப்போம். நாம் தமிழர், தமிழ் பேசும் எங்களது தமிழ்த தாயின் மக்கள். "சேய்க்கு நோய்வரின் தாய் மருந்துண்ணுகின்றாள்" அதே போன்று, எமது தாய்க்கு இழுக்கு வருமானல், நாம் தானே அதைப் போக்கித் துயருறச் செய்ய வேண்டும்.

"இச் சகத்தில் எவர்க்கும்
—அடிமை
இல்லை பெற்றே சொல்லடா!"

என்று, நமது "பரமஹம்ஸ தாசன் சொல்லியுரைத்தபடி கோழைத்தன மகன்று நம்மிடையே ஆண்மை யுண்டாக்க வேண்டும். விடுதலை, மேம்பாடு சமாதானம் இவைகளையே விரும்பி ஒரு இயேசு நாதரையும், ஒரு முகம்மது நபியையும், ஒரு காந்தியையும் ஆதர்ச புருடர்களாகக் கொண்டு சாந்தியும், சுயேச்சையும் தரணி யெங்கும் தழைக்கச் செய்யக் கங்கணங் கட்டிக் கொள்வோமாக.

பீ. ஜீ. ஜெயராஜ்
மண்டூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரியாது மகனே!

மகன்:

அப்பா, போகிலே வேலை நிறுத்தத்தின்போது சுரங்கத்தடியில் இருந்த தொழிலாளிகள் மீது பொலீஸ் பல தடவை கண்ணீர் புகைப் பிரயோகம் பாவித்த தல்லவா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

புகையைத் தாங்க முடியாது தொழிலாளிகள் சுருண்டார்கள் என்பதும் அப்புறப்படுத்தப்பட்டார்கள் என்பதும் உண்மை தானே அப்பா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

இந்த அதர்மம் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டதல்லவா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

கேள்வி கேட்டவரைப் பார்த்து 'உமது வாலாட்டத்தை என்னுடைய சுரங்கங்களில் வந்து காட்டிட்டிப்பாரும் – ஒரு கை பார்க்கிறேன்' என்று பிரதமர் சொத்தலாவலே கொக்கரித்தாராமே அப்பா!

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

அப்பா-என்னப்பா இவர், இந்த நாட்டின் பிரதமரா, அல்லது மறியச்சுடை சண்டிப் பேர் வழியா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

பாராளுமன்றத்திலே கேள்வி கேட்பவரைப் பார்த்து இப்படி கொக்கரிப்பது ஜனநாயக தர்மத்திற்கு அப்பாற்பட்டதல்லவா. தனக்கு சுரங்கம் உண்டு என்ற பணத் திமிரா அப்பா இவருக்கு?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

இவரின் நாகரீக 'மாஸ்டர்'களான சிகாகோ கொள்ளைக் கூட்டத்தினர் துப்பாக்கியைநீட்டி அச்சுறுத்துவார்கள். அதேபணியைத் தானே அப்பா இவர் மக்களிடம் காட்டுகிறார்?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

இப்படிப்பட்ட பேர்வழிகள் ஆட்சிப்பீடத்திலல்ல மகொணயில் அல்லது அங்கொடையில் தானே அப்பா 'புக்ககம்' தேடுவது பொருந்தும்?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

★

மகன்:

அரியப் பிரதமர்களின் மகாநாடு ஒன்று கூட்டுவதற்கு இலங்கைப் பிரதமர் அழைப்பு அனுப்பியுள்ளார் அல்லவா அப்பா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

இந்த முயற்சியை நேருஜியும் மனமுவந்து வரவேற்றுள்ளாரே அப்பா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

ஆனால் இந்த செய்திவந்த அதே கணத்தில் அமெரிக்காவிலிருந்து நம்ம பிரதமருக்கு அழைப்பு வர்ததல்லவா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

ஆசியாவிலே, அதுவும் பாக்—அமெரிக்க ராணுவ உடன்பாட்டின் பிறகு அதிருப்தி அதிகரித்துள்ள நிலையில் பிரதமர்கள் கூடுவது அமெரிக்காவுக்கு கலியிடி கொடுத்துள்ளதா அப்பா!

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

எங்கே கூடிவிடுவார் களோ என்ற பயத்தால் திரு கொத்தலாவலையை அழைத்து டாலர் ஆடம் போடவா விரும்புகிறார்கள்!

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

திரு ஐக்ஸன் கொடுத்த 'டோஸ்' போதாதென்று அமெரிக்காவுக்கு அழைத்து ஹாலிவூட் "டோஸ்" கொடுத்தால் "வெற்றி நமதே" என்று நம்புகிறார்களா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

★

மகன்:

புதுவருடத்தன்று புது சமசமாஜத்தின் தலைவர் திரு டாக்டர் ராணுவத்தினர் விருந்தில் கலந்து கொண்டாரல்லவா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

வைபவத்தில் குலுக்கு நடனக் காரியோடு அணைப்பு நடனமாடினாராமே அப்பா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

இரவு பூராவும் ஒயாது "பால்ரூம்" நடனம் ஆடித் தீர்த்தாராமே அப்பா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

என்னப்பா புதுவருடத்தில் இவரது "சமசமாஜம்" "பூர்ஷுவா" மோடியில் மோகம் கொண்டுவிட்டதா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

அப்பா, தொழிலாளி வர்க்கம், தொழிலாளர் கலிபற்றி பேசுபவர், தொழிலாளி மக்களிடை குவிந்துகிடக்கும் கலிகளுக்கும், கலித் திறமைகளுக்குமல்லவா ஆதிக்கம்தர, ஊக்கமளிக்க முன் வந்திருக்கவேண்டும்!

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

தோட்டத் தொழிலாளிகளின் கலிப் பாரம்பர்யம், மட்டக்களப்பிலே, மாத்தறை, கண்டியிலே விவசாயப் பொதுமக்களிடமுள்ள ஒரு கலிஸ்யாவது இவர் முன்னுக்கு கொண்டுவந்துள்ளாரா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

தொழிலாளர்களின் கலிகளை வளர்ப்பதற்குப் பதில் நாறிவரும் பூர்ஷுவா கலியை அந்த மோடியிலேயே கட்டித் தழுவ இவர் ஆரம்பித்தது ஏனப்பா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

தொழிலாளர்களின் சங்க வேலை, நாளாந்த போராட்டம், பிரச்சினை, அரசியல் படிப்பு, அவர்கள் கலை வளர்ப்பு இவற்றையெல்லாம் விட்டுவிட்டு இங்கு ஏனப்பா வரவேண்டும்?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

மகன்:

சமசமாஜத்திலிருந்து ஆரம்பித்து குலுக்கு நடனமாடி முடிவில் ஆடை களையும் (அரசியல்) நடனத்திற்கு வந்துவிடுவாரோ அப்பா?

அப்பா:

எனக்குத் தெரியாது மகனே.

—"தாய்"

60 காசுடன் கப்பலேறிய சிறுவன் நகீப்புடன் காரில் சவாரி செய்தான்

விஸா இன்றி அதிகாரிகளுக்கு டிமிக்கி கொடுத்த சாகசம்

மூன்று சட்டையுடன் மக்காயாத்திரை ஆரம்பித்து முன்னூறு வெள்ளியுடன் நாடு திரும்பினான்

'எப்படியாவது மெக்கா போகவேண்டும்' என்று வீட்டை விட்டு 60 காசுடன் புறப்பட்டான் ஒரு மலாய்க்காரச் சிறுவன். வயது 16 தான். பார்த்தான் சிறுவன் மெக்காவுக்குப் பிரயாணமான யாத்திரீகக் கப்பலில்! உடனே "ஆங்கிங்" என்ற அந்தக் கப்பலில் புறப்பட்டான். எப்படி? பாஸ்போர்ட் இல்லாமல்!

மெக்கா சென்றான். எகிப்தின் 'இரும்பு மனிதரான' ஜெனரல் நகீப்பைக் கண்டு பேசினான். அவர் காரில் சென்றான்! மீண்டும் தன்னூர் வந்து விட்டான்.

சிறுவன் சுங்குருமபையைச் சேர்ந்த, கௌர்ஸராகுவில் உள்ள லெபாய்டின் பின் மகமது ஷரீப்பின் பேரன். சிறுவன் பெயர் யூசுப். இப்போது யூசப் மட்டுமல்ல; சிறுவன் ஹாஜியூசப் ஆவான்.

'மெக்காவுக்கு யாத்திரை செய்யப் பெரிதும் ஆவல் கொண்டிருந்தேன். ஆனால் பாஸ்போட் எப்படிப் பெறுவது என்று எனக்குத் தெரியாது; கையிலும் பணம் இல்லை' என்று சிறுவன் சொன்னான்.

சும்மா 2 சட்டை!

இரண்டு அழுக்குக் கால் சட்டை; ஒரு சட்டை. பையில் 60 காசு இவை சகிதம் புறப்பட்டான் சிறுவன் பின்னுங்கு வார்பை நோக்கி!

கையில் பாஸ் போர்ட்டும் இல்லை. எப்படியோ கப்பலில் ஏறிவிட்டான். 'பிரயாணி' யாக மெக்காவரை செல்லத் தீர்மானித்தான்.

'எனக்குக் கப்பலில் இருந்தவர் சிலரைத் தெரியும். என்னைப்பற்றி அவர்கள் சந்தேகப்பட்டாலும் மௌனமாய் ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டார்கள்' என்று சிறுவன் பாராட்டுதலுடன் கூறினான்.

கப்பலில் உள்ளவர்களுக்குச் செய்த சில்லறை வேலைகளில் கிடைத்த காசைக்கொண்டு சாப்பாட்டுக்கு வழி செய்து கொண்டான்.

விடா முயற்சி

'ஆங்கிங்' கப்பலிலிருந்து மெள்ள நழுவி, மெக்காவுக்குச் சென்ற காரில் தொத்திக் கொண்டான்.

மெக்காவில் பினாங்கிலிருந்து சென்ற ஒருவருடன் தங்கி உண்டு, நாளை கழித்தான்.

வேலை செய்வதையும் விட வில்லை. கையில் 500 வெள்ளி சேர்த்தான்; 200 வெள்ளியை உடை முதலியவைகளுக்குச் செலவிட்டான்.

நகீப்பைக் கண்டேன்

'நான் மெக்காவில் இருந்த போது ஜெனரல் நகீப்பும் அங்கு வருவதாகக் கேள்விப் பட்டேன். அவரை எப்படியாவது பார்த்துவிட வேண்டுமெனத் தீர்மானித்தேன். அவரைக் கண்டேன். அவருடன் பேசினேன். அவர் காரிலும் சென்றேன்' என்று யூசப் கூறினான்.

சிறுவன் நகீப்பிடமும் தன் 'கப்பல் பிரயாணத்தைக்' கூறினான். அவரும், அவருடன் இருந்த அதிகாரிகளும் வயிறு குலுங்கச் சிரித்துப் பையனை வியந்தனர்.

நகீப் அச்சிறுவனுக்கு 40 வெள்ளியையும், தம் படத்தில் நான்கையும் தந்தனுப்பினர். நகீப் சிறுவனை எகிப்துக்கு வரும்படியும் அழைத்தார். எகிப்தில் படிக்கலாம். என்றும் கூப்பிட்டார்.

ஆனால் சுங்குருமையில் இருந்த தம் தாய் தந்தை, பாட்டனரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டுச் சிறுவன் மலாயாவிற்குத் திரும்ப முடிவு கட்டினான். 300 வெள்ளியோடு மலாயா திரும்பினான்.

பினாங்கில் உள்ள யாத்திரைகளின் கமிஷனர் சிறுவனின் மெக்கா யாத்திரையைப்பற்றித் தாம் ஒன்றும் அறியார் என்று கூறிவிட்டார்.

ஹாஜி யூசப்பின் பாட்டனார் தன் பேரனிடமிருந்து மெக்காவிலிருந்து தபால் வரும்வரை நம்பவில்லை என்று கூறினார்.

மதுரையில் 86 மணிநேர சைக்கிள் ஓடும் முயற்சி

86 மணி நேரம் தொடர்ந்து சைக்கிள் ஓட்டும் முயற்சியை பிரபல சைக்கிள் ஓட்டக்காரரான பக்கீர் முகமது டிஸம்பர் 29ந் தேதி காலை 7–15 மணிக்கு ஆரம்பித்தார். சைக்கிள் ஓட்டப் பந்தய விழா நகரசபை கவுன்சிலர் சையது இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. எஸ். எம். முகமது ஷெரீப் விழாவை ஆரம்பித்து வைத்தார். சைக்கிள் ஓட்டும்பக்கீர்முகமதுவெகுஉற்சாகமாகவேகாணப்பட்டார். பத்திரிகை நிருபர்களுக்கெனபிரத்தியேகமாக தனது சாகஸ செயல்களை வெகு திறமையாக செய்து காட்டினார். சைக்கிளில் இருந்துகொண்டே உள் கால்சட்டை உள்பட உடைகள அனைத்தையும் கழற்றிவிட்டு குளித்தார். பிறகு புதிய உடைகளை அணிந்துகொண்டு தலையை வாரிக்கொண்டார்.

நான் இந்த சைக்கிள் பந்தயம் முடியும்வரை விசேஷமான ஆகாரங்கள் எதையும் சாப்பிடுவதில்லை. தொடர்ந்தாற்போல் இரவில் எப்படி விழித்திருக்கிறேன் என்கிறீர்கள். அதற்கு நான் இரவு நேரங்களில் தொடர்ந்து விழித்து பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அடுத்து இதேமாதிரி பந்தயத்தில் நான் கலந்து கொண்டால் வேகமாக சைக்கிளைவிட முயற்சிப்பேன் என்று கூறினார்.

பந்தயத்தைகாண ஏராளமான மக்கள் வந்து போகின்றனர். இசைத் தட்டுகள் வைப்பதன் மூலம் பந்தயத்தில் கலந்துள்ள பக்கீர் முகமதுவுக்கு உற்சாகமளிக்கப்பட்டது.

லண்டனில் சமீபத்தில் தோல் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. தோலால் செய்யப்பட்ட உடையை ஒரு நாரியணி அணிந்துள்ளார். இதை கை உறைகள்போல கத்தரித்து செய்து பார்க்கலாம், இதைப் பார்த்தால் ஒருவருக்கும் ஆசை வராது.

பாகிஸ்தான் செய்திகள்

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை நியமித்த சட்ட தயாரிப்பு கமிட்டி சமீபத்தில் கூடியது. அரசியல் சபை ஏற்கனவே வகுத்த கொள்கையின் அடிப்படையில் பாகிஸ்தானின் நகல் சட்ட திட்டத்தை இந்த கமிட்டி தயாரித்துள்ளது. பலத்த விவாதத்தின்பின் இது ஏற்றுக் கொள்ளப்படும்.

***

1954 முதல் மாதங்களில் ஆபிரிக்காவுக்கு 50 லட்சம் சணல் பைகள் அனுப்ப பாகிஸ்தான் அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. இதுசம்பந்தமாக ஆதம்ஜி சணல் ஆலை ஆபிரிக்க அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

***

எகிப்தில் சணல் ஆலைகள் ஸ்தாபிப்பதற்கு உதவும்படி எகிப்து ஆட்சி பாகிஸ்தானைக் கேட்டுக்கொண்டுள்ளது. மூலப் பொருட்கள் கொடுப்பதன் மூலமும், எகிப்து ஆலைகளுக்கு சணல் அனுப்புவதன் மூலமும் உதவலாம் என்று கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தேயிலை வர்த்தக தூதுகோஷ்டி மத்திய ஆசிய நாடுகளில் விஜயம் செய்துகொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

***

டிஸம்பர் 7ந் தேதியிலிருந்து ஆளுக்கு ஒரு முத்தல் சீனியும், உணவு பொருட்களும் நத்தார் "கோட்டாவாக" கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

***

1953ல் பாகிஸ்தானில் பருத்தி உற்பத்தி இரட்டித்துள்ளதென்றும், அதேபோல துணி உற்பத்தியும் அதிகரித்துள்ளதென்றும் அறிவிக்கப்பட்டது. நாட்டின் தேவையில் பாதிப் பகுதியை இந்த உற்பத்தி சமாளிக்கும். இந்த அதிகரிப்புவீதம் தொடர்ந்தால் 1954 மத்திய பகுதியில் பாகிஸ்தான் கயபோஷணை நாடாக மாறிவிடலாம் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

***

"எந்த சிறுபான்மை மக்களும் தம் ஆத்மீக, பொருளாதார, அரசியல் தேவைகளைப் பொறுத்த மட்டில் கஷ்டப்பட நாம் விடப்போவதில்லை. நியாயமான எந்த உதவியையும் செய்ய பின்வாங்கோம்" என்று கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் ஜனூப் சவுத்திரி கலிகுலாம், புத்த ஆலயத்திற்கு விஜயம் செய்திருந்தபோது கூறினார்.

பௌத்தர்கள் ஸ்தாபனமாக திரண்டு தமது உரிமைகளைப் பெற முன்வரவேண்டும் என்று தொடர்ந்து கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைலன்

கொழும்பு

நம்பியார், பி. எஸ். சரோஜா,
முத்துலக்ஷ்மி, சாரங்கபாணி

நடித்த

கல்யாணி

இத்துடன் எலிசபத் மகாராணியின் முடிசூட்டுவிழா காட்சிகள் அத்தனையும் உங்களை பிரமிக்கக்கூடிய வித, விதமான நிகழ்ச்சிகளுடன் காண்பிக்கப்படும்

காமினி

கொழும்பு

பிரேம்ஜயந், லீலா, கிளாரிஸ்,
பேபி சரோஜா

முதலியோர் திறம்பட நடித்த

"விசித்திர மருமகள்"

(சிங்களம்)

சினிமாஸ் ஸ்தாபனத்தாரின் விஜய வருடத்திய பரிசு!

கிங்ஸ்லி கொழும்பு — **சபையர்** வெள்ளவத்தை — **வெம்பிளி** கண்டி — **வெலிங்டன்** திருகோணமலை

நடராஜா நீர்கொழும்பு — **வெலிங்டன்** யாழ்ப்பாணம் — **மோடர்ன்** பதுளை — **தீவொளி** நுவரெலியா — **ஜெமினி** அப்கொட்

தினசரி கிங்ஸ்லி தியேட்டரிலும் சபையரிலும் பகல் 2 மணிக்கு மட்னி காட்சி காண்பிக்கப்படும்.

அபூர்வமான கதை, அற்புதமான பாத்திரங்கள், ஆச்சரியமூட்டும் கதா நிகழ்ச்சிகள், நகைச்சுவை மிகுந்த ஹாஸ்யம், கண்களைக் கவரும் ஒளிப் பதிவு, காதிற்கமுதூட்டும் கானங்கள், பிரமிப்பூட்டும் காட்சிகள், நாவாரத் துதிக்க நடிகர்களின் நன்னடிப்பு.

மூன்று வருட உழைப்பிலும், இருபத்தைந்து லட்சம் ரூபாய் செலவிலும் தயாரானது.

ராமராவ், ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி, ரங்கராவ், ரேலங்கி நடித்த

சந்திரஹாரம்

CEYLON.
21 JAN 1954
Office of the Registrar of
Books & Newspapers,

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் எவிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட் டட் ஸ்தாபனத்தாரின் சார்பில் தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது 1954 ஜனவரி 17ந் திகதிபிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org